வெள்ளி விழாக் காணும் இவ்வேளையில், இம்மன்றம் இந்துக்களுக்கும் ஏனைய சமய அங்கத்தவர்களுக்கும், சமயத் தலைவர்களுக்கும் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்தி நல்லுறவை வளர்ப்பதில் பெரும்பணி ஆற்றியுள்ளமை குறித்து பெருமை மிகப்படலாம். இது எம்மன்றத்தின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகும்.

***க. செல்லமுத்து,***
கௌரவ பொதுச் செயலாளர்.

மத்திய மாகாண இந்து மாமன்றம்,
348, பேராதனை வீதி,
கண்டி.

*ஒரு இந்து என்பவன் தன் தேசத்து மக்களைத் தனது சகோதர, சகோதரிகள் போல் நேசிப்பதோடு இல்லாமல், மனித இனத்தையே தனது எல்லையில்லாத அன்புடன் நேசிக்கின்றான். அவனுக்கு தேசத்து ஓர் பிடி மண் சொந்தம், உலகம் ஒரு கர்ம பூமி.*

*– சுவாமி விவேகானந்தர் –*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# DOLLAR TRADERS

Metal Merchants and Dealers in Scrap

**50/3 Yatinuwara Patumawatha,**
**KANDY.**
**© 08-32629**

*With Best Compliments From:*

# Ranjitha Traders

**Importers General Merchants Wholesale & Retail Dealers in Provisions**

180, COLOMBO STREET,
**KANDY**
**© 08-32350**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CENTRAL PROVINCE HINDU ASSOCIATION
# REPORT OF THE HONY. GENERAL SECRETARY

I had the privilege of being the founder Hony. Secretary of the Ther Thiruvizha Sabai from 1963 and subsequently the founder Hony. General Secretary of the Central Province Hindu Association which became the successor to the Sabai in 1970. I thus enjoyed the honour of continuous service to our community at large from 1963. I state this not so much with pride as with great humility and more so to express my heartfelt thanks to all those who have reposed so much confidence in me, supported and assisted me in shouldering this onerous burden cast on me. Therefore, it is with a sense of deep obligation that I re - dedicate myself for service of our community at large.

It is with a sense of achievement and fulfillment I give below a summary of our achievements not only from June 1970 but from the very inception of our Odyssey.

The origin of the Central Province Hindu Association could be traced to the establishment, in 1963, of the Ther Thiruvizha Sabai (Chariot Festival Committee) of the Sri Selva Vinayagar Temple to Conduct the Annual Ther Festival of the above Temple in Kandy, under the chairmanship of Mr. A. Duraisamy Pillai (presently a J. P.). The above Sabai also conducted the annual procession of the Hindus on the First night of the Randoli Perehera to pay homage to the Sacred Tooth Relic before the commencement of the Perehera. This was done with the consent of the Diyawadana Nilame the late H. L. Ratwatte Dissawa and the Blessings of the Venerable Mahanayake Theros of the Malwatte and the Asgiriya Chapters.

In 1970 the C P H A was inaugurated as a formally constituted Association with its office at No. 90, Colombo Street, Kandy, to continue the above activities and also, in addition, to represent the Hindus of the Central Province and to serve their needs, specially in establishing a Cultural centre hall.

In 1974 a plot of land was purchased along Peradeniya Road; a Trusteeship was established; a plan of the hall was drawn up to establish the Hindu Cultural Centre. The same year the project was recognized as an Approved Charity and the foundation laid and construction work commenced in building the hall.

In 1977 & 1978 our Association was honoured by the Government when the then Hon. Minister for Cultural Affairs appointed as many as three of our members to the Hindu Advisory Board.

In June 1983 the Hindu Cultural Centre was declared open by its President Mr. A. Duraisamy Pillai. The administrative functions of the Association was moved to this premise since then. At present classes in Bharatha Nattyam, Kathakali and Kandyan Dance; classes in music (vocal and instrumental) and devotional songs are conducted. A small library of Hindu religious books has been established.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழா கொண்டாடும்
மத்திய மாகாண இந்து மாமன்றத்திற்கு
எங்கள் நல் வாழ்த்துக்கள்.

எஸ். சுப்ரமணியம் அன் கோ

மொத்த, சில்லறை ஜவுளி வியாபாரிகள்

68, யட்டிநுவர வீதி
கண்டி.

© 08-22431



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The 9th day of Navarathri Festival (Saraswathy Poojah) is conducted annually by the Association at the Centre, with a view to encouraging the young artists of all communities to improve their performance. Their performances are a source of delight to the parents and other well wishers.

Besides the above, the hall is much sought after for purposes of conducting weddings, receptions, dances and drama, meetings and seminars as well. These facilities are made available to all Sri Lankans.

When ever a religious dignitary visits the Island we take this opportunity to invite him to address and guide the faithful. The hall also serves the needs of all as a place of rest when staying in Kandy or passing through Kandy.

Additional structures are being continuously added to the building to increase the facilities to fulfil its objectives.

This Association, in this year of its Silver Jubilee Celebrations, could claim with pride that it has succeeded in establishing and maintaining goodwill and understanding between the Hindus and the members and the clergy of other faiths in this part of Sri Lanka - as promoting goodwill and understanding among them is one of the fundamental objectives of our Association.

*K. Sellamuthu*
Hony. Secretary

Central Province Hindu Association,
Peradeniya Road,
Kandy.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:

# ALLIED STEEL COMPANY

**General Hardware Merchants**

**126, Barber Street,**
**(Maha Vidyalaya Mawatha)**
**COLOMBO 13**

☎ 01- 324887




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய மாகாண இந்து மாமன்றம், கண்டி.

### நோக்கங்கள்!

(அ) இந்து சமயத்தவரிடையே, அச்சமய நெறிமுறைகளைப் பரப்புதல்.

(ஆ) இந்து சமயத்தவர்களை தமது சமய வழிபாடுகளிலும், திருப்பணிகளிலும், கலாசார நிகழ்ச்சிகளிலும் ஈடுபடவைக்க உற்சாகப்படுத்தல்.

(இ) மத்திய மாகாணத்தில் வாழும் இந்துக்களை உள்ளூர் நிலையிலும், தேசிய நிலையிலும் பிரதிநிதித்துவப் படுத்தல்.

(ஈ) இந்து சமயத்தவர்களுக்கும் ஏனைய சமயத்தவர்களுக்குமிடையே நல்லுறவை வளர்த்தல்.

(உ) கண்டியில் மன்றத்தின் இணைச் சங்கமாக "கண்டி இந்து வாலிபர் சங்கம்" எனும் அமைப்பினை ஏற்படுத்தி:

- (i) வாலிபர்களிடையே தனி ஒழுங்கையும், கூட்டு ஒழுங்கையும் ஏற்படுத்த உதவுதல்.
- (ii) வாலிபர்களிடம், சமூகத்தின்பால் அவர்களுக்கு இருக்கவேண்டிய கடமைகளையும் பொறுப்புகளையும் உணரச்செய்து சமூகசேவையில் அவர்கள் ஈடுபட உற்சாகமளித்தல்.
- (iii) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மன்றத்தின் ஈ, ஊ (i), எ நோக்கங்கள் நிறைவேற வாலிபர்களின் சேவையைப் பெறல்.

(ஊ) கண்டியில் இந்து கலாசார நிலையமொன்றினை அமைத்து நிர்வகித்தல். அதன் வாயிலாக:

- (i) கண்டிக்கு வரும் அனைத்து வகை, இன யாத்திரிகர்களின் விஷேடமாக உற்சவ காலங்களில் தேவைகளை நிறைவேற்றல்.
- (ii) கலாசார நிலைய மண்டபத்தை கூட்டங்கள், வைபவங்கள், இன்ன பிற நிகழ்ச்சிகளுக்கும வாடகைக்கு விடுவதன் மூலம் நிலையான வருமானத்திற்கு வழிசெய்து நிலையத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்தல்.
- (iii) மன்ற சட்டவிதிகளுக்கு உட்பட்ட வகையிலும் மன்றத்தின் தேவைகளின் நிமித்தமும், கண்டி வாலிபர் சங்கம் நடவடிக்கைகளை ஒழுங்கு செய்ய வாய்ப்பளித்தல்.
- (iv) மன்ற சட்டவிதி (ஆ), (ஈ) நிறைவேற வாலிபர் சங்கத்திற்கு மேலும் வாய்ப்புகளை ஏற்படுத்தல்.

(எ) தேவையேற்படும் சமயங்களில் கதியற்ற இந்துக்களின் அல்லல்களைத் தீர்க்கவும், வசதியற்ற இந்து மாணவ மாணவிகளுக்கு உயர்கல்வி புலமைப்பரிசு வழங்கவும் உதவி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மாகாண இந்து மாமன்றத்தின்
சேவைகள் மேலும் வளர
எமது நல் வாழ்த்துக்கள்

✳
✳
✳
✳
✳
✳
✳
✳
✳

**DEEPA JEWELLERS**

**22 Kt. Sovereign Gold Jewellery**

**No. 35 A, YATINUWARA VEEDIYA**
**KANDY**
**☎ 08-32532**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Central Province Hindu Association, Kandy

## AIMS AND OBJECTS:

1. To promote and cultivate the knowledge, values and way of life of Hinduism among its adherents;
2. To ncourage the Hindus to take part in the religious and cultural activities;
3. To represent the Hindus of the Central Province at the National and local levels;
4. To work for better understanding between the Hindus and the other religious communities of the area;
5. To help establish a Young Mens Hindu Association in Kandy hereinafter referred to as the"Kandy Young Mens Hindu Association" or the "KYMHA" as an affiliated institution of this Association:
   (a) to instill in the young men the values of self discipline and of group discipline;
   (b) to impress upon the young men of their duties and responsibilities towards society and to encourage and to help them to take an active part in social service work and;
   (c) to harness their services to achieve the aims of the sub clauses (4), (6-a) and (7) of this Association.
6. To establish, maintain and run a Hindu Cultural Centre, hereinafter referred to as the Centre:
   (a) to cater to the needs of pilgrims of all classes and creeds who visit Kandy, especially during the festive seasons;
   (b) to ensure a regular source of income to meet the needs of the Centre and its activities by way of hiring out of the hall of the Centre for meetings, functions, performances, etc.,
   (c) to provide, subject to the rules and regulations and the needs of this Association,facilities to the KYMHA to organize their activities and;
   (d) to provide further facilities for the attainment of the aims of sub clauses (2) & (4) of this association;
7. To aid unfortunate Hindus in times of need and to help poor Hindu children by providing scholarship for higher education.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழாக் காணப்போகும்
மத்திய மாகாண இந்து மாமன்றம்
ஆற்றிய பணிகளுக்கும், ஆற்றவேண்டிய
பணிகளுக்கும்
எமது நல்லாசிகள்

# ஆராதனாஸ்

**110**, கொழும்பு வீதி,

கண்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய மாகாண இந்து மாமன்றம்

## 1995 – 1996 வருடத்திய உத்தியோகஸ்தர்

### தலைவர்

திரு அ. துரைசாமிபிள்ளை ஜே. பி.

### உப தலைவர்கள்

திரு சு. மு. துரைசாமி ஜே. பி.
திரு பழ. ஆண்டியப்பன்
திரு ந. வெள்ளாந்துரை
திரு வை. இராமசாமி
திரு நாகலிங்கம் இரட்ணசபாபதி ஜே பி.

### கௌரவ பொதுச் செயலாளர்

திரு க. செல்லமுத்து

### கௌரவ பொதுப் பொருளாளர்

திரு வை. மாரிமுத்து

### கௌரவ உப பொதுச் செயலாளர்கள்

திரு பழ. தங்கவேல் ஜே. பி.
திரு மு. இராமநாதன்

### கௌரவ உப பொதுப் பொருளாளர்கள்

திரு மு. இராமசாமி ஜே. பி.
திரு சி. கணபதி

### 1995 – 1996ம் வருடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட நிர்வாகக்குழு அங்கத்தவர்கள்

திரு க. ப. சிவம்
திரு அ. க. சுகுமார்
திரு பொ. இராஜு
திரு கு. சண்முகராஜா
திரு அ. கணேசன்

### கௌரவ கணக்குப் பரிசோதகர்கள்

திரு அ. க. வடிவேல் ஜே. பி.
திரு சி. சிவலிங்கம்

### தர்மகர்த்தாக்கள்

திரு அ. துரைசாமிபிள்ளை ஜே. பி.
திரு க. செல்லமுத்து
திரு வை. மாரிமுத்து
திரு சு. மு. துரைசாமி ஜே. பி.
திரு பழ. ஆண்டியப்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழாக் காணும்
இந்து மாமன்றத்திற்கு
எமது உளமார்ந்த வாழ்த்துக்கள்

நந்தன் அச்சகம்
கண்டி.

*With Best Compliments From:*

CENTRAL TRADERS
General Merchants & Commission Agents

134, COLOMBO STREET,
KANDY.
SRI LANKA.
✆ 08 - 24523



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## உப தலைவர்கள்



திரு சு. மு. துரைசாமி ஜே. பி.



திரு பழ. ஆண்டியப்பன்



திரு ந. வெள்ளாந்துரை



திரு வை. இராமசாமி




திரு நாகலிங்கம்
இரட்ணசபாபதி ஜே. பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவ உப பொதுச் செயலாளர்கள்



திரு பழ. தங்கவேல் ஜே. பி.



திரு மு. இராமநாதன்

## கௌரவ உப பொதுப் பொருளாளர்கள்



திரு மு. இராமசாமி ஜே. பி.



திரு சி. கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய மாகாண இந்து மாமன்றம்
## 1995–1996ம் வருடத்திய பொது நிர்வாகக்குழு அங்கத்தவர்கள்

**இடமிருந்து வலம்: (அமர்வு)** திரு அ. க. வடிவேல், திரு பழ. ஆண்டியப்பன், திரு மு. இராமசாமி ஜே. பி., திரு வை. இராமசாமி, திரு நாகலிங்கம் இரட்ணசபாபதி ஜே. பி., திரு க. செல்லமுத்து (கௌரவ பொதுச் செயலாளர்), திரு அ. துரைசாமிபிள்ளை ஜே. பி. (தலைவர்), திரு வை. மாரிமுத்து (கௌரவ பொதுப் பொருளாளர்), திரு சு. மு. துரைசாமி ஜே. பி., திரு ந. வெள்ளாந்துரை, திரு பழ. தங்கவேல் ஜே. பி., திரு செ. நடராஜா ஜே. பி.

**2ம் வரிசை:** திரு ப. பழனியப்பன், திரு சு. இராமசாமி, திரு கு. சண்முகராஜா, திரு பொ. இராஜு, திரு பெ. செல்லையா ஜே. பி., திரு அ. ச. பழனிசாமி, திரு லெ. பாலகிருஷ்ணன், திரு பெ. சதாசிவம், திரு மு. பெரியசாமி, திரு க. கா. மதியாபரணம், திரு பெ. சுந்தரம்பிள்ளை, திரு வை. கனகராஜ், திரு து. சிவசுப்ரமணியம் ஜே. பி., திரு கரு. வேலு. இராமசாமி, திரு ப. பாலசுப்ரமணியம்

**3ம் வரிசை:** திரு செ. பரமசிவம், திரு மு. சுந்தரமூர்த்தி, திரு ப. செல்வராஜ், திரு மு. அருணாசலம், திரு அ. க. சுகுமார், திரு பி. சிவஞானம், திரு மூ. பனையடியான் ஜே. பி., திரு து. நடராஜா ஜே. பி., திரு பொ. இராஜநாதன், திரு பெ. தங்கவேல், திரு இரா. பெரியசாமி, திரு பெ. கந்தசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1995 – 1996ம் வருடத்திற்கு நியமிக்கப்பட்ட உப குழுக்கள்

அங்கத்துவ விண்ணப்ப பரிசீலனை உபகுழு

திரு க. செல்லமுத்து (முதல்வர்)
திரு மு. இராமநாதன் (செயலாளர்)
திரு வை. மாரிமுத்து
திரு நாகலிங்கம் இரட்ணசபாபதி ஜே. பி.
திரு வை. இராமசாமி

வரவேற்பு உபகுழு

திரு சு. மு. துரைசாமி ஜே. பி. (முதல்வர்)
திரு மு. இராமசாமி ஜே. பி. (செயலாளர்)
திரு சி. கணபதி
திரு அ. சு. பழனிசாமி
திரு செ. பரமசிவம்
திரு மு. இராதாகிருஷ்ணன்
திரு து. சிவசுப்ரமணியம் ஜே. பி.
திரு பெ. கந்தசாமி

இந்து சமய வைபவ உபகுழு

திரு பெ. செல்லையா ஜே. பி. (முதல்வர்)
திரு மூ. பனையடியான் ஜே. பி. (செயலாளர்)
திரு மு. அருணாசலம்
திரு இரா. பெரியசாமி
திரு து. நடராஜா ஜே. பி.
திரு அ. கணேசன்
திரு ப. பாலசுப்ரமணியம்

கல்வி, கலை, கலாசார உபகுழு

திரு பழ. தங்கவேல் ஜே. பி. (முதல்வர்)
திரு செ. நடராஜா ஜே. பி. (செயலாளர்)
திரு கு. சண்முகராஜா
திரு கரு. வேலு. இராமசாமி
திரு ப. செல்வராஜ்
திரு ந. முத்தையாபிள்ளை
திரு சு. ராமசாமி

பிரசுரம் தகவல் உபகுழு

திரு பொ. இராஜநாதன் (முதல்வர்)
திரு க. ப. சிவம் (செயலாளர்)
திரு அ. க. சுகுமார்
திரு மு. சுந்தரமூர்த்தி
திரு பெ. சதாசிவம்
திரு பொ. இராஜு

இந்து வாலிபர் சங்க மேற்பார்வை உபகுழு

திரு பழ. ஆண்டியப்பன் (முதல்வர்)
திரு வை. கனகராஜ் (செயலாளர்)
திரு க. செல்லமுத்து
திரு மு. பெரியசாமி
திரு பெ. தங்கவேல்
திரு பெ. இராமநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மாகாண இந்து மாமன்றத்தின்
நற்பணிகளுக்கும் அதன் சாதனையான
இந்து கலாசார நிலையத்திற்கும்
எமது நல்வாழ்த்துக்கள்

நியூ கண்டி எக் சென்ட்டர்
227, கொழும்பு வீதி,
கண்டி.

NEW KANDY EGG CENTRE

*Authorised Dealers for:*
*Ceylon Grain Elevators Ltd.,*

GENERAL MERCHANTS, DEALERS IN FORAGE, EGGS & CHICKEN

227, Colombo Street,
Kandy.

☎ 08-22494, 32102 FAX No :32102



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி விழா ஏற்பாட்டு விஷேட உபகுழுக்கள்

### பிரதம விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள் ஏனைய பிரமுகர்கள் சந்திப்பு, ஏற்பாடு

திரு அ. துரைசாமிபிள்ளை ஜே. பி. (முதல்வர்)
திரு க. செல்லமுத்து
திரு வை. மாரிமுத்து

### கவியரங்கம், பட்டி மன்றம் ஏற்பாடு

திரு பழ. தங்கவேல் ஜே. பி. (முதல்வர்)
திரு க. ப. சிவம்
திரு க. கா. மதியாபரணம்
திரு கரு. வேலு. இராமசாமி
திரு வை. கனகராஜ்

### கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு

திரு செ. நடராஜா ஜே. பி. (முதல்வர்)
திரு வை. கனகராஜ்
திரு பெ. செல்லையா ஜே. பி.
திரு பெ. சதாசிவம்
திரு து. நடராஜா ஜே. பி.

### மலர் தயாரிப்பு

திரு செ. நடராஜா ஜே. பி. (ஆசிரியர்)
திரு பொ. இராஜநாதன் (உதவி இணை ஆசிரியர்)
திரு கரு. வேலு. இராமசாமி (உதவி இணை ஆசிரியர்)

### மலர் நிதி வசூல்

திரு வை. மாரிமுத்து (முதல்வர்)
திரு பழ. ஆண்டியப்பன்
திரு மு. இராமநாதன்
திரு பெ. சதாசிவம்
திரு க. செல்லமுத்து
திரு மு. இராமசாமி ஜே. பி.
திரு பெ. கந்தசாமி
திரு வை. கனகராஜ்
திரு ப. செல்வராஜ்

### மலர் படங்கள் தெரிவும், சேகரிப்பும்

திரு மு. இராமநாதன் (முதல்வர்)
திரு மு. இராமசாமி ஜே. பி.
திரு சி. கணபதி

### விருந்துபசாரம்

திரு வை. மாரிமுத்து (முதல்வர்)
திரு பெ. செல்லையா ஜே. பி.
திரு மூ. பனையடியான் ஜே. பி.
திரு பெ. தங்கவேல்
திரு சி. கணபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சி தலை நகரில்
மங்கா புகழ் படைத்த
மத்திய மாகாண இந்து மாமன்றத்திற்கும்
இந்து கலாசார நிலையத்திற்கும்
எமது இதய பூர்வமான நல்வாழ்த்துக்கள்

# மங்களா ஜுவல்லர்ஸ்

**68, யட்டிநுவர வீதி,**

**கண்டி.**

**✆ 08-34064**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழா சிறப்பு மலர்



திரு செ. நடராஜா ஜே. பி.
(ஆசிரியர்)



திரு பொ. இராஜநாதன்



திரு கரு. வேலு. இராமசாமி

(உதவி இணை ஆசிரியர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மாகாண இந்து மாமன்றம்

வெள்ளி விழா சிறப்பு மலர் நிதி வசூல் உபகுழு

இடமிருந்து வலம்: திரு மு. இராமசாமி ஜே. பி., திரு வை. மாரிமுத்து (முதல்வர்), திரு க. செல்லமுத்து, திரு பழ. ஆண்டியப்பன்
(அமர்வு) திரு பெ. கந்தசாமி

2ம் வரிசை: திரு ப. செல்வராஜ், திரு பெ. சதாசிவம், திரு மு. இராமநாதன், திரு வை. கனகராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மத்திய மாகாண இந்து மாமன்ற நுண் கலை நிலைய ஆசிரியர்கள்



இடமிருந்து வலம்: திருமதி வசந்தமலர் செல்வவிக்னேஷ்வரன் (கர்நாடக சங்கீதம்), திருமதி வைஜயந்திமாலா செல்வரட்ணம் (பரதம்), திரு நடராஜா ஜெயஸ்ரீபவான் (மிருதங்கம்), திருமதி விமலா சர்குணம் (பண்ணிசை), செல்வி ருவீனா றோனி டொமினிக் (கதகளி)



திருமதி தம்மிக்கா ஜயவர்தன
(கண்டிய, கீழைத்தேய, சப்ரகமுவ நடன ஆசிரியை)



திரு சி. மனோகரன்
(நூலக பொறுப்பாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பார்வையில் மத்திய மாகாண இந்து மாமன்றம்

- பி. பி. தேவராஜ் -
(கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)

பல இன, பல சமய மக்கள் வாழ்கின்ற ஒரு நாட்டின் ஒரு இனத்தைச் சார்ந்த மக்கள் தங்களுடைய மொழியையும், பண்பாட்டையும் பேணி மேம்படுத்திக் கொள்வதற்கு அறிவுசார்ந்த சிந்தனையும், சிறந்த செயல்பாடும் அவசியமாகும். தங்களுடைய பாரம்பரியத்தை பாதுகாத்துக் கொள்வதில் உறுதியும், அதே நேரத்தில் பல இனங்களுக்கிடையே பரஸ்பர நல்லுறவை வளர்த்துக் கொள்ளுவதற்கான சீரிய அணுகுமுறையும் பின்பற்றப்பட வேண்டும்.

இயற்கை எழில் தவழும் கண்டி மாநகர், ஆட்சிபீடமாக விளங்கிய பெருமை பெற்றது. கண்டி கடைசி நாயக்க மன்னர்கள் அரசோச்சிய கண்டியிலே பௌத்தமும், இந்து சமயமும் இணைந்த ஒரு கலாசார பண்பினை உருவாக்கி வைத்தார்கள். பௌத்தமும் பௌத்த கலாசாரமும் பொழிவுடன் வளர்ந்த அதே நேரத்தில் இந்து சமய வழிபாடுகளும், கலாசார அம்சங்களும் பௌத்தர்கள் மத்தியில் இழையோடி நிற்கின்றன.

கண்டி தலதா மாளிகை பௌத்த மக்களின் தலையாய வழிபாட்டுத் தலமாக திகழ்கிறது. அதே சமயத்தில் தலதாமாளிகாவோடு இணைந்து நிற்கும் ஆலயங்களில் இன்று தெய்வங்கள் வணங்கப்படுகின்றன. கயவாகு மன்னன் இலங்கைக்கு கொண்டு வந்து சேர்த்த கண்ணகித் தெய்வத்திற்கு தலதாமாளிகாவுக்கு வெகு அண்மையில் பத்தினி தேவாலயம் எழுப்பப்பட்டுள்ளது.

இவ்விதமான பொதுத்தன்மை இங்கு காணப்படும் அதே வேளையில் நான்கு சமயத்தவரும் தத்தம் சமய வழிபாடுகளையும், பண்பாடுகளையும் தனித்தனியே பேணிப் பாதுகாக்கும் ஆரோக்கியமான சூழ்நிலை இங்கு நிலவுவது கண்கூடு.

1970 ஆம் ஆண்டு திரு. அ. துரைசாமிபிள்ளை ஜே. பி. அவர்களின் தலைமையில் தாபிக்கப்பட்ட மத்திய மாகாண இந்து மாமன்றம் கடந்த கால் நூற்றாண்டிலே இந்த பாரம்பரியத்தை செயல்படுத்துவதில் வெற்றி கண்டிருக்கிறது.

மத்திய மாகாண இந்து மாமன்றம், தலதா மாளிகையின் அறங்காவலரான தியவதன நிலமேயுடன் மிக நெருங்கிய நல்லுறவை வளர்த்து வந்துள்ளது. ரந்தோலி பெரஹரா ஊர்வலத்தில் கலந்து கொண்டு பெரஹராவுக்கு பங்களிப்புச் செய்வதில் முன்னணியில் திகழ்கின்றது.

1974 ஆம் ஆண்டு பேராதனை வீதியில் எழுப்பப்பட்ட இந்து மாமன்ற மண்டபத்தின் பெயர்ப் பலகையை திரைநீக்கஞ் செய்ய அன்றைய தியவதன நிலமே திரு. எஸ். பி. உடுறாவன வருகை புரிந்தார்.

இந்து மாமன்றம் நிகழ்த்திய பல விஷேட நிகழ்ச்சிகளிலும், பௌத்த, ஏனைய மதப் பிரமுகர்கள் கலந்து கொள்ளும் வாய்ப்பை மன்றம் ஏற்பாடு செய்திருக்கின்றது. மத்திய மாகாண இந்து மாமன்றம் ஏனைய இன மக்களுடன் நல்லுணர்வைப் பேணும் பொழுதே தனித்துவமாக இந்து சமய மேம்பாட்டிற்கு உறுதுணையான கலை நிகழ்ச்சிகள், சமய நிகழ்ச்சிகள், சமயப் பேருரைகள், சிவராத்திரி, நவராத்திரி போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது. அத்துடன் இங்கு இசை, நடனப் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# OMEGA TRADERS

**No. 62A, Old Moor Street,**
**COLOMBO-12.**
**Sri Lanka.**

**Dial:432350, 341747** **Fax: 94 -1- 434905**

**Res: 587402, 071 34867**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி மாநகரில் இந்து மாமன்ற மண்டபம், நூலகம், மற்றும் பல்வேறு வசதிகளைக் கொண்டு அமைந்துள்ள மூன்று அடுக்கு மாடிக் கட்டிடம் மலையகத்திற்கு பெருமை சேர்க்கும், ஒரு நிலையமாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

1989 ஆம் ஆண்டு இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சராக நியமனம் பெற்றேன். 1990 இறுதிப் பகுதியிலும், 1991ஆம் ஆண்டு ஆரம்ப காலத்தில் இருந்தும் இந்து மாமன்றத்துடன் நெருங்கிய பரிச்சயம் எனக்கு ஏற்பட்டது. இதன் விளைவாக இந்து மாமன்றத்துடன் இணைந்து எத்தனையோ இசை, கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

1991 ஆம் ஆண்டு கண்டியில் நடைபெற்ற தேசிய சாகித்திய விழாவின் போது மன்றத்தார் ஆற்றிய பணி என்றும் என் மனதில் நிலைத்திருக்கின்றது. மலையகத்தில் புதிய தமிழ் எழுச்சிக்கு கால்கோளாக அமைந்த இந்த விழாவில் மன்றத்தார் அளித்த பங்களிப்பு பாராட்டப்பட வேண்டியதாகும்.

தலைவர் திரு அ. துரைசாமிபிள்ளை, கௌரவ செயலாளர் திரு. க. செல்லமுத்து, தனக்கே உரிய விதத்தில் நிகழ்ச்சிகளை தொகுத்தளிக்கும் திரு. செ. நடராஜா, மற்றும் நிர்வாகக் குழுவைச் சேர்ந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவிப்பதுடன் அவர்கள் தொடர்ந்தும் தம் சைவ தமிழ்ப்பணியை ஆற்ற இறைவன் நீண்ட ஆயுளைத் தர வாழ்த்துகிறேன்.

செய்வதைச் செம்மையாகச் செய்வது யோகம்.

– பகவத் கீதை –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவத்திரு ஊரன் அடிகளார் அவர்கள் நைஷ்டிக பிரமச்சாரி. அரசாங்க அலுவலை விடுத்து இளமையிலேயே துறவு பூண்டவர். 5000 நூல்களடங்கிய சொந்த நூலகத்தில் ஆராய்ச்சியிலேயே மூழ்கியிருப்பவர். திருஅருட்பா உரைநடைப் பகுதி முழுவதையும் ஒரே புத்தகமாக முதன் முதலில் வெளியிட்ட பெருமை அடிகளாரையேச் சாரும். வடலூரில் உள்ள வள்ளலார் தெய்வ நிலையங்களுக்குத் தொடர்ந்து ஐந்து முறை 20 ஆண்டுகள், அறங்காவலராக இருந்து வருபவரும் அடிகளாரே. அடிகளார் தத்துவ வித்தகர். தத்துவ ஆய்வு அடிகளாரின் தனிச்சிறப்பு. மிகக் கடினமான விடயங்களையும் மிக எளிமையாக விளக்குவது அடிகளார்க்கு கைவந்த கலை. அதற்கு இக்கட்டுரையும் சான்று.

(ஆ...ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமும் சமரசசன்மார்க்கமும்

## (நால்வரும் வள்ளலாரும்)

-தவத்திரு ஊரன் அடிகள், வடலூர்-

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப் பாதங்கள் நான்கு.
தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என மார்க்கங்கள் நான்கு.

சரியை - தாசமார்க்கம்
கிரியை - சற்புத்திரமார்க்கம்
யோகம் - சகமார்க்கம்
ஞானம் - சன்மார்க்கம்

சரியை - தேகத்தைச் சிவார்ப்பிதஞ் செய்தல்
கிரியை - இந்திரியங்களைச் சிவார்ப்பிதஞ் செய்தல்
யோகம் - கரணங்களைச் சிவார்ப்பிதஞ் செய்தல்
ஞானம் - ஆன்மாவாகிய தன்னையே சிவார்ப்பிதஞ் செய்தல்

சரியை - புறத்தொழிலால் வழிபாடு செய்தல்
கிரியை - புறத்தொழில் அகத்தொழில் இரண்டாலும் வழிபாடு
யோகம் - அகத்தொழிலால் வழிபாடு
ஞானம் - அறிவுத் தொழிலால் வழிபாடு

சரியை - உருவத்திருமேனியை வழிபடல்
கிரியை - அருவுருவத் திருமேனியை வழிபடல்
யோகம் - அருவத் திருமேனியை வழிபடல்
ஞானம் - உருவம், அருவுருவம், அருவம் ஆகிய மூன்றும் கடந்த அகண்டாகார சச்சிதானந்தத்தை வழிபடல்

சரியை முதலிய நான்கும் ஒன்றின் ஒன்று உயர்ந்தது.

"விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்பு மலர் காய் கனி போல் அன்றோ பராபரமே"
என்கிறார் தாயுமானவர். (பராபரக்கண்ணி 157)

சரியை - அரும்பு போன்றது
கிரியை - அதனின் முதிர்ந்த மலர் போன்றது
யோகம் - அதனின் முதிர்ந்த காய் போன்றது
ஞானம் - அதனின் முதிர்ந்த கனி போன்றது.

அரும்புவது அரும்பு
மலர்வது மலர்
காய்ப்பது காய்
கனிவது கனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயப் பணியும், கலைப்பணியும், இலக்கியப்பணியும்
சிறப்புடன் ஆற்றிய
மத்திய மாகாண இந்து மாமன்றத்தின்
வெள்ளி விழா வெகு விமரிசையாகவும் சிறப்பாகவும் நடைபெற்று
மேலும் நாட்டுக்கும், மக்களுக்கும் அரும்பணியாற்ற எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.


# RANJANE'S

**DEALERS IN TEXTILES**

FASHION SUPER MARKET.

**No. 133/13, Keyzer Street,**
**COLOMBO -11.**
**Tel: 01- 334448**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பாகி, மலராகி, காயாகிக் கனியவேண்டும்

சரியையாகிய தாசமார்க்கம் தொண்டு நெறி.
கிரியையாகிய சற்புத்திரமார்க்கம் மகண்மைநெறி.
யோகமாகிய சகமார்க்கம் தோழமை நெறி.
ஞானமாகிய சன்மார்க்கம் குருசீட நெறி, தலைவன் தலைவி நெறி

தாசமார்க்கம் – இறைவனுக்கு அடிமையாதல், தொண்டனாதல்
சற்புத்திரமார்க்கம் – இறைவனுக்கு மகனாதல், பிள்ளையாதல்
சகமார்க்கம் – இறைவனுக்கு நட்பாதல்.
சன்மார்க்கம் – இறைவனே தானாதல்

தாசமார்க்கத்தை விளக்க வந்தவர் அப்பர்
சற்புத்திரமார்க்கத்தை விளக்க வந்தவர் சம்பந்தர்
சகமார்க்கத்தை விளக்க வந்தவர் சுந்தரர்
சன்மார்க்கத்தை விளக்க வந்தவர் மாணிக்கவாசகர்.

அப்பர் இறைவனுக்கு தொண்டு பூண்டவர்
சம்பந்தர் இறைவனுக்கு மகண்மை பூண்டவர்
சுந்தரர் இறைவனுக்கு நட்புப் பூண்டவர்
மாணிக்கவாசகர் இறைவனே தாமானவர்.

நால்வரும் நான்கு மார்க்கங்களை – நான்கு பாதங்களை விளக்க வந்தவர்கள். நாடெங்கும் கோயில் கோயிலாகச் சென்று பாடினார்கள். தோத்திரஞ் செய்தார்கள். அதுவரை சாதாரணமாக இருந்த தலங்களைப் பாடல் பெற்ற தலங்களாக ஆக்கினார்கள். திருமுறைகளைத் தந்தார்கள். இவர்கள் நால்வரும் சமயகுரவர்கள். ஒருவருக்கொருவர் சரிநிகர் சமானமானவர்கள்.

இந்நால்வருக்குப்பின் இன்னொரு நால்வர் வந்தார்கள். இவர்கள் சந்தான குரவர்கள். ஒருவருக்கொருவர் சீடர்கள்.

மெய்கண்டார்
அருள்நந்தி சிவனார்
மறைஞான சம்பந்தர்
உமாபதி சிவம்

இந்நால்வரும் சாத்திரங்கள் செய்தார்கள். இவர்கள் வழியே மெய்கண்ட சந்தானம், திருக்கயிலாய பரம்பரை என மடங்கள் அமைந்தன. திருஆவடுதுறை, தருமபுரம், குன்றக்குடி போன்ற ஆதினங்கள் (மடங்கள்) இச்சந்தானகுரவர் வழிவந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:



# ARADHANAS

Sovereign Gold Jewellers & Dealers in Eversilverware

**103, COLOMBO STREET,**
**KANDY.**

**Dial: 08-22781, 34020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமய குரவர் நால்வர்
சைவ சந்தான குரவர்களும் நால்வர்

சமய குரவர்களின் கொடை 12 திருமுறைகள்
சந்தான குரவர்களின் கொடை 14 சாத்திரங்கள்

சமய குரவர்களின் கொடை பாடல் பெற்ற திருத்தலங்கள்
சந்தான குரவர்களின் கொடை சைவத்திருமடங்கள்

பாடல்பெற்ற திருத்தலங்களில் இரண்டு இலங்கையில் (ஈழத்தில்) உள்ளன. 1. திருகோணமலை, 2.திருக்கேதீச்சரம். சோழ நாட்டுத்தலம், பாண்டி நாட்டுத்தலம், மலை நாட்டுத்தலம், கொங்கு நாட்டுத்தலம், நடுநாட்டுத்தலம், வடநாட்டுத்தலம் என்பது போன்று இவ்விரண்டுக்கும் ஈழநாட்டுத்தலம் என்று பெயர். இலங்கையில் ஈழத்தில் இருந்து ஒரு மடம் தமிழகம் வந்தது. அதற்கு வரணி ஆதீனம் என்று பெயர். அது வேதாரணியத்தில் உள்ளது. வேதாரண்யம் கோயில் நிர்வாகம் அதைச் சார்ந்தது. தமிழகம் வந்த ஆறுமுக நாவலருக்கு 'நாவலர்' பட்டத்தை தந்தது திருவாவடுதுறை ஆதீனம். நாவலருக்குப் பல்லக்கு மரியாதை செய்தது குன்றக்குடி ஆதீனம். சிதம்பரத்திலுள்ள ஆறுமுக நாவலர் அறக்கட்டளைக்கு ஏஜன்டாக இருந்து நிர்வகிப்பவர் குன்றக்குடி அடிகளார். இவ்வாறு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் (தமிழகத்துக்கும், ஈழத்துக்கும்) சமயத் தொடர்பு பழமையாகவே இருந்து வருவது இன்புறத்தக்கது. இமயம் முதல் இலங்கை முடியப் பரந்துள்ள பூமியைச் சிவபூமி என்பார் திருமூலர்.

நால்வருக்குப் பின்வந்த வள்ளலார் இராமலிங்க அடிகள் சமய குரவர் நால்வர் மீதும் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார். நால்வருள் முதலாமவராகிய திருஞானசம்பந்தரைத் தமது வழிபடு குருவாகக் கொண்டிருந்தார். நான்காமவராகிய மாணிக்கவாசகரின் திருவாசகத்தை தம் வழிபடு நூலாகக் கொண்டார். நால்வரின் சைவநன்நெறியை வளர்த்தார். சைவம் காட்டும் நான்கு மார்க்கங்களில் நான்காவது மார்க்கமான சன்மார்க்கத்தை – மாணிக்கவாசகர் விளக்கியருளிய சன்மார்க்கத்தை – சமரச சுத்த சன்மார்க்கமாக விளக்கியருளினார். நான்கு மார்க்கங்களுக்கும் புதிய ஒரு விளக்கத்தை அருளினார்.

இறைவனுக்கு அடிமையாதல் தாசமார்க்கம்
இறைவனுக்கு மகனாதல் சற்புத்திரமார்க்கம்
இறைவனுக்கு நட்பாதல் சகமார்க்கம்
இறைவனே தானாதல் சன்மார்க்கம்

இது பழைய விளக்கம், தொன்று தொட்டுப் பழமையாக விளங்குவது. வள்ளலார் இந்நான்கு மார்க்கங்களுக்கும் புதியதொரு விளக்கத்தை அருளுகிறார். வள்ளலார் அருளும் புதிய விளக்கம் வருமாறு :

எல்லா உயிர்களையும் தன் அடிமையாகப் பாவித்தல் தாசமார்க்கம்
எல்லா உயிர்களையும் தன் மக்களாகப் பாவித்தல் சற்புத்திரமார்க்கம்
எல்லா உயிர்களையும் தன் நட்பாகப் பாவித்தல் சகமார்க்கம்
எல்லா உயிர்களையும் தன்னைப் போல் பாவித்தல் சன்மார்க்கம்

பழைய விளக்கம் இறைவனுக்கும் நமக்குமுள்ள உறவை – தொடர்பைக் குறிப்பது. வள்ளலார் அருளும் புதிய விளக்கம் நமக்கும் பிற உயிர்களுக்குமுள்ள உறவை – தொடர்பைக் குறிப்பது. இதை "ஜீவநியாயம்" என்கிறார் வள்ளற்பெருமான். இது ஜீவநியாயம் என்றால் முன்னது தெய்வ நியாயம் என்றாகின்றது. தெய்வ நியாயம் (Fatherhood of god) எல்லோருக்கும் விளங்குகிறது. ஜீவநியாயம் (Brotherhood of souls) எல்லோருக்கும் விளங்குவதில்லை. அதை விளக்க வந்தவர் தான் வள்ளலார். பழைய விளக்கத்தை மறுக்கவில்லை, ஏற்கிறார். மேலும் ஒரு புதிய விளக்கத்தை அருளுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# NUETRONICS

(DEALER FOR ELECTRONIC & COSMETIC TEXTILES)

**SIVAJI SHOPPING COMPLEX,**
**69/6, COLOMBO STREET,**
**KANDY.**

✆ 08-24706

RESI: ✆ 08-24166

FAX : 00948-24706

*Our Best Wishes and Congratulations*

★

# Sun Electricals

WHOLESALE AND RETAIL DEALERS IN
ELECTRICAL FITTINGS AND ACCESSORIES
**127 B, D. S. Senanayake Veediya,**
**KANDY.**
**Dial: 08- 24805**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயம் தானே தோன்றியது; இயற்கை. ஏனைய சமயங்கள் ஒவ்வொருவரால் தோற்றுவிக்கப்பெற்றவை; செயற்கை. சைவசமயம் அநாதி, மிகப்பழமையானது; என்று தோன்றிற்றென்று காலங்காணவொண்ணாதது. ஏனைய சமயங்கள் தோன்றிய காலங்கள், வருடங்கள் எல்லோரும் அறிந்தவை. சைவ சமயத்தில் ஏனைய சமயங்கள் அனைத்தும் அடங்கும். ஏனைய ஒவ்வொரு சமயத்திலும் சைவ சமயம் அடங்காது. சைவம் ஏனைய எல்லாவற்றையுந் தன்னுள் அடக்கித் தான் அவற்றிற்கு அதீதருமாய் மேலாய் விளங்குவது. அச்சைவ சமயத்தின் உச்சியைத்தான் வள்ளலார் சமரச சுத்த சன்மார்க்கமாக விளக்குகிறார்.

வள்ளலாரின் கொள்கை ஆன்மநேய ஒருமைப்பாடு, ஜீவகாருண்ய ஒழுக்கம், ஜோதி வழிபாடு, மரணமிலா பெருவாழ்வு. இந்நான்கையும் விளக்க நான்கு நிறுவனங்களை வள்ளலார் ஏற்படுத்தினார்.

1. சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்.
2. சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை.
3. சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை.
4. சித்திவளாகம்.

சங்கத்தின் குறிக்கோள் (பணி) ஆன்மநேய ஒருமைப்பாடு.
சாலையின் குறிக்கோள் (பணி) ஜீவகாருண்ய ஒழுக்கம், ஏழைகளின் பசி தவிர்த்தல்
சபையின் குறிக்கோள் கடவுளை ஜோதி வடிவில் வழிபடல், அருட்பெருஞ்சோதி வழிபாடு, ஜோதி தரிசனம்.
சித்திவளாகத்தின் குறிக்கோள் மரணமிலாப் பெருவாழ்வு

இவ்வுடம்பை மண்ணுக்கோ நெருப்புக்கோ
இரையாக்காமல் உடம்போடோ முத்தி சித்திகளைப்
பெறுதல். இறைவனோடு இரண்டறக் கலத்தல்.
கடவுள் நிலையறிந்து அம்மயமாதல்.
சிவமயமாதல், ஜோதிமயமாதல்.

நான்கு நிறுவனங்களைத் தந்த வள்ளலார் ஒரு நூலையும் வழங்கினார். அதுதான் திருவருட்பா. சங்கம், சாலை, சபை, சித்திவளாகம், திருவருட்பா இவ்வைந்தும் வள்ளலார் வழங்கிய அருட்கொடைகள். முதல் நான்கும் கற்கோயில்கள் என்றால் ஐந்தாவதாகிய திருவருட்பா சொற்கோயில்.

"சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக."
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

என்ற பொன்மொழிகளோடு சன்மார்க்கத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். நால்வர் நெறியில் வள்ளலார் வழியில் உலகம் நடந்து உய்யுமாக.!

**அன்பே சிவம்,**
**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி.**
**நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே.**
**வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி கி. லோகநாதன் முத்தரையன் பினாங்கிலுள்ள மலேசியா அறிவியல் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிகின்றார். உலகச் சைவப் பேரவையின் பொதுச் செயலாளர் நாயகமாகவும், சைவ உலகமெனும் செய்தித் தாளின் பிரதம ஆசிரியராகவும் திகழ்ந்து ஆக்கப்பணிகள் புரிந்து வருகிறார்.

(ஆ...ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமேருத் தமிழில் திருக்கோயில் வழிபாடு

-முனைவர் கி. லோகநாதன் முத்தரையன்-
(அறிவியல் பல்கலைக்கழகம், பினாங், மலேசியா)

உலக நாகரீகம் எப்பொழுது தோன்றிற்றோ அப்பொழுதே திருக்கோயில் வழிபாடும் தோன்றிவிட்டது. ஆதிகாலத்து மனிதன் பெரும் பெரும் கோயில்களைக் கட்டி வழிபாடு செய்யவில்லை எனினும் குகைகளில் கடவுளர்களின் சித்திரங்களை எழுதியும், மரம், பாம்பு போன்ற இயற்கையில் தோன்றும் உருவங்களையும், செயற்கையாக தான் எழுப்பிய இலிங்கம், அம்மை வடிவம் போன்றவற்றையும் தொழுது வணங்கியுள்ளதை வரலாறு நமக்குக் காட்டுகின்றது.

இவ்வகையில் முதற்சங்கத் தமிழர்களாகிய சுமேரியர்கள் - குமரித் தமிழர்கள் - பண்டைய பண்பாடுகளைத் தோற்றுவித்தவர்களில் மிகச் சிறப்பானவர்களாகவும் அவர்களது பண்பாடு இன்றளவும் இருப்பதோடு உலக நாகரிக வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தவர்களாகவும் புதிதாக மலர்ந்து வரும் சுமேருத் தமிழ் ஆய்வுகள் நமக்கு உணர்த்துகின்றன. மொழிக்கு எழுத்துருவம் படைத்த இவர்கள் பெரும் பெரும் கோயில்களையும் எழுப்பி, அதனைப் பற்றி ஆழமாகச் சிந்தித்து கோயில் திருப்பதிகங்களை ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பே பாடியிருக்கின்ற உண்மை - இந்த சுமேருத் தமிழ் ஆராய்ச்சி உணர்த்துகின்ற அற்புதமானவோர் உண்மையாகும். இப்பாடல்கள் இருக்கு வேதமும் பிற வேதங்களும் யாக்கப்படா முன்பே எழுதப்பட்டு களிமண் தட்டுகளில் பொறிக்கப்பட்டவையாகும். வேதத்தை முதன்மை படுத்தியும் அதனால் வடமொழியை தேவபாசையெனக் கூறி தமிழ் மொழியை இழிவு படுத்தும் பிராமணர்களின் பொய்களை அம்பலமாக்கும் அரிய கண்டு பிடிப்பாக, சுமேருத் தமிழ் கண்டுபிடிப்பு, குமரித்தமிழ் கண்டுபிடிப்பு, முதற்சங்கத் தமிழ் கண்டுபிடிப்பு அமைந்துள்ளது. பரந்து கிடக்கும் அவ்விலக்கியங்களிலிருந்து 'காசிகோயில் பாட்டு' எனப்படும் ஒன்றிலிருந்து சில வரிகளைத் திரட்டி, அன்றே திருக்கோயில் வழிபாட்டினை ஆய்ந்து அவர்கள் கண்டிருந்த உண்மைகளைச் சிறிது விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

இந்த காசிக்கோயில் திருப்பதிகம் பழைய பாபிலோனிய காலத்திற்குச் செல்லும் ஒன்றாகும். ஆகவே அதனைவிட இன்னும் பழையதாக, ஏறக்குறைய கி. மு. 2600 ஆண்டு வாக்கில் எழுதப்பட்டதாகக் கூறப்படுகின்றது. பெரும் புகழ் வாய்ந்த சுமேரு திருப்பதிகமாக இது விளங்கிட இதனை பலவாறு படியெடுத்து அக்காலத்தே போற்றியதனால் இன்று அதிகஞ் சேதமின்றிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது. ஏழு பாட்டுகளோடு 132 வரிகளோடு ஏறக்குறைய முற்றிலும் அகப்படுவதாக இன்று இது பல சுமேரிய அறிஞர்களால் வாசிக்கப்பட்டும் பொருள் காணப்பட்டும் அச்சேறி இருக்கின்றது. இக்கட்டுரை Gcne Gragg என்பவரால் வெளியிடப்பட்ட மூலத்தை அடியொட்டி எழுதப்பட்டுள்ளது.

ஓர் கோயில் எப்படி இருக்க வேண்டும்? ஏன் அது அப்படி இருக்க வேண்டும்? அதன் தத்துவங்கள் என்ன? அது எப்படி விளங்க வேண்டும்? ஏன் அப்படி இயங்க வேண்டும்? கோயிலிற்கும் நாட்டின் வளப்பத்திற்கும் என்ன தொடர்பு? கோயிலின் சிறப்பிற்கும் மக்கள் நலமே இருப்பதற்கும் என்ன தொடர்பு? என்ற கேள்விகட்கெலாம் பதிலிறுப்பவையாக இதன் பல வரிகள் இருக்கின்றன.

## 1. **இறைவனாலேயே கோயில் உயர்தல்**

ஓர் கோயில் புகழ்பெற்று நெடிதாகப் பெரிதாக வளர்வதற்கு மூலகாரணம் அங்கு இறைவனே வந்து குடிகொள்வதால்தான் என்ற கருத்தோடு இதன் முதல் பாட்டு தொடங்குகின்றது. கோயில் ஓர் சாதாரண வீடல்ல, தோன்றாத் துணையாக நிற்கும் இறைவன் வெளிப்பட்டு பிரதிட்டையாகி நிற்குமிடமே திருக்கோயில். இறைவன் மனமுவந்து அங்கு தொடர்ந்து இருக்கத்தான் கோயிலும் வானுயர உயர்ந்து சிறக்கும் என்பதாக இதன் கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

*
*
*

# Quality Steel

**364, Old Moor Street,**
**Colombo-12.**

*With Best Compliments From:*

*
*
*

# SILK PARADISE

**280, Peradeniya Road,**
**KANDY.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ege-nun-e ege-nun-e e-ta nam-ta-ab-e
(The exalted prince, the exalted prince came out of the temple)
ஏக நுன்னே ஏக நுன்னே இல்(லத்)து தனம் ஆவ் எய்(மி)

7. Kes sag-il mu-na-ni-in-gal
(Kes lifted its head for him)
காசி சென்னி இயலி கால் முன்னனின்

8. Enli-lil-le kes za-mi am-ma-ab-be
(Enlil spoke the praises of kes)
ஏண்லில்லே காசி சாமியம்ம அபையே

14. e-kes mus-kalam-ma gu-hus-Aratta
Kes Temple, foundation of the country, fierce ox of Aratta
காசி(கோ)இல் களம்ம முத(ல்) கோஉஷ்ண அரத்தா

15. hurr-sag-da mu-a an-da gu-la-a
(growing up like a mountain, embracing the sky)
உயர் சென்னியொடு மூஉவ வானொடு குலாவுவ

முதல் வரியில் நாம் புதியதாக பொருளைக் கொண்டிருக்கின்றோம். ஏகனாகிய இறைவன், அனைத்தையும் விட உயர்ந்து நிற்கும் நுனியனாகிய இறைவன், வெளிப்பட்டு அருளி இல் எனப்படும் கோயிலுள் எழுந்தருளி, அதன் தலத்தில் எய்து நிற்கவே, அக்கோயில் தலை நிமிர்ந்து ஏனையக் கோயிலை விட விஞ்சி நிற்கின்றது. அதன் அழகினை தெய்வீகப் பண்பினை திருவுளம் பற்றி இறைவனே அதன் திருப்புகழைப் பாட, நெடிய குன்றென உயர்கின்றதாம், வானோடு குலாவுகின்றதாம். இங்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் ஓர் கோயிலே இணைக்கின்றது என்ற கருத்து தென்படுவதைக் காண்க. வரி (115) இன்னும் தமிழ் என அடையாளங் கண்டு தெளியக் கூடிய அளவிற்கு உருச் சிதையாது இருப்பதைக் காண்க. "உயர் சென்னியோடு மூஉவ" என்பது உயர்ந்த சிகரத்தோடு கூடிய குன்றுபோல் கோபுரம் நிற்பதைக் காட்டும். ஓர் குன்றினைக் கருத்தில் கொண்டே கோபுரங்கள் எழுந்தன போலும். "வானோடு குலாவுவ" எவ்வளவு அழகிய கவிதை போன்ற தமிழ் வரிகள்! விண்ணையே எட்டும் அளவிற்கு அந்த கோபுரம் உயர்ந்திருக்க வேண்டுமாம். அதன்வழி விண்ணிலிருக்கும் தேவர்கள் எளிதாக கோயிலிற்கு வர வேண்டுமாம்.

அடுத்த இன்னும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய ஓர் கருத்தை வரி (14) காட்டுகின்றது. கோயிலே களமாகிய ஓர் நாட்டின் முதல், (முசு > முது > முதல்) அடித்தளம், ஆதாரத்தளம். அது ஒழுங்காக செயல்படவில்லையெனில் ஊழல் மலிந்து பாழடைந்து கிடக்கின்றதென்றால், நாட்டின் அடித்தளமே பாழடைந்து கிடக்கின்றது என்பது பொருள். ஏன் இப்படி என்பதை அடுத்த சில வரிகள் தெளிவாக்குகின்றன.

இங்கு குறிக்கப்படும் தெய்வம் வளியாகிய (lil) காற்றின், அதாவது அனைத்தையும் சலித்து ஆட்டிப்படைக்கும் திறத்து ஏண் (>ஏந்தல்) அல்லது வேண் (>வேள்) எனப்படும் தெய்வமாகச் சுட்டப்படுகின்றது. நடராச பெருமானாக இத்தெய்வம் இருக்கலாம். கடுஞ்சினக் காளை குறிக்கப்படுவது நந்தியை குறிக்கப்படுவதாகலாம். அல்லது மக்களுக்கு வீரியத்தைத் தந்து அவர்களை எல்லாம் வீறுகொண்ட காளைகளாக செயல்படும் திறத்தை வழங்கும் பெரும்பீடமாக, சக்திபீடமாக அது இலங்குவதை குறிப்பதாகலாம். இதன் பொருட்டே மன நலத்தை, உடல் நலத்தை தரும் அப்பேற்றால் ஓர் நாட்டின் ஆதாரத்தளமாக நல்லவோர் கோயில் கொள்ளப்படுகின்றது என்பதுமாகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from:

# DUMBARA FERTILIZER

**94, DIGANA**
**RAJAWELLA.**

✆ 08-74202, 072-20212



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கோயிலில் பலிபீடம்: மெய்வீரம்

ஓர் கோயில் என்பது அகத்து மறையுலகை வெளிப்படுத்தி நிற்கும் ஒன்று. அதனுள் புகுந்து மறைகளை தெரிந்து கொள்வதுபோல் ஒவ்வொருவனும் தன் உள்ளம் நுழைந்து அகத்து யாத்திரையைச் செய்து, அகத்தே கிடக்கும் அஞ்ஞானவிருளைக் கடிய வேண்டும், அப்பொழுதுதான் இறைவனை அடைய முடியும் என்ற கருத்தும் இப்பாடலில் சில வரிகளில் காணக் கிடக்கின்றது. இதுவும் பலியிடுவதோடு தொடர்புடையதாகத் தென்படுகிறது. மெய்வீரனாகிய ஓர் ஆன்றோரால்தான் இதுவும் முடியும். கோழைகளால் அல்ல என்பதாகவும் விளக்கும்.

59. e-kes uru-ga-am sa-bi a-ba mu-zu
(The kes Temple is indeed a city, who knows its interior)
இல் காசி ஊரு ஞாயம் சாய்பி யாப முன் சூழ்?

60. Sa-bi ur-sag-ur-sag-e-ne si mu-un-si-sa-e-ne
(Into its interior the heroes go straight-way)
சாய்பி சான்றோர் சான்றோர் இனம் சீர் முன் சீர்செல் யினே

62. e gu-du-du dam gu am-ma-gur-re
((At) the temple unblemished oxen are gathered in herds)
இல் கோ தூத்துதம் கோ கூரு ஆம்ம

63. e gu-sar-ra al-ku-e
(The temple consumes many oxen)
இல் கோ சர்வ வல் கூய்யே

64. e udu-sar-a-am al-ku-e
(The temple consumes many goats)
இல் உடு சர்வ வல் கூய்யே

இங்கு 'ur-sag' என்னும் சொல் இடம் மாறி 'sag-ur' ஆகி இப்பொழுது சான்றோராகி நிற்கின்றது. வீரப்புருடர்கள் என்னும் பொருளுடையது. மாபெரும் நகரம் போன்று தெரியும். கோயிலைப் போன்ற இவ்வுலகின் மன்றுகளை அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்களேக் கடந்து நேராக தடுமாற்றமின்றி அதன் நடுவிற்குச் சென்று இறைவனை அடைவார்கள் என்பது இதன் பொருள். இதற்கு அவர்கள் கரிய எருமைகளையும் சபல ஆடுகளையும் ஆயிரக்கணக்கில் பலியிட்டே துணிய வேண்டும். கரிய எருமைகள் என்பது கனவு மொழியில் விரக்தி, துக்கம், வேதனை, மரண பயம் போன்றவற்றைக் குறிக்கும். இதேபோன்று ஆடுகளும் சபல புத்தியையும் அற்பச் சிந்தனையையும் கீழான எண்ணங்களையும் குறிக்கும். சிந்திக்க மறுப்பது அகத்தே கிடக்கும் ஆடுகளால்தான்.

இங்கு பழந்தமிழ் சொல்லாகிய உடு (ஆடு) விளங்குவதைக் காண்க. கோயில்களில் பலிபீடம் அன்று இருந்ததை இவ்வரிகள் காட்டுகின்றன. மெய்யாகவும் எருமைகளும் ஆடுகளும் பிற உயிர்களும் பலியிடப்பட்டிருக்கலாம். ஆயினும் இவ்வரிகள் பலியிடப்படவேண்டியவை அகத்தே இருக்கும் விலங்குகளைத்தான், புறத்தேத் திரியும் உயிர்களை அல்ல என்று தெளிவாகக் காட்டுகின்றன. இங்கு போற்றப்படும் வீரமும் அகத்து மாசுகளை, அற்பச் சிந்தனைகளை அகற்றும் தறுகண்மையேத் தவிர்த்து போர்களத்தில் காட்டப்படும் வீரம் அல்ல என்றும் தெரிகின்றது. பிற்காலத்தில் சமண தீர்த்தங்கரராகி விளங்கிய ஒருவர் 'மகாவீரர்' என்று அழைக்கப்பட்டது இதனை ஒட்டியே எழுந்திருக்க வேண்டும். சமண சமயம் பண்டைய சைவத்தின் ஓர் பிரிவு என்பதையும் நாம் இங்கு கருத்தில் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# JANATHA STEEL

**20, Quarry Road,**
**Colombo-12**

**☎ 421412, 325807**

*With Best Compliments From:*

# NEW JEEWA INDUSTRIES (PVT) LTD

**Pollwate**
**Kundasale**

**✆ 08- 33407**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. சரியா கிரியைகள்

இன்னும் சில வரிகள் ஆகம நெறி எவ்வளவு பழமையானது என்பதையும் வேதங்கட்கு முற்பட்டுத் தோன்றி, திருக்கோயில் வழிபாட்டோடு அது இணைப்பிரியாது வந்திருப்பதையும், பல்வேறு சரியா கிரியைகள் அன்றே மிகச் சிறப்பாக இருந்தனவென்பதையும் காட்டுகின்றன.

105.e en-bi a-nun-na-mes
(The temple, whose lords are the Anunna gods)
இல் ஏண்பி ஆனின்னமார்

106. nu-es-bi giri-la e-an-na-me-es
(Whose nu-es priests are the sacrificers? of Enanna)
நுவல்லிபி கிரி அழை இல் அண்ணா மார்

107. e-e lugal-bur-ra am-mi-gub
(The lugal pura-priest stepped up to the temple)
இல்லே புர உளுகள் குப்புஆம்மின்

108. en du sa ese-la am-mi-in-la
(The good en-priest... held the lead rope? suspended)
வேந்து சான் இசை அழை அழையும்மின்

109. a-tu-e sibir su bi-in-du
(The atu priest held the staff)
ஆடுவே சிவிறி கை தூக்குபின்

110. tue a-urr-a am-mi-tum
(The ... brought his seat in the holy place)
தூவே ஆல் ஊர தூவுமின்

111. lal-e ki-ku-ga am-mi-in-tus
(The ...took his seat in the holy place)
ஆள்ளே கீழ் கோக துஞ்சு அம்மின்


112. en-kume-ne-ara ki am-ma-gal-le-es
(The enkum bowed down in prayer)
ஏண்கும்மினம் இறைஞ்சு கீழ்கால்மிசு ஆம்ம

113. pa-ses-ene kus mu-un-sig-ge-ne
(The pass beat on the (drum) - skin)
பால் சிஷ்ய இனம் கோசம் முன் சீக்கின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*



**BOBBY INDUSTRIES (PVT) ITD.**

**14 1st Lane ,**
**Mawilmada,**
**KANDY.**

**© 08- 25363, 33348** **Fax: 94-833348**

**MONARA MATCH CO.(PVT) LTD.,**

**INDUSTRIAL ESTATE,**
**PALLEKELLE.**
**Celltel : 072-22298**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

114. e-sub uru uru-sub-a mu-n-ib-be-e-ne
(They recited the e-sub and uru-sub (versus)
இல்சுப ஊரு சுப முனியிப்பியனே

115. si-am-ma-ke sum-ga mi-ni-ib-za
(The bull's horn kept sounding)
சீ அமா ஓங்க முனியிப்பிசு

இவ்வரிகளும் இன்னும் பலவும் இன்று நடப்பது போன்றே ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பும் நடந்திருப்பதை காட்டுகின்றன. இதன் வழி ஆகமநெறி மிகமிகப் பழைமையானது என்பதையும் இவை உறுதி செய்கின்றன.

கோயில் தெய்வங்களின் இருப்பிடமாகக் கருதப்பட்டது என்பதே வரி (105) உணர்த்துகின்றது. ஆனினமாகிய தெய்வங்கள் குடிகொள்ளும் இடம் கோயிலாகும். கிரி – அழை (giri - la) என்பது அழைப்பு பாட்டு (கீர், கீரம்: எழுத்து) எனப் பொருள்படும். நக்–கீரன் என்ற சொல்லில் இது இன்னும் இருக்கின்றது. தெய்வங்களை அழைப்பதற்காக இப்பாட்டுக்கள் பயன்பட்டுள்ளன. அவற்றை நுவல்பவர்களாக (nu-es) சில ஓதுவர்கள் அன்றே இருந்திருக்கின்றனர். மேலும் இசை – அழை என்ற இன்னொரு இசைப்பாட்டும் இருந்திருக்கின்றது. முன்னது அகவல்களாக பின்னது பண்ணோடு இசைக்கப்படும் பாடல்களாக தோத்திரங்களாக இருந்திருக்கலாம்.

மேலும் அர்ச்சகர்களும் ஓதுவார்களும் ஆடுநர்களுமாகப் பலர் இந்த சரியா கிரியையில் ஈடுபட்டுள்ளதும் தெரிகின்றது. அன்றே இசையொடு ஆடலும் பாடலும் கோயிலில் இருந்திருக்கின்றது என்பது நமக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்றாகும். ஆடுவே (a-tu-e) என்று ஆட்டமும் ஆடுநர்களும் அன்றும் இருந்திருக்கின்றனர். அந்த சொல்லும் எந்த திரிபுமின்றி இன்றும் நம்மோடு இருக்கின்றது.

சடங்குகளில் தூய, ஓடுகின்ற நீரை தீர்த்தமாகத் தெளித்தல், சிவிறி வீசல், முரசு இயம்பல், கொம்பு ஊதல் என்பனவும் அடங்கி இருந்திருக்கின்றது. இந்த சடங்குகளில் ஊர் தலைவர் (lugal-pur-ra) கலந்து கொண்டு சிறப்பிப்பதும் உண்டு. பிரார்த்தனைகளும் இருந்திருக்கின்றன. கோயில் சுபிட்சத்தை வேண்டியும் (e-sub) ஊரின், நாட்டின், மக்களின் சுபிட்சத்தை வேண்டியும் (uru-sub-ba) பிரார்த்தனைகள் நடந்திருக்கின்றன.

கோயில் அர்ச்சகர்கட்கு உதவியாக சிஷ்யர்கள் (pa-ses) இருந்திருக்கின்றார்கள் என்பதில் 'சிஷ்யன்' என்ற சொல் தமிழ் சொல்லாகவே இங்கு விளங்குகின்றது. இங்கு 'ஏந்து' (>வேந்து) (en-du) எனப்பட்டவர்களே குருக்கள்மாராக பிற்காலத்தில் அழைக்கப்பட்டிருக்கலாம் என்பதுவும் சிந்தனைக்குரிய ஒன்றாகும். அரசரே பண்டாரமாகவும் இருந்திருக்கலாம்.

சிந்திக்க சிந்திக்க இன்னும் அரிய பல உண்மைகளை கொடுத்த வண்ணம் இவ்வரிகள் திகழ்கின்றன. ஒன்று மட்டும் உறுதி – இவையெல்லாம் தூய தமிழிலேயே நடத்தப்பட்டன என்பதே அது. பிற்காலத்து வடமொழி பிராம்மணர்கள் இந்தப் பண்டைய தமிழர்களின் மந்திரங்களை, இசைப்பாடல்களை, போற்றிகளை, வாழ்த்துக்களை, பிரார்த்தனைகளை மொழி பெயர்ப்பு செய்தோ அல்லது அதனைப்போன்று சுயமாக எழுதியோ, தமிழை கோயில்களிலிருந்து துரத்திவிட்டனர். சமக்கிருதத்தை தேவ பாசையாக்கி கோயிலில் புகுத்தி தமிழை வீழ்த்திவிட்டனர். இந்தப் பெரும் பாதகச்செயல் இப்பொழுது சுமேரு தமிழ் ஆய்வின் வழி அம்பலமாகின்றது. இனியும் நாம் பொருத்துக்கொண்டிருப்பது கோழைத்தனத்திலும் மிகவும் கேவலமான ஓர் கோழைத்தனமாகும்.

தமிழை கோயிலில் பிரதிட்டை செய்வோம். பிறகு வாழ்க்கையின் எல்லா இடங்களிலும் அதற்குரிய சிறப்பிடத்தைத் தருவோம். மனித நாகரீகத்திற்கு வித்திட்ட மொழி தமிழ் மொழி. அதனால் எதுவும் முடியும். எல்லாம் முடியும். எந்தவொரு தயக்கமும் தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. பெ. சோமாஸ்கந்தர் உடப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஓய்வு பெற்ற அதிபர். இலக்கிய சமய கருத்தரங்குகளில் சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், கவிஞர். நாடகத்தின் சகல துறைகளிலும் ஈடுபடுபவர். சமய வகுப்புகள், சமய கதாப்பிரசங்கங்கள் செய்து வருபவர். வில்லிசையில் முப்பது ஆண்டுகளாக சிறப்பாகப் பாடி வருபவர். சிங்கப்பூர், மலேசியா, தமிழ்நாடு போன்ற நாடுகளுக்கு வில்லிசை நிகழ்ச்சிக்காக சென்று வந்தவர், இதற்காக பல சமய நிறுவனங்களால் பாராட்டும் பட்டங்களும் பெற்றுக் கொண்டவர்.

1993 இல் இந்து கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சினால் நடாத்தப்பட்ட பக்திப் பெருவிழாவில் ''அருட்கலைத்திலகம்'' எனும் பட்டம் பெற்றவர். தனது சொந்த ஊரிலும் வெளி இடங்களிலும் ஆலயங்களில் ஓதுவார், சாத்துப்படிப் பணிகளில் ஈடுபட்டு வருபவர். சமய, சமூகத் தொண்டுகள் செய்வதில் சிறந்து விளங்குபவர்.

(ஆ...ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் வாழ்க

– உடப்பூரான் –

பூமகளின் பொன்முடியாய்ப் புகழ்மேவு மலையகத்தின்
சேமமருள் மாவலியாள் செழிப்பளித்து வளைத்தோடும்
நாமமுயர் கண்டியிலே நலம் பல ஓங்கிநிற்கும்
நேமமுயர் வரலாறு நிலைத்தகலை மாடம் தோன்றும்

புத்தனாம் ஞானியின் புனிதமுறு தலதமதும்
வித்தகன் விநாயகன் கட்டுக்கலை ஆலயமும்
மத்திய மாகாண இந்துமா மன்றமதும்
நித்தமும் வரலாற்றின் நிலையான சான்றாகும்

மத்திய மாகாணத்தில் மலையகச் சுடரொளியாய்
சத்திய இந்துமத சன்மார்க்கந் தான்பரவி
இத்தளஞ் சிறந்திட இந்துமா மன்றமதை
நத்தினார் நந்தமிழர் நற்பணி புரிந்தனர்

சைவமும் தமிழும்போலச் சமயத்தின் கலைகளுமாய்
நவமுடன் தத்துவத்தை நலமாகக் காட்டிடவே
சிவநெறிச் சித்தாந்தம் தெய்வநல வேதாந்தம்
பவம்போக்கித் தமிழினத்தின் பண்பாடு தான்வளர்த்தார்

இம்மைக்கும் வாழ்வளித்து மறுமைக்கும் உய்த்துவிடும்
நம்மதத்தின் வழிபாட்டை நாடறியச் செய்துவிடும்
எம்மவரின் மத்தியமா காணஇந்து மாமன்றம்
நம்மினச் சேவைக்கோர் ஈடிலாக் கோட்டமிது

ஆண்டுகள் அறுபதின்முன் அமைந்திட்ட இந்தமன்றம்
பூண்டதோர் பணிகளாலே புதுமைகள் பலவும் நாட்டித்
தூண்டிய செயலால் நம் தூயதமிழ்க் கலைகளோங்கி
ஈண்டிய பெருமையிலே இமயம்போல் இன்றிலங்கும்

வெள்ளிவிழா பொன்விழா வெற்றிநடை போட்ட மன்றம்
அள்ளிவரும் அழகுமிளிர் கலாசார நிலையமதை
தெள்ளியதோர் உணர்வினிலே சிறப்பாகத் தானெழுப்ப
வெள்ளிவிழா அந்நிலையம் இன்றுகாண்கும் வியப்புகண்டோம்

மணியான கலாசார நிலையமது மாணுயர்ந்து
அணியாக விளங்கி நிற்கும் அரியதோர் இந்நாளில்
தணியாத தமிழுணர்வின் தன்னேரில் கோட்டமதன்
மணியான வெள்ளிவிழா மலர்வதுநம் பாக்கியமே

கால்நூறு ஆண்டுகளாய்க் கலைவளர்த்த நிலையமிது
மேல்மேலும் பொன்விழா மணிவிழா வைரவிழா
சால்புடைய பவளவிழா முத்துவிழா நூறின்விழா
ஏல்புடனே இனிதுகாணும் என்றென்றும் நிலைத்து வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25வது ஆண்டு வெள்ளி விழா காணும்
கண்டி மத்திய மாகாண இந்து
மாமன்றத்தினருக்கு
எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

கண்டியன் டிரேடிங் கார்ப்பரேஷன்

வினியோகஸ்தர்கள்
CIC, DUCO DULUX, PENTALITE PAINTS & HARDWARE

93, டீ. எஸ். சேனாநாயக்க வீதி,
கண்டி.

✆ 08 - 22616



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷேட விருந்தினர் பதிவேட்டின் சில ஏடுகள் .............
## *From the visitors Book.......*

ஓம்

இந்து கலாச்சார நிலையத்தினை திறந்து வைக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தமையையிட்டு மிகப் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

மத்திய மாகாண இந்து மாமன்றம் மென்மேலும் வளர்ச்சி அடைந்து இந்துக்களுக்கு ஒரு ஒளிவளர் விளக்காய் விளங்க இறைவன் இன்னருள் புரிவாராக.

*ஒப்பம்: அ. துரைசாமிபிள்ளை*

12 – 06 – 1983

I am happy to be associated with the inauguration of the Hindu Cultural Hall. This is a functional, very simple, yet beautiful building. I will like to congratulate all those who have worked for putting up this building and for many of you it is fulfilment of a dream. I hope that this building will serve all the citizens of Kandy.

*Sgd.,/ S.J.S. Chatwal*
High Commissioner of India,Colombo.

12-06-83



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

- **Hingurana Sugar Industries Ltd.**
- **Hingurana Real Estate Development (Pvt) Ltd.**
- **SAB Trading Co. (Pvt) Ltd.**
- **Marigold Garments (Pvt) Ltd.**
- **Marigold Communication (Pvt) Ltd.**
- **Marigold Hotels (Pvt) Ltd.**

**561/3, ELVITIGALA MAWATHA**
**NARAHENPITA**
**COLOMBO - 5**

☎ **591947-58** **Fax- 586014**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It was a privilege and honour to attend the reception organized for me by the Central Province Hindu Organization, on 23rd June 1985.

I am deeply grateful for the kind sentiments expressed on the occasion, for the people and the government of India.

I wish the organization and its leadership all success in their endeavors to build a strong united Sri Lanka, and Indo-Sri Lankan friendship. Jai Hind.!

*Sgd.,/ J.N. Dixit*
High Commissioner for India Colombo.

23rd June 1985

சீரிய முறையில் "சமுதாயப் பணிகள் – இந்துசமயக் கண்ணோட்டம்" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கினை ஒழுங்கு செய்த கண்டி இந்து வாலிபர் சங்கத்தினரையும் அவர்களுக்கு ஆதாரமாயுள்ள மத்திய மாகாண இந்து மாமன்றத்தினரையும் பாராட்ட வேண்டும். இந்து சமய வளர்ச்சியினையும் மானிட நலத்தையும் மனதிற் கொண்டு அவர்கள் மேலும் சேவைகளை வழங்குவார்களென்று நம்புகின்றோம்.

*ஒப்பம்: சி. தில்லைநாதன்*
பேராதனைப் பல்கலைக் கழகம்.

14 – 10 – 1989

My Wife and I are happy today to have spent some time and enjoyed the hospitality of the Hindu Cultural Society, Kandy. We have enjoyed talking to them, and benefiting from their views and opinions. I wish them, all brilliant success for the future.

*Sgd.,/ N.N. Jha*
High Commissioner for India, Colombo.

02- 01-1991



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத் தலை நகராம் கண்டி மாநகரில்
அரும்பணி ஆற்றிவரும்
மத்திய மாகாண இந்து மாமன்றத்தின்
வெள்ளி விழா சிறப்புற
எமது நல்லாசிகள்

# கல்பனாஸ்

பிரபல ஜவுளி விற்பனையாளர்கள்

119 – 1/8, பிரின்ஸ் வீதி
கொழும்பு – 11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆந் திகதி இம்மண்டபத்தில் என்னை வரவேற்று எனக்குப் பாராட்டு விழா நடத்தினர்.

உண்மையில் இன்று ஒரு புனிதமான நாள். ஏனெனில் இன்று இந்தியா சுதந்திர தினம். இவ்வாறான நாளிலே "தலை சிறந்த தமிழர்" என்று எனக்கு இந்திய தமிழ் நாட்டு அறிஞர்கள் சூட்டிய நாமத்தின் பொருட்டு என்னை அழைத்துப் பாராட்டினார்கள். இந்தப் பாராட்டை நான் மனப்பூர்வமாக ஏற்று, நாமெல்லாரும் ஒற்றுமையாய் வாழ இது வழிவகுக்கும் என்று நம்பிக்கை கொண்டு நன்றி கூர்கின்றேன்.

வாழ்க நம் ஒற்றுமை.

*ஒப்பம்: சௌ. தொண்டமான்*

15-08-1992

மத்திய மாகாண இந்து மாமன்றத்தின் சிறப்பான நவராத்திரி கலைவிழாவில் கலந்து கொண்டேன். மிகச்சிறப்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அழகான ஒரு நூலகமும் இங்கே திறக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு நூலகம் மிகப்பெரிய தேவையாக இருந்தது. இந்து மாமன்றம் இந்தப் பணியை பூர்த்தி செய்து அழியாப் புகழ்பெற்றுள்ளது. எடுத்த எந்த காரியத்தையும் மிகச்சிறப்பாக நிறைவேற்றும் உங்கள் பணிகள் வாழ்க. வாழ்க இந்து மாமன்றம்.

*ஒப்பம்: பி. பி. தேவராஜ்*

04-09-1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# SP. K. SUPPIAH PILLAI & BROS.

Fashionable and Quality Textiles
(Wholesale & Retail)
**Estd: 1906**

**28, D.S. Senanayake Veediya,**
**KANDY.**
**Dial: 34514**

*For quality Gold Jewellery Please Visit Our Branch*

**"LALITH"**

*With Best Compliments From:*

# LALITHA

## JEWELLERS

**(Orders Undertaken and Executed Punctually)**
Buyers of Old Gold, Carat Gold & Silver at current rates

(PAWN BROKERS)

**28, D.S. Senanayake Veediya,**
**KANDY.**
**Tel - 34514**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய பங்குனி உத்தரத்
தேர்த்திருவிழா – மன்ற உபயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரந்தோலி பெரஹராவில் இந்துக்களைப்
பிரதிநிதித்துவம் செய்யும் இந்து மாமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்வத்தை மகாநாயக தேரருக்கு
மன்றத் தலைவரின் மரியாதை



இந்து கலாசார நிலையத்தின் கம்பீரமான
முகப்புத்தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்பு உபகுழு



தலைவர் முன்னுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவராத்திரி கலைவிழா
பக்க வாத்தியக் கலைஞர்கள்



இசை வளர்க்கும் இந்து மாமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர் தொண்டமான் அவர்களுக்கு மன்றச் சார்பில்
பொன்னாடையும் மலர் மாலையும்



நவராத்திரி கலைவிழா
பிரதம விருந்தினர் அழைத்து வரப்படுகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணல் காந்தி அடிகளின் மணி மொழிகள்...........

☆ சன்மார்க்கமில்லாத சமயம் ஆணி வேர் இல்லாத மரம்.
சமய நம்பிக்கையில்லாத சன்மார்க்கம் மணல் மேல் கட்டப்பட்ட வீடு.

☆ சத்தியத்திற்கும் மேலான சமயம் எதுவும் இல்லை.
ஏனெனில் சத்தியமே கடவுள்.

☆ மனித சமுதாயத்தை நேசிப்பவன் இறைவனை நேசிப்பவன் ஆகிறான்.
மக்கட் பணியே மகேஸ்வரன் பணி.

☆ தண்டிப்பவன் மனிதன். மன்னிப்பவன் இறைவன்.

☆ புகழ் தோன்றி மறைவது, செல்வம் வந்து போவது.
ஒழுக்கமோ ஆயுள் முழுவதும் நம்மோடு ஒன்றி இருப்பது.
ஒழுக்கமே ஒருவருடைய பாரம்பரியத்தை தோற்றுவிக்கிறது.

☆ "நான் வாழ்கிறேன்" என்பது நான் மாத்திரம் வாழ்வதாகாது. ஏனெனில் நான் அனுபவிக்கிற அனைத்தும் சமுதாயம் அளித்தவை. "சமுதாயமாக வாழ்கிறேன்" என்பது தான் உண்மை.

☆ எத்தனை சம்பாதித்தாலும் சிக்கனமின்றி வாழ்க்கையை சுபீட்சமாக்க முடியாது.

☆ கடன் படுவது என்பதை என் வாழ்க்கையில் நான் என்றுமே செய்ததில்லை.
கடன் படுவதை நான் எப்போதும் வெறுத்தே வந்திருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலுள்ள பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றிவரும் பேராசிரியர் சி. தில்லைநாதன், இலங்கைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ச் சிறப்புக் கலைமாணியாக முதல்வகுப்பில் சித்தியெய்தி அப் பல்கலைக்கழகத்தின் எம். ஏ. பட்டத்தையும் பெற்றதோடு சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசன் மேற்பார்வையில் ஆய்வு மேற்கொண்டு M. Litt. பட்டமும் பெற்றார். இவர் Ceylon Observer, தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் பணியாற்றியிருக்கிறார். இலக்கியம், வரலாறு, பண்பாடு சம்பந்தமான பல கட்டுரைகளையும், சில கவிதைகள், சிறுகதைகளையும் எழுதியுள்ளார். சமூக, அரசியல், பொருளாதார முரண்பாடுகளை மையமாகக் கொண்டு "தகுதி" "மானிடம் என்பது புல்லோ?" ஆகிய நாடகங்களை எழுதிமேடையேற்றியுள்ளார். "வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை", "இலக்கியமும் சமுதாயமும்" ஆகிய இவரது நூல்களைச் சென்னைத் தமிழ்ப் புத்தகாலயத்தினர் வெளியிட்டுள்ளனர்.

(ஆ...ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயமும் பண்பாடும்

– பேராசிரியர் எஸ். தில்லைநாதன் –
(பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை)

மனிதவாழ்வு மண்ணில் நல்லவண்ணம் ஒழுங்கானதாகவும் அமைதியானதாகவும் அழகானதாகவும் விளங்க வேண்டும் என்று விரும்பாதார் இல்லை. ஆனால், அவ்விருப்பம் நன்கு கைகூடுவதாகவும் இல்லை. அதற்குக் காரணம் சுயநலம் என்பதை அனேகமாக எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள். அறவாழ்க்கைக்கு எதிரானவை என்று திருவள்ளுவராற் கடிந்துரைக்கப்பட்ட பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் யாவும் சுயநலத்தையொட்டி வளர்கின்றன. மனிதனால் தன் வசதிகளையும் வல்லமைகளையும் பெருக்குவதற்கென உருவாக்கப்பட்ட பல சாதனங்களே அவலங்களுக்கும் அலங்கோலங்களுக்கும் அழிவுகளுக்கும் காலாயமைவதைக் காண்கிறோம். புகழ்பூத்த வான்வெளி ஆய்வாளரும் விஞ்ஞானப் புனைகதை எழுத்தாளருமான ஆர்தர் சி. கிளார்க் செய்மதிமூலம் ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் வன்முறைக் கொலைகளும் கொள்ளைகளும் மலிந்துவருவது கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார். உலகினை ஒன்றுபடுத்திய ஒரு வியத்தகு விஞ்ஞானக் கண்டுபிடிப்பு அத்தகு நிலைக்கு ஆட்பட்டு வருவது குறித்து ஏமாற்றம் அடைந்துள்ள ஆர்தர் சி. கிளார்க் புத்திசாலித்தனமான நாகரிகம் ஐம்பது ஒளி வருடங்களில் எட்டக்கூடிய தூரத்தில் தென்படவில்லை என்று விசனம் எய்துகிறார். சுயலாப வேட்டையில் வேறெதுவும் பொருட்படுத்தப்படாமைதான் அவர் அவ்வாறு விசனப்படும் நிலைக்கான அடிப்படைக் காரணம் என்று தோன்றுகிறது.

உலகியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதைக் காட்டிலும் பெருக்குவதில் கூடிய நாட்டம் கொண்ட ஓர் அமைப்பில், நுகர்பண்டங்களை உற்பத்தி செய்வதிலும் விற்பதிலும் வேண்டுவதிலும் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்கள். அத்தகைய நிலையினை அபிவிருத்தியடைந்தவை எனப்படும் நாடுகளிலே பரக்கப் பார்க்கலாம். அந்நாடுகளிலும் சமுதாய வாழ்வில் அமைதியும் கட்டுப்பாடும் அருகிவருவதாய்த் தெரிகிறது. அமெரிக்காவில் கொள்ளைகளும் கொலைகளும் அதிகரித்து வருகின்றன. இளவயதுக் குற்றவாளிகளின் தொகை பெருகிவருவதுபற்றி விசனமடைந்துள்ள தொண்டர் ஸ்தாபனங்கள், கடவுளுக்குப் பயப்படுபவர்களும் பொறுப்புணர்ச்சி உடையவர்களும் மதிப்புவாய்ந்தவர்களுமான குடிமக்களை உருவாக்கத் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றன. பொது நன்மையின் பொருட்டுச் சொந்த ஆசைகளைக் கட்டுப்படுத்தும் உணர்வும், சகோதர மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகள் பற்றிய சிந்தனையும் தூண்டப்பட வேண்டிய தேவை உளது என அவை கூறுகின்றன. நான் என்ற ஆணவம் அடக்கப்படவேண்டியமையின் அவசியம் பற்றியும் பலவாறாகப் பேசப்படுகிறது. இளவயதுக் குற்றவாளிகளிற் பெரும்பாலனவர்கள் சமய நெறிப்படுத்தல் சற்றும் வாய்க்கப் பெறாதவர்களாய் இருப்பதை அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுப் பணியகக் கோவைகளிலிருந்து அறியமுடிகிறதாம். கடவுள் நம்பிக்கை அற்றவர்கள் இலேசிலே சபலங்களுக்கும் சஞ்சலங்களுக்கும் ஆட்படுவதோடு உணர்ச்சி வசப்பட்டுத் தம்மை இழந்து விடுகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

அது எவ்வாறாயினும், நீண்ட கால அனுபவத்தினதும் அறிவினதும் பயனாக உருவான சமயம், பண்பாடு, அரசு முதலான தாபனங்களாயினும் சரி மோட்டார் வண்டி, விமானம், கணனி, செய்மதி, தொலைக்காட்சி முதலான கருவிகளாயினும் சரி, அவை யாவுமே மனித வாழ்வின் மேம்பாட்டுக்கு ஆதாரமாக அமைய வேண்டியவை. ஆனால், சுயலாபத்திற்காக அவை தவறான வழிகளிற் பிரயோகிக்கப்படுமிடத்துப் பிரச்சினைகள் பல தோன்றுகின்றன. மனிதர்கள் சுயநலம் அற்றவர்களாகவும் நற்பண்புடையவர்களாகவும் இருக்கவேண்டுமென்று கூறுகிறோம். ஆனால், கெட்டவர்களும் ஊழல் பேர்வழிகளும் ஏமாற்றுக்காரர்களும் சுலபமாக வெற்றியும் மதிப்பும் பெறுகின்ற சூழ்நிலையில் நல்லவர்களாக இருக்கவேண்டிய தேவை என்னவென்று பலர் கேட்கலாம்.

அவைபற்றி விரிவாக அலச இது சந்தர்ப்பமன்று. ஆனால், கல்வியும் பயிற்சியும் சமயமும் பண்பாடும் தேவைப்படுவது மனிதவாழ்வைப் பயனுடைத்தாக்குவதற்கேயன்றி எவ்வாறேனும் பொருளும் புகழும் சம்பாதிக்கும் தன்னல வேட்கையை நிறைவேற்றுவதற்காக அல்ல என்பதை மனங்கொள்ள வேண்டும். மனிதமேம்பாடு மனித இயல்புகளையும் நடத்தைகளையுமே பெரிதும் பொறுத்தது என்பதை மறந்துவிடலாகாது. சுயநலம், உணர்ச்சிவசப்படும் தன்மை, பொறாமை முதலானவை மனிதரிடத்து உள்ளவை. அதேவேளை, ஒழுங்கினையும் அழகினையும் நாடுவதும் ஏனையோரிடத்து அன்பு செலுத்துவதும் மனித இயல்புகளாம். தீமை பயப்பனவற்றை ஒழித்து நன்மை பயப்பனவற்றை வளர்க்க வேண்டியதே என்றுமுள தேவை. மனிதனை அறிவுள்ள பிராணி என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழில்மிகு கண்டி மாநகரில் சிறப்புடன் பணியாற்றி
வெள்ளி விழாக் காணும்
இந்து மாமன்றத்திற்கு
நல்லாசி வழங்குவதில்
பெருமகிழ்ச்சியடைகின்றோம்

❖

❖

# CITY POINT

**Top Brand Lungies**

Children's wear and Men's wear

**Specialist for Poonam Sarees**

**103, 3 rd CROSS STREET**
**COLOMBO -11**
**Dial: 332704, 332705**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவென்றால் என்னவென்பதை விளக்கப்புகுந்த வள்ளுவர், மனத்தைப் போகுமிடத்தெல்லாம் போகவிடாது தீமையினின்று தடுத்து நன்மையின் பக்கம் செலுத்துவதே அறிவு என்றார்.

தீமையைப் புறங்கண்டு நன்மையை வளர்க்கும் முயற்சியே மனித நாகரிகத்தின் வரலாறாகும். அதுபற்றி எண்ணிப்பார்க்கையில் சமயமும் பண்பாடும் நினைவுக்கு வருவன. நவீன விஞ்ஞான, தொழில் நுட்ப அபிவிருத்திகள் பலவற்றின் பின்னும், மனித வாழ்க்கை நலனை கருதியவை என்றும் அதற்கு ஆதாரமானவை என்றும் சமயத்திலும் பண்பாட்டிலும் வைத்த நம்பிக்கை தளர்ந்துவிடவில்லை. காலத்தின் தேவைக்கு உகந்தவாறு மேற்கோள்களுக்கும் விளக்கங்களுக்கும் வியாக்கியானங்களுக்கும் அவை இடமளித்து வருகின்றன.

மனித வாழ்வில் சமயம் வகிக்கும் இடத்தினைப் பொதுவாக நோக்கும் போது இரண்டு விடயங்கள் துலாம்பரமாக விளங்குகின்றன. ஒன்று, மேம்பட்ட ஒரு சக்தியில் வைத்த நம்பிக்கையின் அடிப்படையிலான கோட்பாடுகளும் சம்பிரதாயங்களும் சடங்குகளும் மக்களை ஒன்றுபடுத்தி நெறிப்படுத்துகின்றன என்பது. மற்றது, பிரபஞ்சத்தினதும் உயிர்களினதும் தோற்றமும் ஒடுக்கமும் பற்றிய விளக்கங்கள் சம்பந்தமானது. தொல்லைகள் கவலைகள் சாவுகளை எதிர்நோக்கிக் கிலேசமுறும் மக்களுக்கு ஆறுதலளித்து வாழ்வுக்கு அர்த்தத்தையும் நோக்கத்தையும் சமயம் வற்புறுத்தி வந்துள்ளது.

மனித ஒழுக்கத்தையும் சமுதாய ஒழுங்கையும் பேணி வளர்ப்பதற்குச் சமயம் உதவி வந்துள்ளது. ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதற்கும் ஏனையவரிடத்துப் பரிவுகாட்டுவதற்கும் இறையச்சம் காரணமாகிறது. இதயமற்ற உலகத்தின் இதயம் என்று சமயத்தைக் கார்ல் மார்க்ஸ் ஒரு முறை வர்ணித்தார். ஒழுக்க வாழ்வின் ஆதாரம் என்ற வகையில் சமயம் வகிக்கும் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடக்கூடாது என்று மாஸ்கோவிலிருந்து வெளிவந்த செய்தித் தாளான இஸ்வெஸ்டியாவில் லெனினின் பாரியாரான கிருப்ஸ்கயா 1937 ஏப்ரிலில் எச்சரித்தார். நல்லது எதுவென்பதையும் கெட்டது எதுவென்பதையும் பற்றிப் பலநூற்றாண்டுகளாகச் சமயம் மக்களுக்குப் போதித்தமையினையும் சமயக் கல்வி பெற்ற பிள்ளைகள் அக்கல்வியினைப் பெறாத பிள்ளைகளைக் காட்டிலும் மேலாக ஒழுகியமையினையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இலட்சியம் எதுவும் இல்லாத உள்ளங்களில் ஒழுக்கத் தரங்களைப் பேணுவது இயலாத காரியம் என்றும், மேலான ஒரு சக்தியிடம் நம்பிக்கையற்ற உள்ளங்களில் இலட்சியம் உறைவது கடினமானது என்றும் கூறுவர். மனிதனை இறைவனோடு இணைக்கும் உறவு மனிதர்களுக்கு இடையிலான உறவினை இறுக்கமாக்க வல்லதாகும். மானிட சமுதாய நலன்கருதிய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் இறைவனோடு இணைந்து செயற்படுகிறவர்கள் ஆவார்கள் என்று கருதப்படுகிறது. மனித நலனில் ஆர்வம் மிகுந்தவராகத்தானே இறைவனைக் கருதுகிறோம்? உண்மையான சமய உணர்வுள்ளவர்கள், எல்லோரையும் இறைவனின் பிள்ளைகளாக நோக்கவேண்டும். மக்களுக்கு ஈயப் படுவது மகேஸ்வரனுக்குச்சேரும் என்ற திருமூலர் கருத்து இங்கு நோக்கத் தக்கது.

இந்து சமயத்தைப் பொறுத்தவரை அது இறைவன், ஆன்மா, படைப்பு, வாழ்க்கை நோக்கு முதலானவை பற்றிய பல்வகை விசாரங்களுக்கு விட்டுக் கொடுப்பதாகவும், மாற்றங்களையும் புதுவரவுகளையும் ஏற்றுக் கொள்வதாகவும், சமூகசீர்திருத்தச் சிந்தனைகள் பலவற்றின் விளைநிலமாகவும் இருந்து வந்திருப்பதை அவதானிக்கலாம். அது வாழ்க்கையோடு இரண்டற இயைந்ததாகவும், உலகியல் வாழ்வுக்கும் ஆன்மீக ஈடேற்றத்துக்கும் வழிகாட்டும் சனாதன தர்மமாகவும் கொள்ளப்படுகிறது. "உள்ளது ஒன்று, அதனை ஞானிகள் பல்வேறு பெயர்களால் அழைப்பர்" என்று இருக்கு வேதமும், "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்றும் "அன்பே சிவம்" என்றும் திருமூலரும், "குறைவிலாது உயிர்கள் வாழ்க" என்று கச்சியப்பரும், "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன்" என்று தாயுமானவரும், "உலகின் செல்வங்கள் அனைத்தையும் விடப் பெறுமதி மிக்கவன் மனிதனே" என்று சுவாமி விவேகானந்தரும், "உண்மையின்பேர் தெய்வம் என்போம்" என்றும் "அறிவொன்றே தெய்வம்" என்றும் மகாகவி பாரதியாரும் கூறியிருப்பவை குறித்து எண்ணிப்பார்க்குமிடத்து மனித வாழ்வு செம்மையும் ஒழுங்கும் வாய்ந்ததாய் அமைய உதவவல்ல இந்து சமயத்தின் வளமும் விசால நோக்கும் விளங்கும். உலகின் ஏனைய பிரதான சமயங்களினதும் அடிநாதமாக அத்தகைய கோட்பாடுகள் அமைந்திருப்பதை விண்டுகாணல் ஏற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 ஆண்டு கலை, கலாசாரத்திற்கு அரும்
பெரும் பணியாற்றி வெள்ளி விழாக் காணும்
மத்திய மாகாண இந்து மாமன்றத்தின்
நற்பணிக்கு நல்லாசிகளை நவழ்வதில்
பெருமகிழ்ச்சி அடைகின்றோம்!

*
*
*
*

# மொனரா டெக்ஸ்

**35, யட்டிநுவர வீதி**
(சில்வர்டேல் கம்ப்ளக்ஸ்)
**கண்டி.**

தொலை பேசி: 071 - 22693



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை அடக்கிச் செயலற்றவர்களாகவும் ஆதிக்கத்தில் உள்ளவர்களுக்குப் பணிவுடையவர்களாகவும் வைத்திருக்க உதவுவதாகச் சமயம் இருந்துள்ளது என்று சிலர் கூறுவர். ஆனால், பல சமுதாய சீர்திருத்தங்களுக்குச் சமயம் கருவியாய் அமைந்தமையினையும் வரலாற்றில் அவதானிக்கலாம். இந்து சமயம் பல சீர்திருத்த இயக்கங்களுக்கும் தேசிய விடுதலை இயக்கங்களுக்கும் ஊடகமாக அமைந்தது. வேண்டிய சமுதாய மாற்றங்களைச் செயற்படுத்த உதவும் பிரதான சக்தியாகச் சமயத்தைக் கருதிய சுவாமி விவேகானந்தர், "இந்தியாவில் அரசியல் பேச வேண்டுமானால், சமயத்தின் மொழியிற் பேசவேண்டும்" என்று கூறியமை எண்ணிப்பார்க்கத்தக்கது.

மக்களுக்குள் உறவினையும் பணிவுடைமையினையும் வளர்ப்பதற்கும், சபலங்களையும் சஞ்சலங்களையும் அகற்றுவதற்கும், வாழ்க்கையை அர்த்தமும் குறிக்கோளும் உடையதாக்குவதற்கும் உதவிய சமயத்தின் முக்கியத்துவத்தினையும், மனிதவாழ்வில் ஒழுங்கினையும் பாதுகாப்பினையும் வசதிகளையும் வளத்தினையும் உறுதிப்படுத்தும் ஊடகமாக அமைந்த பண்பாட்டின் முக்கியத்துவத்தினையும் குறைத்து மதிப்பிடல் சாலாது. மனிதனை ஒரு பண்பாட்டுப்பிராணி என்று சமூகவியலாளர் கூறுவர். பண்பாடு எனப்படுவது விலங்குகளிலிருந்து அவர்களை வித்தியாசப்படுத்தும் அறிவு, மொழி, நம்பிக்கைகள், ஒழுக்கவிழுமியங்கள், கலைகள், சட்டங்கள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள் முதலான மனித தேட்டங்களை உள்ளடக்கியதாகும்.

பண்படுத்துவதென்றால் திருத்துவது, கூடிய பயன் தரத்தக்கதாக்குவது என்று பொருள் படும். தமிழிலக்கியங்களில், சிறப்பாக திருக்குறளில், பண்புடைமை பற்றிக் கூறப்படுவனவற்றைத் தொகுத்து நோக்கும் போது, அன்புடைமையும் அறிவுடைமையும் வழியுறுத்தப்படுவதை அவதானிக்கலாம். அன்பும் அறிவும் உடையவர்கள் பகைமையொழித்துப் பிறர்நலம் பேணி வாழ்வர் என்றும் அவர்களே உலக வாழ்வுக்கு ஆதாரமாய் அமைவர் என்றும் கருதப்பட்டது. தமக்கெனவன்றிப் பிறர்க்கென முயலுபவர்கள் இருப்பதனாலேதான் இவ்வுலகமே உய்ந்திருக்கிறதென்று சங்கப்புலவனான இளம்பெரு வழுதியும், பண்புடையோர் இருப்பதனாலேதான் இவ்வுலகம் உய்ந்திருக்கிறதென்று திருவள்ளுவரும் கூறியிருக்கின்றனர். கண்ணோட்டம் (பழகியவர்களிடத்து அன்புடைமை) என்கின்ற பேரழகு இருப்பதனாலே தான் இவ்வுலகம் உய்ந்திருக்கிறதென்று இன்னோரிடத்தில் திருவள்ளுவர் கூறியிருப்பதனையும், பகைமை உள்ளத்தால் உண்டாகும் மனவேறுபாட்டினைப் 'பண்பின்மை பாரிக்கும் நோய்' என்று அவர் கடிந்திருப்பதனையும் ஒருசேர நோக்குமிடத்துப் பண்புடைமை பற்றிய திருவள்ளுவரது கருத்துத் தெளிவாகும்.

பண்பாட்டை வடமொழியில் சன்ஸ்கிருதி என்பர். தூய்மைப்படுத்துவது, செம்மைப்படுத்துவது, மாற்றத்தை ஏற்படுத்துவது என்றெல்லாம் அச்சொல் பொருள்படும். செம்மையடைந்த மனிதன் பகுத்தறியும் வல்லமை வாய்க்கப்பெற்றவனாகவும் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்றபோக்கில் நடந்துகொள்ளாதவனாகவும் இருக்கவேண்டும். இந்துப் பண்பாட்டில் மனிதனது மெய்ப்பொருள் காணும் புத்திக்கு மேன்மையான இடம் வழங்கப்பட்டுள்ளது. அதுவே அவனை மிருக நிலையினின்று தெய்வீக நிலைக்கு மேம்படுத்தவல்லது என்று நம்பப்பட்டது. நியாயமான கூற்று ஒரு குழந்தையினதாக இருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், நியாயமற்றதைப் படைத்தவனே கூறுவானாயினும் அதனைத் துரும்பென ஒதுக்கிவிட வேண்டுமென்றும் வசிட்டமுனிவர் தன் சீடனான இராமனுக்குப் போதித்ததை 'யோக வாசித' மூலம் அறியலாம்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற வள்ளுவர் வாக்கினை வசிட்டர் வாக்குடன் ஒப்பு நோக்கலாம்.

பகுத்தறியும் புத்தியுள்ளவன் தன் அறிவினை எப்போதும் செம்மைப்படுத்தி வளர்ப்பதில் குறியாக இருப்பான். மனிதனது ஆத்மா தொடர்ந்து தூய்மையடைந்தவண்ணம் இருக்கவேண்டியமை பற்றிச் சமயம் பேசும். ஏனைய விலங்குகளுக்கு ஓர் இலக்கினை எய்தும் நோக்கோடு செயல்களைத் திட்டமிடத் தெரியாது. தீமையை விலக்கி, நன்மையிற் செலுத்தும் அறிவு அவற்றிற்கு இல்லை. அவ்வறிவினைப் பெற்ற மனிதன் தீமையை விலக்கி நன்மையை வளர்க்கவேண்டும். அதற்கு ஆதாரமாக அமைந்தவை சமயமும் பண்பாடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழாக் காணும்
மத்திய மாகாண இந்து மாமன்றத்திற்கு
எனது மனப்பூர்வமான நன்றியும்
நல்வாழ்த்துக்களும் உரித்தாகுக

**பி.ஆர். சோமசுந்தரம்**

காப்புறுதி ஏஜென்ட்

28/3A, வீரக்கோன் காடர்ன்ஸ்

கண்டி.

✆ 08-33443

*With Best Compliments from:*

Distributors for:

- HOECHST (CEY) CO. LTD.
- EMMAR PHARMA PVT. LTD.
- JEE KRISH ENTERPRISE PVT. LTD.
- MEGA PHARMA PVT. LTD.
- MASTER FEEDS DISTRIBUTORS PVT. LTD.

**UNION CHEMISTS**

99/1, TRINCOMALEE STREET
KANDY

☎ 08 - 33391



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தினதும் பண்பாட்டினதும் பிரதான ஆதாரமாகக் கொள்ளப்படுவது தர்மமாகும். உலகத்து உயிர்கள் அனைத்தையும் ஒன்றுபடுத்தியும் பாதுகாத்தும் வைத்திருப்பதும் ஆன்மீக நலத்திற்கும் உலகியல் செழிப்புக்கும் அடிப்படையானதும் தர்மமே என்று நம்பும் இந்து மக்கள் 'தர்மம் தலைகாக்கும்' என்று அடிக்கடி கூறிக்கொள்வர். பயத்தினாலோ, இன்பத்தை வேண்டியோ, உலகியல் இலாபம் கருதியோ அல்லது உயிரச்சம் காரணமாகவோதானும் தர்மம் பிழைக்கலாகாது என்று மகாபாரதம் கூறுகிறது. தனக்கு நடக்கக் கூடாதவை என்று கருதுபவற்றைப் பிறருக்குச் செய்யாமல் இருப்பதும், தன்னால் விரும்பப்படுவவை பிறருக்கும் கைகூட வேண்டுவதுமே தர்மத்தின் சாராம்சமாகும் என்று மகா பாரதம் கூறும். ஒருவன் தன் வாழ்க்கையில் துன்பமானவை எனக் கண்டுணர்ந்தவைகளை மற்றவனிடத்துத் தவிர்க்கவேண்டும் என்று வள்ளுவர் கூறியுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கது. ஆன்மாவை உயர்நிலைப்படுத்துவது தர்மமே என்று சமண சமயமும், வாழ்க்கையின் ஆதாரமே தர்மம் தான் என்று பௌத்த சமயமும் கூறுவதும் இங்கு கருதத்தக்கது.

செம்மையையும் ஆன்ம ஈடேற்றத்தையும் விரும்புபவன் இன்னவழியைத்தான் பின்பற்ற வேண்டுமென்று இந்துசமயம் வற்புறுத்திக் கூறுவதில்லை. ஒவ்வொருவரும் தனக்கு உவந்த வழியினைக் கடைப்பிடிப்பது அனுமதிக்கப்பட்டுள்ளது. இறைவனை அவர்கள் எந்தப் பெயர்க்கொண்டும் அழைக்கலாம், எந்த வடிவில் வைத்தும் வழிபடலாம், அருவமாய்க் கொண்டாலும் கொள்ளலாம். உண்மையினையும் நன்மையினையும் அழகினையும் போற்றி வளர்ப்பதே முக்கியமென்று கருதப்படுகின்றது. மனிதன் இயல்பினையும், ஏனைய உயிரினங்களோடும் பிரபஞ்சத்தோடும் அவனுக்கமைந்த தொடர்பினையும் பற்றிய ஆழமான அறிவின் அடிப்படையிற் கட்டியெழுப்பப்பட்ட இந்து நாகரிகம் சிறந்தவை எனக்கண்டவை யாவற்றையும், அவை எங்கிருந்து வந்தபோதிலும், வரவேற்றுத் தன்மயமாக்கிக் கொண்டது. ஆன்மீக ஈடேற்றத்தில் மட்டும் நாட்டமுடையதாய் உலகியல் வாழ்வினை அது புறக்கணிக்கவில்லை. மனிதகுல நலன் கருதி மெய்ஞானத்தை வளர்த்தது போலவே விஞ்ஞானத்தையும் அது வளர்த்தது. இந்தியக் கல்வி வளர்ச்சியில் முதலாவது முக்கிய தேசிய முயற்சியாக அமைந்த காசி இந்துப் பல்கலைக்கழகம் இந்திய சமய, தத்துவ, கலை, இலக்கியத்துறைகளில் சிறந்தவை யாவற்றையும் பேணுவதையும், மேலைத்தேச விஞ்ஞானத்தின் சிறந்த யாவற்றையும் உள்வாங்குவதையும் நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. "சென்றிடுவீர் எட்டுத் திக்கும் – கலைச்செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்று மகாகவி பாரதி பாடியது குறித்தும் இச்சந்தர்ப்பத்தில் எண்ணிப்பார்த்தல் பொருத்தமாகும். திறந்த மனதோடும் தன்நம்பிக்கையோடும் மனிதமேம்பாட்டுக்கு உகந்தவற்றை ஏற்றும் போற்றியும் வந்தமை இந்துப்பண்பாட்டின் சிறப்பென்று வரலாற்றாசிரியர் கூறுவர்.

சமயம், பண்பாடு என்பவை அடிப்படையில் உள்ளமும் மனதும் சம்பந்தப்பட்டவை என்பதை மறந்து விடலாகாது. வெளித்தோற்றங்களும் பூசைகளும் அர்ச்சனைகளும் அபிஷேகங்களும் கோபுரங்களும் திருவிழாக்களுமே சமயம் ஆகிவிட முடியாது. அதே போல அலங்கார நடையுடை பாவனைகளும் மாளிகைகளும் வாகனங்களுமே பண்பாடாகி விட முடியாது. அடுத்தவர் துன்பங்களையும் அநீதிகளையும் நோக்கும் விதமும் அணுகும் முறையுமே ஒருவரது சமய உணர்வையோ பண்பாட்டுணர்வையோ புலப்படுத்துவன ஆகும். சமயமும் பண்பாடும் ஏனையவர்களிடத்து அன்பின் வழிப்பட்ட ஆர்வமுடைமையினை வளர்த்துக் கொள்வதற்கு உதவுவனவாதல் வேண்டும். மனித வாழ்க்கை அமைதிக்கும் அதுவே வழியாகும்.

சமயங்கள் இறைவனைக் கருணைமிகுந்தவனாகவே காண்கின்றன. "தயாமூல தன்மமே" என்று திருநாவுக்கரசரும், 'தாயினும் சாலப் பரி'வுடையவனென்று மாணிக்கவாசகரும் இறைவனை வர்ணிப்பர். இறைவன் குணங்கள் என்று போற்றப்படும் அன்பையும் பரிவையும் மக்கள் மத்தியில் வளர்க்கச் சமயங்கள் முயல்கின்றன. பண்பாடு குறித்துப் பலவாறாய்ப் பேசலாமாயினும், அதன் சாராம்சத்தைக் கூறவேண்டுமாயின், அகத்திலும் புறத்திலும் அமைதியும் அழகும் பொருந்திய சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:

# NEW MEDICENTRE

**12-1/4 1st Floor**
**E. Francis Perera Building**
**Yatinuwara Vidiya**
**KANDY.**



With Best Compliments From:

❑
❑
❑
❑
❑

# Ruby Iron & Steel

**465, OLD MOOR STREET,**
**COLOMBO-11**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளப்பாங்கே பண்பாடு எனலாம். சமய சாத்திரங்களும் திரிகரண சுத்தி, அதாவது மனம் மொழி மெய் என்பவற்றின் அமைதி பற்றிப் பேசுகின்றன. எல்லா உயிர்களிடத்தும் இறைவனைக் காணும் பண்பும் கைமாறு கருதாத அன்பும் மிக உயர்வாகப் போற்றப்படுகின்றன. எத்தனை வழிபாடுகள் நிகழ்த்தி எத்தனை புண்ணியத் துறைகளில் மூழ்கினாலும் 'எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே' என்கிறார் திருநாவுக்கரசர். 'கூடும் அன்பினால் கும்பிடுதலேயன்றி வீடும் வேண்டா விறலினர்' என்று மெய்யடிமைத் திறனைச் சேக்கிழார் போற்றுகிறார். கடவுளிடத்துக் காட்டுவது போன்ற கைமாறு கருதாத அன்பினை மக்களிடத்தும் காட்டுவது உயர்ந்த சமய நிலையும் பண்பாட்டு நிலையும் ஆகும். வேடன் கண்ணப்பன் 'பொருவில் அன்புருவமாகி' சிவாச்சாரியாரைக் காட்டிலும் மேலானவனாகச் சிவனால் மதிக்கப்படும் நிலையினை அடைந்தமையினை, ஆசாரம், அனுட்டானம், அறிவு, தொழுகை ஒன்றும் இல்லாதவர்களும் சுயநலங்கருதாத நற்கருமங்களால் உயர்நிலை எய்தல் கூடும் என்பதற்கு ஓர் உதாரணமாகக் காட்டலாம்.

"கடமை யாவன தன்னைக் கட்டுதல்
பிறர் துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல்."

என்று பாரதியார் தன் விநாயகர் நான்மணி மாலையிலே கூறுகிறார். அது சமயத்துக்கும் பொருந்தும், பண்பாட்டுக்கும் பொருந்தும். ஏனெனில், அது மானிட வாழ்வைப் பயனுடைத்தாக்கவும் அழகுடைத்தாக்கவும் உதவும்.

நவீன சமுதாய வாழ்வு சிக்கல் மிகுந்த பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதாய் உள்ளதென்று கூறப்படுகிறது. இதனைத் தொல்லை மிகுந்த காலம் என்றும் அங்கலாய்ப்பு மிகுந்த காலம் என்றும் நம்பமறுக்கும் காலம் என்றும் வர்ணிக்கின்றார்கள். ஆனால், எதிர்மறை நிலையிலோ மறுதலிப்பிலோ மனிதவாழ்வு அமைதிகாணவியலாது. அமெரிக்கா முதலான அபிவிருத்தியடைந்தவை எனக்கருதப்படும் நாடுகளில் மானிடப் பொதுநலக் கருமங்களில் மக்களை ஈடுபடுத்துவதற்கான புதுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏனையோர் நலனில் ஆர்வமுடைமையினை வளர்ப்பதன் வாயிலாகவே பொறுப்புணர்வுடைய குடிமக்களை உருவாக்கமுடியும் என்ற குரலினை அந்நாடுகளில் இன்று கேட்கமுடிகிறது. பிறர் நலம் நாடுவோர் அருகியவிடத்துச் சுதந்திரமும் ஜனநாயகமும் நிலைக்க முடியாது என்று கூறப்படுகிறது. தம்பொருட்டன்றிப் பிறர்பொருட்டு வலிய முயற்சிகளை மேற்கொள்பவர்களே உலக இருப்புக்கு ஆதாரமாயுள்ளவர் என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எமக்குக் கூறப்பட்டதாகும்.

இன்னொரு விதமான வினா எழக்கூடும். யாதும் ஊரே யாவரும் கேளிர், பெரியோரை வியத்தலுமிலமே சிறியோரை இகழ்தல் அதனினுமிலமே, புகழெனின் உயிரையும் கொடுக்குவர், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும், அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும் என்பவையெல்லாம் எமது பண்பாட்டையும் அன்பே சிவம், ஒன்றே குலம் ஒருவனே தேவன், மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை, என்கடன் பணிசெய்து கிடப்பதே போன்ற கூற்றுக்கள் எமது சமயத்தையும் பிரதிபலிப்பவை என்றெல்லாம் பெருமை பேசுகிறவர்கள் அவற்றுக்கேற்பத் தமது வாழ்க்கையை அமைத்துக்கொண்டுள்ளனரா என்று கேட்கப்படலாம்.

இன்றைய நடைமுறை வாழ்க்கையில் எல்லோரும் அவற்றை முழுமையாகக் கடைப்பிடிக்க முடியாமைக்குப் பல காரணங்கள் காட்டப்படலாம். ஆனால், அவ்வுயர் விழுமியங்களுட் பல வெறும் இலட்சியங்களாகவே இருந்தாலும் அவற்றையிட்டு யாம் பெருமைப்படுவதில் தவறில்லை. ஒரு மக்கட் சமுதாயத்தின் உயர்ந்த சிந்தனைகள் சாதனைகளையும், வாழ்க்கையின் அர்த்தம் குறித்த அவர்களுடைய கோட்பாடுகளையும், அவர்கள் எட்டமுயலும் மகோன்னத நிலையினையும் அவர்களுடைய சமயமும் பண்பாடும் பிரதிபலிப்பனவாகும். அந்நிலையினை எய்த வலியமுயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளல் சாலும்.

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்".

(திருவள்ளுவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சோமசுந்தரம் சந்திரசேகரம் பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1967இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பி. ஏ. (சிறப்பு) பட்டத்தையும், 1980இல் ஜப்பானிலுள்ள ஹிரோசிமா பல்கலைக்கழகத்தில் எம். ஏ. பட்டத்தையும் பெற்றவர். தற்போது கொழும்புப் பல்கலைக்கழத்தில் சமூக அறிவியல் பிரிவின் கல்வித் துறைப் பீடத்தில் முதலாம் தர சிரேஷ்ட விரிவுரையாளராகவும் அப்பிரிவின் தலைவராகவும் பணியாற்றுகிறார்.

மேலும் இவர் பத்துக்கு மேற்பட்ட கல்வி சம்பந்தமான ஆய்வு நூல்களையும், பதினான்கிற்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள், அறிக்கைகளையும், ஐந்து மொழி பெயர்ப்பு நூல்களையும் எழுதியுள்ளார். இப்படைப்புகளுக்காகவும், கல்வி சமூகத்துறைப் பங்களிப்பிற்காகவும் பல பரிசுகளையும் விருதுகளையும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெற்றுள்ளார்.

(ஆ....ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானக் கல்வியும் ஒழுக்க விழுமியங்களும்

– சோ. சந்திரசேகரன் –
(கல்வித்துறைத் தலைவர் – கொழும்புப் பல்கலைக்கழகம்)

பண்டைய சமூக வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் சமயக் கோட்பாடுகளும் சித்தாந்தங்களும் செல்வாக்குச் செலுத்தி வந்தன. இது கீழைத்தேய, மேலைத்தேயங்கள் உட்பட சகல சமூகங்களுக்கும் பொருந்தும். சமூக வாழ்க்கையின் ஒரு முக்கிய அம்சமான கல்வி நிறுவனங்கள் சமயக் குரவர்களாலேயே காலங்காலமாக நடாத்தப்பட்டன. அவர்களே கற்றவர்களாகவும் கல்வி கற்பிக்கத் தகுதியும் நேரமும் வாய்ப்பும் உள்ளவர்களாகவும் காணப்பட்டனர். இந்து சமய மரபில் உயர்ந்த சமயக் குரவர்களாக விளங்கிய பிராமணர்கள் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கி ஆட்சியாளர்களுக்கும், உயர்குடிப்பிறந்தோருக்கும் கல்விப்பயிற்சி வழங்கினர். மொழியறிவு, ஆட்சிக்கலை மற்றும் பல்துறை சார்ந்த அறிவுடன் நல்லொழுக்கங்களும் அக்கால சமூகம் போற்றிய வாழ்க்கைப் பெறுமானங்களும் மனித விழுமியங்களும் கல்விச் செயற்பாட்டில் பெரிதும் வலியுறுத்தப்பட்டன. புற உலகு பற்றிய சமூகவியல், இயற்கை விஞ்ஞான ஆய்வுகளன்றி தியான முறைகளைப் பயன்படுத்தி அகவுலக உண்மைகளை அறியவும் மானிடப் பிறவியை முற்றாக அறுத்து முத்தியை அடைவதற்கான வழிமுறைகளையும் ஞானத்தையும் பெறுவதையே இந்து சமயக் கல்வி மரபுகள் வலியுறுத்தின. அறிவு, ஆற்றல், திறன்கள் என்பவற்றை வளர்ப்பதற்கு மேலாக நற்குணங்களும் சீரிய ஒழுக்கங்களும் மனித நேயங்களும் நிறைந்தவனை உருவாக்குவதையே பாரம்பரிய சமயங்களும் அவை எடுத்துணர்த்திய கல்வி மரபுகளும் வலியுறுத்தின.

நவீன கல்வி முறைகள் இவ்வுயரிய கல்வியின் நோக்கங்களை மட்டுமன்றி கல்விச் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்திய சமயச் சிந்தனைகளையும் சமயத்தத்துவங்களையும் ஒதுக்கி சமயச் சார்பற்ற கல்வியே நவீன உலகுக்கு ஏற்றது என்ற கருத்தை நிலைநாட்ட முற்பட்டன. நாட்டினதும் சமூகத்தினதும் தனிமனிதனதும் பொருளாதார, உலகியல் தேவைகளின் அடிப்படையில் கல்வி முறைகள் மாற்றியமைக்கப்பட்டன. கல்வியின் நோக்கங்களும் பாட உள்ளடக்கமும் உலகியல் சார்புள்ள முறையில் தீர்மானிக்கப்பட்டன. விஞ்ஞானம், தொழில்நுட்பம், தொழில்சார் திறன்கள் பொருளாதார விருத்திக்கான உளப்பாங்குகள் கல்விச் செயற்பாட்டில் முக்கியத்துவம் பெற்றன. கல்வியியலில் பொருளியல் நோக்கும் பொருளியலாளரின் ஆதிக்கமும் அதிகரிக்க அதிகரிக்க, கல்வியின் பயன் கல்விப் பேறேயன்றி வேறில்லை என்ற உயர் இலட்சியங்கள் மதிப்பிழந்து உணர்வும் உயிரோட்டமும் நிறைந்த மனிதன் "மனித சாதனம்", "மனித வளம்", "மனித மூலதனம்" என, பொருளுற்பத்தி செய்முறைக்கு உதவும் பண்டமாக்கப்பட்டான். பொருளாதார உற்பத்தி, தலாவருமானம் என்பவற்றின் அதிகரிப்பை வலியுறுத்திய அபிவிருத்திக் கோட்பாடு, பொருளுற்பத்திக்குப் பயன்படக்கூடிய வகையில் மனிதனை பயிற்றுவதே கல்வி எனப் பிரகடனம் செய்தது. ஆயினும் பொருளியல் சித்தாந்தங்கள் கல்விமுறைகளில் மேற்கொண்ட மிதமிஞ்சிய நிர்ப்பந்தம் வெற்றி பெறவில்லை. அதிகரித்த கல்வி வாய்ப்புகளால் எதிர்பார்த்த "மனித சாதனமும் மனித வளமும்" உருவாகவில்லை. உற்பத்திக் குறைவு, வறுமை, வேலைவாய்ப்பின்மை, குறைந்த வாழ்க்கைத்தரம் என்பவையே வளர்முக சமூகங்களின் அடிப்படை பிரச்சினைகளாயின. கல்வி வளர்ச்சியினால் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. அத்துடன் கல்விச் செயற்பாடு வலியுறுத்த மறந்த விழுமியங்களும் ஒழுக்கங்களும் உயரிய வாழ்க்கைப் பெறுமானங்களும் படிப்படியாக சீர்கேடடைய நேர்ந்தது.

இந்நிலையில் இன்று மீண்டும் கல்விச் செயற்பாட்டினூடாக உயர்ந்த ஒழுக்க விழுமியங்களை மாணவர்களுக்கு உணர்த்த வேண்டுமென்ற சிந்தனை உலகளாவிய ரீதியில் உருவாகியுள்ளது. மாணவர்கள் தமது சமயம் பற்றிய கல்வியினூடாகவோ அல்லது பல்வேறு பாட ஏற்பாட்டுப் பணிகளினூடாகவோ சிறந்த விழுமியங்களைப் பயில வேண்டும் என்பது கல்வியாளர்களின் முக்கிய குறிக்கோளாக உள்ளது. ஒழுக்கக்கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம், கலைகள் வளர அரும்பணியாற்றிவரும்
மத்திய மாகாண இந்து மாமன்றத்தின்
சேவைக்கும், செயல் திறமைக்கும்
எமது பாராட்டுக்கள்.

# சுபஸ்ரீ

**பிரபல மொத்த ஜவுளி விற்பனையாளர்**

114/3, 3ம் குறுக்குத் தெரு
கொழும்பு - **11.**

தொலை பேசி: **423838**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது சிறந்த மனித விழுமியங்களைப் பயிலுதலும் அவற்றை வாழ்க்கை நெறியாக கடைப்பிடித்தலையும் வலியுறுத்துவதாகும். ஒவ்வொரு பண்பாட்டுக் குழுவினரும் ஒவ்வொரு வகையாக இவ்வொழுக்க விழுமியங்களைக் கற்பிக்கின்றார்கள். ஆயினும் ஒழுக்கக் கல்வியின் குறிக்கோள்கள் பற்றி அவர்கள் மத்தியில் அதிக வேறுபாடுகள் இல்லை. மாணவர்களின் ஆற்றலை முழுவதாகவும் ஒன்றிணைந்த முறையிலும் வளர்த்து அவர்களின் ஆத்மீக, அறிவுசார் விருத்தியையும் சிறந்த உடல், மனவெழுச்சி விருத்தியையும் காணமுயல்வது சகல சமூகங்களின் ஒழுக்கக் கல்வியின் பொதுப்படையான குறிக்கோளாகும். ஒழுக்க அல்லது விழுமியக்கல்வி அரசியல், பொருளாதார உறுதிப்பாட்டுக்கும் பெரிதும் உதவக் கூடியது. அதிகாரத்துக்குக் கட்டுப்படுதல், கடும் உழைப்பில் நம்பிக்கை வைத்தல், பிற மக்களையும் அவர்தம் பண்பாடுகளையும் மதித்தல் போன்ற குணவியல்புகள் அரசியல் உறுதிப்பாட்டுக்கும், தேசிய ஒருமைப்பாட்டுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் அவசியமானவை. அத்துடன் நடைமுறையிலுள்ள சமூக அமைப்புகளையும் அதிகார உறவுகளையும் பேண இவ்விழுமியக் கல்வி உதவும்.

இன்று சகல நாடுகளிலும் முழுப்பாடசாலைக் கல்வியிலும் விஞ்ஞானப் பாடம் கட்டாய பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. இப்பாடத்தினூடாக சிறந்த மனித விழுமியங்களைக் கற்பிக்கலாம் என்பது நவீன கல்வியாளர்களின் கருத்து. கடந்த சில தசாப்தங்களாகச் செய்யப்பட்ட ஆய்வுகள் விஞ்ஞானத்தை, குறிப்பாக பௌதீகவியலை தத்துவ ஞானமாக உருவாக்கிவிட்டன. விஞ்ஞானத்தின் தத்துவவியல், ஒழுக்கவியல் அம்சங்கள் பற்றி இன்று அறிஞர்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர். அதே வேளையில் விஞ்ஞான சிந்தனைகள் தத்துவஞான சிந்தனைகளிலிருந்து பிறந்தவை என்பதை யாவரும் அறிவர். 19ம் நூற்றாண்டில் பரிசோதனை முறை தரவுகளுடன் அனுமானங்களைப் பொருத்திப் பார்க்கும் முறை என்பவற்றின் செல்வாக்கால் வளர்ச்சியுற்ற நவீன விஞ்ஞானம், இயற்கையின் இரகசியங்களையும் பல்வேறு தோற்றப்பாடுகளையும் நன்கு அறிய உதவியது. இதனால் விஞ்ஞானிகள் விஞ்ஞானமே உண்மை; அதற்கு அப்பால் வேறு எதுவும் உண்மையில்லை என்ற அதீத நம்பிக்கையுடன் செயற்பட்டனர். விஞ்ஞான உண்மைகள் எவையும் பரீட்சித்துப் பார்த்து அறியக் கூடியவை. விஞ்ஞான அறிவுக்குட்படாதவை நம்பத் தகுந்தவை அல்ல என முடிவு செய்யப்பட்டது. ஆயினும் ஒரு விஞ்ஞானி தனது ஆராய்ச்சிகளை சரிவரச் செய்யத் தேவைப்படும் ஒழுக்க, அற விழுமியங்கள் எவ்வாறு தோன்றின என்பதை விஞ்ஞான ரீதியாக ஆராய முடியாது. விஞ்ஞானிகளின் வாழ்க்கை வெற்றிக்குப் பயன்படக் கூடிய அவ்விழுமியங்கள், மனித மேம்பாட்டுக்கென சமயங்கள் வகுத்துக்கூறிய விழுமியங்களிருந்து வேறுபட்டவையல்ல. முன்னைய விஞ்ஞான ஆராய்ச்சிகளை மேலும் செம்மைப்படுத்த முற்படும் விஞ்ஞானிக்கும் சில விழுமியங்கள் தேவை. 'அவற்றில் செம்மையில்லை' என்ற அம்சம் விஞ்ஞானத்தையும் மனித விழுமியங்களின் வரம்புக்குள் கொண்டு வருகின்றது. அதனை நீக்கி முழுமையாக செம்மைப்படுத்தல் என்பது அடையமுடியாததொன்று. இப்பண்பு இன்று விஞ்ஞான ஆராய்ச்சிகளிலும் செயற்பாடுகளிலும் ஏற்றுக் கொள்ளப்படுவதொன்று. அத்துடன் இப்பண்பு கருத்தியல் ரீதியாக தத்துவ, சமய நம்பிக்கைகளுடன் பெருமளவு ஒத்துச் செல்வது. விஞ்ஞானி ஐன்ஸ்டைன் இதனையே "விஞ்ஞானமற்ற சமயம் குருட்டுத்தனமானது; சமய அம்சமற்ற விஞ்ஞானம் முடமானது; செயலற்றது" என வர்ணித்தார். உண்மையான விஞ்ஞானம், உண்மையான சமயம் என்பவற்றின் இறுதி நோக்கம் ஒன்றேயாகும். விஞ்ஞானம் முன்னேற்றமடைந்து முதிர்ச்சி அடைய அடைய அதன் பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. விஞ்ஞானம் முதிர்ச்சியடைந்து, கருத்தியலாகும் போது அது தத்துவ வடிவம் பெறுகின்றது. விஞ்ஞானம் வெளியிடும் உண்மைகள், தத்துவ உண்மைகளாகின்றன. காந்தியடிகள் தமது சத்திய சோதனையின் முடிவில் உண்மையையே கடவுளாகக் கண்டார். இந்திய தேசிய சின்னம் 'உண்மையே வெல்லும்' என்று பிரகடனம் செய்கின்றது. இவை யாவும் விஞ்ஞான – தத்துவ இடைத்தொடர்பு மிக நெருங்கியுள்ளதைக் காட்டுகின்றது.

எனவே விஞ்ஞானக் கல்வியின் பணி இறுதி உண்மையை அறிவதாகும். எமது சமூகத்தில் நிலவும் பொய்மைகள், மூட நம்பிக்கைகள் என்பவற்றைக் கலைந்து பகுத்தறிவின் அடிப்படையிலான ஒரு சமூகத்தை உருவாக்க விஞ்ஞானக் கல்வி உதவும். மூடநம்பிக்கை, அமானுஷ்ய சக்திகளில் நம்பிக்கை வைப்பது, தெரியாதனவற்றையிட்டு பீதி கொள்ளல், போதிய ஆதாரமற்றவற்றை நம்புதல் என்று வரையரை செய்யப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழாக் காணும்
**கண்டி மத்திய மாகாண இந்து மாமன்றத்திற்கு**
எமது நல்வாழ்த்துக்கள்

# ரகுலன்ஸ்

**ஜவுளி வியாபாரமும் அடைவு நகை பிடிப்பாளர்களும்**

**87, கொழும்பு வீதி,**
**கண்டி.**
✆ 08 - 24290

கண்டி தேர்த் திருவிழாவினை நடத்த அமைக்கப்பட்ட
கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய
தேர்த் திருவிழா சபை
மத்திய மாகாண இந்து மாமன்றம்
என பெயர் மாற்றப்பட்டு பல அளப்பரிய சேவைகளை செய்து,
தனது வெள்ளி விழாவினைக் காணும் இவ்வேளை
மன்றத்தினரை மனதார வாழ்த்துகிறோம்.

# லிபட்டி ஹாட்வெயார்ஸ்

29, கொழும்பு வீதி,
கண்டி.

✆ **08 - 22028**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் நோபல் பரிசு பெற்ற பௌதிகவியல் அறிஞர் பி. குஷ் என்பாரின் கருத்தில் மூட நம்பிக்கை என்பது பரிசீலிக்கப்படாத அறிவு என்பதாகும். மூட நம்பிக்கை என்பது ஒரு பண்பாட்டிற்கோ ஒரு சமயத்துக்குரியதோ அன்று. மனித சமூகங்கள் எங்கும் மூட நம்பிக்கைகள் பரந்து காணப்படுகின்றன. விஞ்ஞானக் கல்வி சமுதாயங்களில் ஆழப்பதிந்து கிடக்கும் மூட நம்பிக்கைகளை ஆராய உதவுகிறது. மூட நம்பிக்கைகள் பற்றிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை மக்கள் மத்தியில் பரப்பிட வேண்டும். இதற்கு விஞ்ஞானிகள் சமூகத்தின் சமூக, பண்பாட்டு விழுமியங்களை நன்கு விளங்கிக் கொள்ளுதல் அவசியம். அத்துடன் அவர்கள் பொது மக்களின் மொழியில் இந் நம்பிக்கைகளை அகற்றிப் பயனுள்ள வாழ்க்கை விழுமியங்களை அவர்களுக்கு வழங்க முயற்சிக்க வேண்டும்.

பாடசாலைக் கல்வியில் கட்டாய பாடமாக உள்ள விஞ்ஞானம் நவீன வாழ்க்கைக்குத் தேவையான விழுமியங்களை வழங்குகின்றது. மாணவர்கள் கற்கும் விஞ்ஞான முறையியல், விஞ்ஞான உளப்பாங்குகள் என்பன அவர்களில் சிறந்த மனப்பாங்கையும் அறிவுசார் நேர்மையையும் வளர்க்க உதவும். பிறரை கௌரவிக்கும் உணர்வை இதனால் வளர்க்க முடியும். மேலும் சமுதாய பயனுடைய ஒழுக்க, அற, அழகியல் விழுமியங்களை வழங்கித் தனியாளின் வாழ்க்கை செம்மைப்பட விஞ்ஞானக் கல்வி உதவும். விஞ்ஞானத்தின் தவறான உபயோகங்கள் தூய்மையான சுற்றாடல் சூழற் தொகுதியைப் பேணல் போன்றவற்றுக்குத் தேவையான உளப்பாங்குகளையும் விழுமியங்களையும் வளர்க்க விஞ்ஞானக் கல்வி உதவுகிறது. இப்பின்னணியில் இன்றைய விஞ்ஞானக் கல்வி விழுமியக் கல்வியை மையமாகக் கொண்டு அமைதல் வேண்டும் எனக் கூறப்படுகின்றது. மேற்கூறிய விழுமியங்களைக் கற்றுக்கொள்ள உதவுவது விஞ்ஞானப் பாட உள்ளடக்கத்தைவிட விஞ்ஞானக் கல்விச் செயன்முறைகள் (Process) உதவும். இச்சீரிய விழுமியங்களை மனிதர்கள் போற்றியதன் காரணமாகவே நவீன விஞ்ஞானம் பிறந்தது என்பது வலியுறுத்தப்படவேண்டும். விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகள் பரிசோதனைகள் என்பவற்றின் முழுமுதல் நோக்கு இறுதியுண்மையை அறிவதாகும். உலகளாவிய ரீதியில் சகல சமயங்களும் இவ்வினாவிற்கே விடை காண முற்பட்டமையால் மெய்யியல் நோக்கில் விஞ்ஞானமும் சமயங்களும் மனித மேம்பாட்டுக்கான சிறந்த விழுமியங்களை மனித உலகிற்கு வழங்குவதில் இணைந்து செயற்பட வேண்டும்.

**தோல்விக்குத்துணை சோர்வும் சோம்பலும்.**

**வெற்றிக்கு வித்து வீரமும் தீரமும்.**

**ஒழுக்கமும், அறிவும், பலமும் உடைவயனுக்கு**

**எல்லாம் உண்டு.**

– *தைத்திரியோபனிஷத்* –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி பிரகதாம்பால் நடேசன் கண்டி மோபிரே கல்லூரி, நல்லாயன் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றவர். 1960ல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பையும், 1978ல் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பட்டப் பின் படிப்பையும் பூர்த்தி செய்தவர். 1961ல் கொட்டாஞ்சேனை நல்லாயன் கல்லூரியில் ஆசிரியையாகப் பதவியேற்ற இவர் 31 ஆண்டுகள் அதே கல்லூரியில் தொடர்ந்து சேவை செய்த பின்னர் 1993ல் ஓய்வு பெற்றார்.

(ஆ...ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியபகவானின் சிறப்பு

-திருமதி பிரகதாம்பாள் நடேசன்-

இந்து சமயத்தின் வழிபாட்டு நெறிகளை நெறிப்படுத்திக் காட்டியவர் ஆதிசங்கர பகவத்பாதாள். அவர் வகுத்த சண் மதங்களுள் ஒன்று தான் சௌரம் என்னும் சூரிய வழிபாடு. இதில் சூரியனையே முழு முதற் கடவுளாகக் கொண்டு வழிபாடு நடைபெற்றது. இந்துக்கள் மிகப் பழைய காலத்திலேயே சூரியனில் இறைவனைப் பிரத்தியட்சமாகக் கண்டு வழிபட்டனர். சிவன் அபிஷேகப்பிரியன். விஷ்ணு அலங்காரப்பிரியன். சூரியன் நமஸ்காரப்பிரியன் என்ற நம்பிக்கை கொண்ட இந்து மக்கள் தினமும் ஒரு நிமிட நேரமாவது சூரியனை நமஸ்கரித்தல் வழக்கம். இதனை ஒட்டியே "கண்கெட்ட பின்னா சூரிய நமஸ்காரம்" என்ற சொற்றொடரும் வழக்கில் வந்தது. உலகுக்கேக் கண்ணாகவும் கண்கண்ட தெய்வமாகவும் பிரத்தியட்சமாக விளங்கும் கதிரவனைப் பண்டு தொட்டு உலகமக்கள் பலவகையில் விவரித்து ஆராதித்து வந்துள்ளனர். சூரிய வழிபாடு நம் நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் பரவியிருந்தது. சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே எகிப்தில் சூரிய உபாசனை இருந்திருக்கிறது. கிரேக்கர்களும், ரோமர்களும் வழிபாடு செய்கின்றனர். வட அமெரிக்காவில் மெக்ஸிகோவிலும் தென் அமெரிக்காவில் பெருநாட்டிலும் சூரிய வழிபாடு இருந்ததற்கு ஆதாரங்கள் உள்ளன. தமிழர்களாகிய நாம் எத்தனையோ நூற்றாண்டுகளாக மகர ராசியில் சூரியன் பிரவேசிக்கும் தைமாதப் பிறப்பன்று பொங்கல் விழாக் கொண்டாடுகின்றோம்.

சூரியனையே நவக்கிரகங்களின் நாயகன் என்று சோதிட சாத்திரம் கூறுகின்றது. வாரத்தின் ஏழு நாட்களுள் முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை. ஞாயிறு என்னுஞ் சொல் சூரியன் என்ற பொருள் படும். சில மொழிகளில் ஞாயிற்றுக்கிழமை ஆதிவாரம் எனப்படும். எல்லாக் கிரகங்களுக்கும் ஆதியாக உள்ளது சூரியன் தான் என்பதையேக் குறிக்கும்.

உலகத்துக்கே ஜீவாதாரமாக விளங்கி ஒளியும் உயிரும் வழங்கும் சூரியன் இல்லாவிடில் உலகமே இல்லை. உலகில் உஷ்ணமும் வெளிச்சமும் இருப்பது சூரியனால்தான். பூமியும் சந்திரனும் நட்சத்திரங்களும் சூரியனிடமிருந்தே வெளிச்சத்தைப் பெறுகின்றன. தாவரங்கள் சூரிய வெப்பத்திலிருந்துதான் தம் உணவைத் தயாரித்துக் கொள்கின்றன. சூரிய வெப்பம் இல்லாவிடில் மழை பொழியாது. பூமியில் பயிர் பச்சைகள் வளர்தற்கும் மக்கள் உயிர் வாழ்வதற்கும் இன்றியமையாதது சூரியன்தான். இவ்வாறு உலகில் வாழும் உயிர்களுக்கும் விண்ணில் இயங்கும் நாள் கோள்களுக்கும் இன்றியமையாமல் தேவைப்படுகின்ற சூரியனை யாவரும் கடவுளாகக் கருதிப் போற்றியதில் வியப்பில்லை.


இந்துக்கள் காலை மாலை ஆகிய நேரங்களில் சூரிய பகவானை வணங்கினார்கள். சூரிய ஒளி ஆன்ம சக்தியுள்ளதெனக் கண்டு அதனை மானசீகமாகத் திரட்ட முயன்றார்கள். சூரிய ஒளியில் உள்ள சக்தியை இன்றைய விஞ்ஞானிகள் ஈதர் என்பர். இச்சக்தியை அடையப் பெற்றால் அறிவில் ஒளி உண்டாகும் என்று மெய்ஞ்ஞானிகள் கண்டனர். மந்திரங்களிலேயே சக்தி வாய்ந்ததும், மந்திரங்களுக்கெல்லாம் தாய் மந்திரமாகிய காயத்ரியும் சூரியனையேப் பரவுகின்றது. "நம்முடைய அறிவை யார் தூண்டுகின்றாரோ அந்தச் சுடருடைய இறைவனின் போற்றுதற்குரிய ஒளியைத் தியானிப்போம்." இம்மந்திரம் சைவர், வைஷ்ணவர் என்ற வேறுபாடின்றி யாவராலும் ஜெபிக்கப்படுகின்றது.

வேதங்கள் சூரியனைப் பலவாறாகப் புகழ்கின்றன. சூரிய பகவானின் மங்கல குணங்கள் வேத ஸ்லோகங்களில் நிரம்பியுள்ளன. யசுர் வேத ஸ்லோகங்கள் "சூரியனே! நீ வெற்றியுடையவன். எல்லாவற்றையும் காண்பவன். சோதியை ஆக்குபவன். உலகை ஒளிரச் செய்பவன். சூரியனே! நீ மகான். ஆதித்யனே! நீ பெரியவன். அதனால் நின் பெருமையைப் போற்றுகிறோம்" என்று விவரிக்கின்றன. சாம வேத ஸ்லோகங்கள் சூரியனைத் துதிக்கின்றன. "ஆதித்யனே! நோயை நீக்குவாயாக. இன்னல் புரிகின்ற பகைவரை ஓட்டுவாயாக. கெடுமதியுடையவரை அழிப்பாயாக. எம்மைத் தீவினையினின்றும் நீக்குவாயாக. நீ தான் மூவுலகங்களுக்கும் பதி. நீ தான் நீருக்கும், செடி கொடிகளுக்கும் காவலன். நீயே எல்லாப் பிராணிகளுக்கும் இறைவன்" என்று கூறுகின்றன. அதர்வ வேதம் இருதய நோயையும் காமாலையையும் போக்கச் சூரியனை வழிபடும் விதத்தைச் சொல்கிறது. பசுவின் அகத்தில் உள்ள புழுக்களைச் சூரியன் ஒழிப்பான் என்று கூறுகிறது. ரிக்வேதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி மாநகரில் வெள்ளி விழாக் காணும்
மத்திய மாகாண இந்து மாமன்றத்தின்
சேவை மேலும் வளர வேண்டுமென்று
வாழ்த்துகின்றோம்



# ஸ்ரீ கணேசானந்த பிராமணாள் ஹோட்டல்

**42, பேராதனை வீதி**
**கண்டி**

Sri Ganeshananda Brahmins Hotel
42, Peradeniya Road

**KANDY**

**Tel: 08-23489, 08-33231**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனை மூன்று வித அக்கினிகளில் ஒருவராக விவரிக்கிறது. உபநிடதங்களும் சூரியனைப் போற்றுகின்றன. சாந்தோக்கிய உபநிடதம் சூரியனை வெகு அருமையாகக் கூறுகின்றது. "ஆதித்தன் தேவர்களுக்குத் தேன். சூரிய மண்டலத்தைச் சுற்றி வியாபித்திருக்கும் கிரணங்கள் தேனடையின் துவாரங்கள். இந்தத் தேன் யாக முனிவர்களுக்கு உணவாகி ஞான ஒளியூட்டி உய்விக்கிறது", என்கிறது.

பண்டைய தமிழ் இலக்கியங்களிலிருந்தும் சூரிய பகவானின் வழிபாட்டைப்பற்றிய பல தகவல்கள் கிடைத்துள்ளன. தமிழில் முதல் நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில் சூரிய வழிபாடு கூறப்படுகிறது. சங்ககால இலக்கியமாகிய கலித்தொகையில் இருந்தும் சூரியனை வழிபடும் வழக்கம் இருந்தமை தெரிய வருகிறது. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தின் தொடக்கத்தில் இளங்கோ அடிகள் "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்........" என்று கதிரவனை வாழ்த்திப் பாடுகின்றார். கண்ணகி தன் கணவனாகிய கோவலன் கொலையுண்டதை அறிந்து வருந்தி எல்லாவற்றிற்கும் சாட்சியாக இருக்கும் கதிரவனைப் பார்த்து "காய் கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்" என்று கேட்டாள். உடனே சூரியன் குரல் அசரீரியாகக் கேட்டது. "கள்வனோ அல்லன், கருங்கயற்கண் மாதராய் ஒள் எரி உண்ணுமிவ்வூர்" என்பது அக்குரல். நக்கீரர் தம் திருமுருகாற்றுப் படையை "உலகம் உவப்ப வலனேர்பு திருகரு, பலர் புகழ் ஞாயிறு" என்று தொடங்குகிறார். மணிமேகலை என்ற காப்பியத்தில் புலவர் புத்தபிரானை "புத்த ஞாயிறே" என்று குறிப்பிடுகிறார். அபிராமி அந்தாதியில் அபிராமப்பட்டர் "உதிக்கின்ற செங்கதிர்........" என்றே கூறி ஆரம்பிக்கிறார்.

மேலும் சைவ ஆகமங்களும் சிவபெருமான் சூரிய மண்டலத்தின் நடுவே பிரகாசிக்கின்றார் என்றும், அவர் சூரியனாக விளங்குகின்றார் என்றும் கூறுகின்றன. சிவபெருமானின் எட்டு மூர்த்தங்களில் சூரியன் ஒன்று என்றும் சூரியன் சிவபெருமானின் வலக்கண் என்றும் வர்ணித்துள்ளன. ஆகமங்கள் திருக்கோயிலமைப்பைப்பற்றிக் கூறும் போது சூரியனையும் குறிப்பிடுகின்றன. அத்துடன் கோயில்களில் இறைவனின் பிம்பத்தின் மேல் சூரிய கிரணம் விழுமாறு அமைப்பார்கள். சிவன் கோயில்களில் காலைப் பூசையின் போது முதலில் சூரியனுக்கே வழிபாடு நடைபெறும் வழக்கமும் பூசை முடிவில் சூரியன் வாசலில் தேங்காய் உடைத்துக் கற்பூரங்காட்டும் வழக்கமும் உண்டு.

மேலும் சூரியனை வணங்கி ஏதேனும் வேண்டிக் கொண்டால் அது நிச்சயமாக நிறைவேறும் என்ற நம்பிக்கை நெடுங்காலமாகவேத் தமிழ் மக்களிடையே நிலவிவருகின்றது. யாக்ஞ வல்கியர் என்ற முனிவர் சூரியனருளால் சுக்ல யசுர் வேதப்பொருளை உணர்ந்தார் என்பர். அவர் சூரிய கவசம் என்னும் நூலை இயற்றியுள்ளார். சூரிய வழிபாட்டின் போது பக்தனின் உடம்பின் ஒவ்வொரு அங்கத்தையும் சூரிய தேவன் காத்தருள்புரியுமாறு இத்தோத்திர நூல் அமைந்துள்ளது. சூரியனைப் பலரும் மித்திரன் என்று அன்போடு அழைத்தனர். சூரியனுக்கு மூன்று வித சக்திகள் உண்டென்றும் அவை முறையே காலை, நண்பகல், மாலை ஆகிய வேளைகளில் தொழிற்படுவன என்றுங்கூறுவர். இம் மூன்று காலங்களில் செய்ய வேண்டிய சந்தியா வந்தனத்தில் சூரியன் மிக அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளார். சிவனும் விஷ்ணுவும் ஒருவராக எழுந்தருளி எல்லாப் பிராணிகளுக்கும் காட்சி கொடுக்கும் திரு உருவம் சூரிய உருவம் என்பது பெரியோர் வாக்கு. தன்னைத் தியானஞ் செய்யும் உள்ளங்களிலுள்ள இருளை அகற்றி அழுக்கை எரித்து அடியார்களைத் தன் வண்ணம் ஆகும் வகையில் அருள் புரிகின்றான். ஆகையால் அந்தச் சூரிய பகவானே கண்கண்ட தெய்வமாம்.

சூரிய பகவானைத் தோத்திரித்துப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. பலர் இவரைத் துதித்துத் தங்கள் நோய்கள் நீங்கப் பெற்றுள்ளனர். அருணதேவனாகிய கதிரவன் கொடுமையான நோய்களைத் தீர்த்து நல்ல பார்வையைத்தரவல்லான் என்று மயூரகவி தமது சூரிய சதகத்தில் போற்றுகிறார். சூரிய கிரணங்களுக்கு சில நோய்களை நீக்கும் சக்தி இருப்பதாக விஞ்ஞானிகள் ஆராய்ந்துள்ளனர். சூரியனை ஆராதிப்பவர்களுக்கு கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 வருட காலமாக வீறுநடை போட்டு
இன்று வெள்ளி விழாக் காணும்
மத்திய மாகாண இந்து மாமன்றத்திற்கும், தலைவருக்கும்
எமது வாழ்த்துக்கள்.
மன்றத்தின் நற்பணிகள் மென்மேலும் வளர்ச்சி பெற
எமது நல்லாசிகள்.

புன்னகை மாதர் விரும்பும்
பொன்னகை மின்னிடும் வைரம்
கண்ணினை பறிக்கும் விதத்தில்
அணிகலன் செய்திட வாரீர்

# தேவி ஜுவலர்ஸ்

**38, டி. எஸ். சேனாநாயக்க வீதி,**
**கண்டி**
**தொ.பேசி: 08 - 24110**

*With Best Compliments From:*

# CHITHRA JEWELLERS

**22 CARAT SOVEREIGN GOLD JEWELLERS**

**41, D.S.Senanayake Veediya,**
**KANDY.**
**✆ 08 - 23290**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தமான நோய் வராது என்றும் சொல்லப்படுகிறது. தினமும் காலையில் சூரிய நமஸ்காரம் செய்து வந்தால் ஆரோக்கியமாக வாழலாம். 'ஸன்பாத்' எனப்படும் சூரிய குளியல் சில வகை நோயாளிகளுக்கு விதிக்கப்பட்டுள்ளது. பொதுவாக சூரிய கிரணங்கள் தேவர்களையும், பித்ருக்களையும், மனிதர்களையும் ரக்ஷித்துப் போஷிக்கின்றன. சூரியனுடைய பல நாமங்களில் ஒன்றின் பொருளையாவது நன்கு உணர்ந்து ஜெபித்து அவரைப் பக்தியுடன் வழிபட்டால் சகல ரோகங்களும் பாபங்களும் அகன்று விடும்.

ஞாயிற்றின் உள்ளம் என்னும் பொருள் தரும் 'ஆதித்ய' இருதயம் என்னும் அற்புத மந்திரத்தை அகத்திய முனிவர் இராமபிரானுக்கு உபதேசித்து இராவணனைக் கொல்லும் திறனை உண்டாக்கினார் என்பர். ஆதித்ய இருதயத்தில் சூரிய பகவானின் பெருமை விரிவாகக் கூறப்படுகிறது. அத்துடன் சூரியனைப்பற்றிய பல செய்திகளும் வருகின்றன. இம் மந்திரத்தைப் பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்தால் மிகுந்த பலனைத் தரக் கூடியது. மனதிலுள்ள பீதியைப் போக்கி, மனத் தெளிவும், உற்சாகமும், தெம்பும் தரக்கூடிய வல்லமை இம் *மந்திரத்திற்குண்டு.*

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவராகிய ஸ்ரீ முத்துசாமி தீட்சிதர் நவக்கிரகங்களின் மீது ஒன்பது கீர்த்தனங்களைப் பாடியுள்ளார். ஒவ்வொரு பாட்டிலும் அந்த அந்தக் கிரக வருணனையும், மந்திரமும், வழிபாட்டின் பயனும் அமைத்திருக்கிறார். "சூரிய மூர்த்தே நமோஸ்துதே" என்று தொடங்கும் கீர்த்தனம் கதிரவனைப்பற்றியது. இதில் சூரிய பகவானின் அத்தனை சிறப்பையும் கூறியுள்ளார். இந்தக் கீர்த்தனத்தை ஒவ்வொரு நாளும் அன்போடு பாடினால் எல்லா நலமும் கிடைக்கும் என்ற பயனையும் தீட்சிதர் சொல்லியிருக்கிறார். சூரியனை வழிபட்டு அவனருள் பெற்ற ஆன்றோர்கள் அனுபவ ரீதியில் பல மந்திரங்களையும் முறைகளையும் வகுத்துள்ளனர். இவற்றை நாம் அறிந்து ஒரு சிலவற்றினையாவது ஜெபித்து சூரிய பகவானின் அருளைப் பெறுவோமாக. தமிழ் நாட்டில் சூரியனுக்குப் பிரதான தலமாக விளங்குவது சூரியனார் கோயில். ஒரிஸ்ஸாவில் 'கோனாக்' என்னும் இடத்தில் கதிரவன் கோயில் உண்டு.

"நீ ஒளி, நீ சுடர், நீ விளக்கம், நீ காட்சி.
மின்னல், இரத்தினம், கனல், தீக்கொழுந்து
இவை எல்லாம் நினது நிகழ்ச்சி.
கண் நினது வீடு".
புகழ், வீரம் - இவை நினது லீலை.
அறிவு நின்குறி. அறிவின் குறி நீ.
நீ சுடுகின்றாய், வாழ்க! நீ காட்டுகின்றாய், வாழ்க!
உயிர் தருகின்றாய், உடல் தருகின்றாய்.
வளர்க்கின்றாய், மாய்க்கின்றாய்,
நீர் தருகின்றாய், காற்றை வீசுகின்றாய் வாழ்க!

- பாரதியார் -

**சூரியபகவான் துதி**

"காசினி இருளை நீக்கும் கதிரொளியாகியெங்கும்
பூசனை உலகோர் போற்றப் புசிப்போடு சுகத்தை நல்கும்
வாசியேழுடைய தேர்மேல் மகாகிரி வலமாய் வந்த
தேசிகா எனை ரட்சிப்பாய் செங்கதிரவனே போற்றி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி லலிதா நடராஜா கண்டி நல்லாயன் கல்லூரியில் கல்வி கற்று 1964ல் பேராதனை சர்வகலாசாலையில் பட்டப்படிப்பையும், 1988ல் திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின்படிப்பையும் மேற்கொண்டவர். 1964 முதல் 1975 வரை கண்டி அசோகா வித்தியாலயத்திலும், 1975 முதல் கண்டி நல்லாயன் மகளிர் கல்லூரியிலும் ஆசிரியையாகப் பணியாற்றி தற்போது அக்கல்லூரியின் பிரிவுத் தலைவியாகவும் கடமையாற்றி வருகிறார். மலையகத்தின் பல பகுதிகளிலும் ஆன்மீக, இலக்கிய சொற்பொழிவுகள் ஆற்றியும், கருத்தரங்கு, பட்டி மன்றங்களில் கலந்துகொண்டும் வரும் திருமதி லலிதா நடராஜா ஒரு சிறந்த மேடைப் பேச்சாளருமாவர்.

(ஆ...ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கத்தின் சிங்கம் தந்த வழிப்படுத்தல்

– திருமதி லலிதா நடராஜா –
(ஆசிரியை, தமிழ்ப்பிரிவுத் தலைவி, நல்லாயன் மகளிர் கல்லூரி, கண்டி)

எழுத்து எகிப்தில் தோன்றியது போல, ஆன்மீகம் இந்தியாவில் தோன்றிற்று என்பர் அறிஞர். ஏனெனில் உலகப் பெரு நெறிகளான இந்து மதமும், பௌத்தப் பெருநெறியும், சமண மார்க்கமும் இந்தியாவிலே தோற்றம் பெற்றன. ஆனால் இப்பெருநெறிகளுள் காலத்தால் மூத்ததும் இந்தியாவில் இன்றளவும் நின்று நிலவுவதுமான பெருநெறி நம் சனாதனப் பெரு மார்க்கமே என்றால், அது தவறாகாது. நம் இந்துப் பெருநெறியானது காலச்சகடையின் ஓட்டத்தில் பல சாதனைகளை நிலைநாட்டியது போல, பல சோதனைகளையும் எதிர்நோக்கியே வந்துள்ளது. "எப்பொழுது தர்மம் வீழ்ச்சியுற்று, அதர்மம் எழுச்சி பெறுகின்றதோ அப்பொழுதெல்லாம் துஷ்ட நிக்கிரகம் செய்து சிஷ்ட பரிபாலனம் செய்தற்காக நான் அவதாரம் செய்வேன்" என்ற பகவானின் கீதோபதேசப்படி பகவான் ஏற்ற உருவில் அவதரித்து அதர்மத்தை ஒடுக்கி பாதுகாத்திருக்கின்றான். அத்துடன் அவன் திருப்தியடைவதில்லை. தத்தம் கடமைகளை உணராமல் எப்படியோ வாழ்ந்து போக நினைக்கும் மனிதர்களுக்கு நன்னெறி உணர்த்தி, நல்லறிவு வழங்கி, பக்திப் பெருக்கெடுக்கவும் ஆன்மீகம் தழைக்கவும் சில நல்ல அருளாளர்களை பகவான் உலகுக்கு அனுப்புவதுண்டு.

இவ்வகையில் ஆங்கிலேயராட்சியின் அடக்குமுறையுள் சிக்குண்டு சிறைப்பட்டிருந்த இந்தியாவையும், அடிமைத்தளையுள் சிக்குண்டு தேசப்பற்றிழந்து, மாண்டு போனவர்கள் போல் வாழ்ந்த இந்தியரையும், விதேச மதம், கலாசாரம் என்பவற்றால் வீழ்ச்சியுற்றிருந்த இந்துப் பெருமார்க்கத்தையும் மீட்டெடுக்க வந்த அருளாளர்தான் "வங்கத்தின் சிங்கம்" எனப் போற்றப்படும் விவேகானந்தர். உண்மையில் ஆன்மாவும் ஆன்மீகமும் தளர்ந்து "அறியாமை" மிக்கிருந்த 19ம் நூற்றாண்டில், அஞ்ஞான இருளகற்றி ஞான ஒளி விளங்கச் செய்த உதயபானு அவர். எனவே இந்து மதமும் இந்துப் பண்பாடும் இடையூறுகள் பலவற்றை எதிர்நோக்குகின்ற இக்கால கட்டத்திலே அவர் வழிப்படுத்தல்கள் எவை என்பதை ஆய்ந்துணர்ந்து, அவற்றை கைக்கொள்வதால் நம் இந்துப் பெருமார்க்கம் இனிதே தழைத்திடும் என்ற நோக்குடனேயே இக்கட்டுரையை எழுதத் துணிகின்றேன்.

1863ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் திகதி கல்கத்தாவிலிருந்து விசுவநாத தத்தருக்கும், புவனேஷ்வரிக்கும் அரும்புதல்வராக அவதரித்தார் "நரேந்திரன்". விளையும் பயிர் முளையிலே என்பதற்கிணங்க இவர் அறிவுக் கூர்மையும், அபார ஞாபகச் சக்தியும், அடங்காத் துணிச்சலும் உடையவராக இருந்தார். துள்ளித்திரியும் பருவத்திலே துடுக்கடக்கி பள்ளிக்கு அனுப்பினார் அன்னையார். கல்வி கேள்விகளில் சிறந்த நரேந்திரன் கலைமாணிப் பட்டமும் பெற்றார். 1894இல் தன் தந்தையாரை இழந்தபின் குடும்பப் பொறுப்பு அவர் தலையிலே விழுந்தது. இக்காலத்தில் அவர் அனுபவித்த துன்பங்கள் அவரை சமூகம், நாடு, சமயம் பற்றிச் சிந்திக்கத் தூண்டின. இறையருட் காட்சி பெற வேண்டுமென அவருள்ளம் விழைந்தது. நல் ஞானமும், ஒழுக்கமும், தோற்றப்பொலிவும் மிக்க அவர் இறையருள் நாட்டத்தினால் துறவறத்தையே பெரிதும் விரும்பினார். "நற் பயிருக்கு வான் மழை" கிடைத்தது போல, ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் அவருக்கு ஞான குருவாகக் கிடைத்தார். துறவியாகி, "விவேகானந்தர்" என்ற துறவற நாமத்தையும் பெற்றார். தன் 39ம் வயதில் அவர் ஆத்ம சாந்தி அடைந்தார். இந்த 39 ஆண்டுகளில் அவர் இந்து மதத்துக்கு ஆற்றிய பணிகள் அளப்பரியன. அக்காலத்தில் இந்து மதத்தின் ஆழ்ந்த தத்துவங்கள் பற்றியோ, அது ஓர் ஆன்மீகப் பெட்டகம் என்பது பற்றியோ பிற நாட்டினர் அதிகம் அறிந்திருக்கவில்லை. இந்நிலையில் 1893 இல் சிகாகோ நகரில் இடம்பெற்ற சர்வமத மகாசபையில் வேதங்கள், உபநிடதங்கள், கீதை என்பன போதிக்கும் தத்துவங்களை உலகப் பேரறிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# SRI LEKAH JEWELLERS

**FOR 22KT, FINE & MOD JEWELLERY**

55, YATINUWARA VEEDIYA,
KANDY.

✆ 08- 32430

*With Best Compliments From:*

# New Lee Medical

**100, DALADA VEEDIYA**
**KANDY.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்து, வியந்து ஒப்புக்கொள்ளும் வகையில் எடுத்துக் கூறியவர் சுவாமி விவேகானந்தர். அப்பேரவையிலே அனைத்து அறிஞர்களையும் நோக்கி "என் அருமைச் சகோதர, சகோதரிகளே எனது பிள்ளைப்பருவத்திலிருந்து நான் பயின்று வருவதும், இன்றும் கோடிக்கணக்கானவர் ஓதி வருவதுமான" கீதையிலிருந்து ஒரு சில வரிகளைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம்
இறுதியிலே கடலில் சென்று
சங்கமமாம் பான்மையினைப் போன்றுலகோர்
பின்பற்றும் தன்மையாலே
தூங்கு மிகு நெறி பலவாய், நேராயும்
வளைவாயும் தோன்றினாலும்
அங்கு அவைதான் எம்பெரும் - ஈற்றில்
உனை அடைகின்ற ஆறேயன்றோ!

என்ற பாடலைக் கூறினார். இதன் மூலம் "யார் என் வழியைப்பின்பற்றி என்னையடைய முயன்றாலும் நான் அவர்களை அடைவேன். பலரும் பல வழிகளில் முயல்கிறார்கள். எல்லா வழிகளும் இறுதியில் என்னையே அடைகின்றன" என்ற கீதோபதேசத்தை முன்வைத்து, இந்து மதம் எத்தகைய சமய சகிப்புத்தன்மையும், பொறையும் வாய்ந்தது என்பதை அவ்வுலகப் பேரவைக்கு எடுத்துக் காட்டினார். "வேதாந்த கேசரி" யான அவரது அமெரிக்க, ஐரோப்பிய விஜயங்கள் இந்து மதத்தின் பரந்த நோக்குகளையும் சமயப் பொறையினையும் உலகிற்கே எடுத்துக் காட்டின.

அத்வைதக் கோட்பாடுடையவர் சுவாமி விவேகானந்தர். "தத்துவமசி அகம் பிரமஸ்வாமி" என்ற உபநிடத வாக்கியம் 'நீயே அது - அதுவே நீ ஆகிறாய்' என்ற உயர்பொருள் உடையது. இந்த உபநிடதக் கருத்தை ஏற்றவர் சுவாமிகள். "எல்லா ஜீவன்களிலும் ஒளிர்பவன்தான் கடவுள். மூர்க்கனோ, வறுமையில் உழல்பவனோ மனித இனத்தைச்சேர்ந்த எவனானாலும் அவனிடம் கடவுள் உள்ளான். அந்தக் கடவுளையே வணங்குகின்றேன்" என்று கூறிய அவர்,

"மனிதனை விட உயர்ந்தவர்கள் எவரும் இல்லை
தேவர்களும் கீழே வந்து மனிதவுடல் வாயிலாக
முத்தி பெற முடியும் மனிதன் மட்டுமே
பூரணமடைகின்றான் தேவர்களாலும் பூரணமடைய முடியாது".

என்ற நம்பிக்கை உடையவர். அதாவது மனிதனுக்குச் செய்யும் தொண்டே இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்ற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்.

ஆம், மக்கள் சேவையே மகேசன் சேவை!

இக்கருத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தமையால் தான், மனித குலத்திற்கு தொண்டாற்றுவதற்காக அவர் இராமகிருஷ்ண மடாலயங்களை நிறுவினார்.

"ஒவ்வொரு உயிருள்ளும் ஆத்ம சக்தியாகி இருப்பது மகாவலிமையுள்ள பரப்பிரம்மம். நலிவுற்றோருக்கும் மெலிவுற்றோருக்கும் பாடுபடுவது நமது தர்மம்" என்ற அத்வைத தத்துவத்தை உலகறியச் செயற்படுத்துபவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*With Best Compliments From:*

# WINE CITY

**LANKA MEDICAL (PRIVATE) LIMITED**

**No 15, D. S. Senanayake veediya,**
**KANDY.**

**© 08- 24453**



# VICTORIA AGENCIES

**Inland & Foreign Liquor Wholesale Dealers**

**No 26, lower King Street,**
**BADULLA.**

☎ 055- 2122, 3144, 3588
Fax: 055- 2987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மடாலயங்கள். பசி, பிணி, புயல், வெள்ளம், வறட்சி போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மனிதவுயிர்களுக்குத் தொண்டாற்றி அறியாமை இருள் நீக்கி, அறிவொளி பரப்பி - சுவாமிகளின் கனவை நனவாக்கி வருவன இவை.

"இயற்கையாலோ, அறியாமையாலோ இன்னல் உறுவோர்க்கும், அனாதைகளுக்கும் உதவி செய்ய முன்வாருங்கள் அதுவே உங்களை நல்வழிப்படுத்தி உங்கள் தெய்வ சக்தியை பிரகாசிக்கச் செய்யும்" என சமூக சேவையை வற்புறுத்திய அவர், "தமது நலனைப் பற்றி மட்டுமே சிந்திப்பது பாவம்" என்று சுயநலத்திற்கு சாட்டையடி கொடுக்கிறார்.

ஆங்கிலேய ஆட்சிக்குட்பட்டு மிடிமைப்பட்டிருந்த பாரத மக்களை "வீரனே, தைரியம் மிக்கவனாக இரு. நான் ஒரு இந்தியன் என்பதில் பெருமை கொள். நான் ஒரு இந்தியன். இந்தியர்கள் அனைவரும் என் சகோதரர்கள் எனப் பெருமையுடன் பறைசாற்று. அறியாமையில் உழலும் இந்தியன், தாழ்த்தப்பட்ட இந்தியன், இந்தியன் அனைவரும் என் சகோதரன் என முரசறை - உரத்தக் குரலெடுத்துக் கூவு. இந்தியத்திருநாட்டின் மண், புண்ணிய பாதத்தின் புழுதி எனக்குக் கிடைத்தற்கரிய சுவர்க்கபூமி; மிக்க உயர்ந்த முத்திநிலம். இந்தியாவின் நல்வாழ்வே என் நல்வாழ்வு. எனத் தோள் கொட்டு" என்று தட்டியெழுப்பி, ஒரு சக்தி மிகு நவீன இந்தியாவை உருவாக்கப் பாடுபட்டார்.

இவருடைய இச்செய்தி இலங்கைவாழ் இந்துக்களாகிய நமக்கும் வழிகாட்டும். இது "பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் நனி சிறந்தன" என்ற நல்லுணர்வை எழச் செய்யும்.

அத்துடன் "தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள், அறியாமை மிக்கவர்கள், ஏழைகள், கல்வியறிவற்றவர்கள், சக்கிலியர், தோட்டிகள் ஆகிய அனைவருமே உன்னுடன் இரத்தத்தொடர்புடைய நெருக்கமான உறவினர்களே, உன் சகோதரர்களே என்பதை மறந்து விடாதே" என்ற அவரது அறிவுறுத்தல் பின்பற்றப்படுமானால் சமூகத்தில் காணப்படும் பிளவுகள் நீங்கும். நாம் சகிப்புத்தன்மையும், சமத்துவமும் உடைய உண்மை இந்துக்களாகி சுகித்திருப்போம்.

அன்பர் பணி செய்ய எமை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி நவரட்னம்மா வெள்ளைசாமி பன்விலை தமிழ் வித்தியாலயம், பேராதனை தமிழ் வித்தியாலயம், யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கற்று 1968இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியைச் சிறப்புப்பாடமாகக் கற்று பட்டதாரியானார். 1982ல் கொழும்பு பல்கலைக் கழகத்தில் பட்டப் பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியில் முதற்பிரிவில் அதிவிசேட சித்தியினைப் பெற்றார். கண்டி மாவட்டத்தில் பல பாடசாலைகளில் கடமையாற்றிய பின்னர், 1989 முதல் அதிபராகப் பதவி உயர்வு பெற்று, பெண்கள் உயர்தர தேசிய பாடசாலையில் தமிழ்ப் பிரிவின் உதவி அதிபராகக் கடமையாற்றி வருகிறார். மேலும் தேசிய கல்வி நிறுவனத்தால் (NIE) நடாத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி (PGDE) கண்டி நிலையத்தின் பகுதி நேர விரிவுரையாளராகவும் கடமையாற்றி வருகிறார்.

இவர் மலையகத்தின் முன்னணிப் பேச்சாளர்களில் ஒருவராகவும் திகழ்கிறார்.

(ஆ...ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் கற்போம்

- திருமதி நவம் வெள்ளைச்சாமி -
(பெண்கள் உயர்தர பாடசாலை, கண்டி)

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற உன்னத விழுமியத்தை தலைக் கொண்டு மாபெருஞ்சித்தர் திருமூலரால் ஆக்கப்பட்டதே மூவாயிரந் தமிழ் மந்திரங்களைக் கொண்ட திருமந்திரம். சாத்திர நூலாகவும் தோத்திர நூலாகவும் விளங்கும் இது வேதம், உபநிஷதம், ஆகமம் ஆகியவற்றின் உட்கருத்துக்களை தமிழில் வடித்துத் தருகின்றது.

இந்நூலின் பெருமை புகட்டும் ஆன்ற தமிழ்ப் புலமை ஔவை மூதாட்டி, "தேவர் குறளும் திருநான் மறையும்......... திருவாசகமும் திருமூலர் சொல்லும் ஒருவாசகமென்றுணர்" என்றும், சேக்கிழார் பெருமான் "உள்ளுணர்வின் ஞானம் முதலிய ஒரு நான்குண்மை தெள்ளு தீந்தமிழாற் கூறும் திருமூலர்" என்றும் போற்றுவர். பத்தாம் திருமுறையாக விளங்கும் திருமந்திரம் அன்பை முதிர்வித்து, அருளை நிறைவித்து, இறைவனை அடைந்து பேரின்பப் பெருவாழ்வில் நிலை பெற வழி கூறி நிற்கின்றது. மூலன் மந்திரத்தின் இறையியல் தத்துவங்கள் வாழ்வியல் தர்மங்களாகவும் விளங்குகின்றன.

மனித ஆற்றலை விஞ்சி நிற்கும் பேராற்றலே தெய்வ ஆற்றல். அத்தெய்வ ஆற்றலை ஒளி வடிவில் கண்டு போற்றும் மூலன், உள்ளத்தின் உள்ளேயே உள்ளொளியாய்த் திகழும் இறைவன் பெருமையைப் பலவாறாகக் கூறியுள்ளார்.

"ஒண்சுடரான உலப்பிலி நாதனை
ஒண்சுடராகி என் உள்ளத்திருக்கின்ற"

என்ற மூலன் தத்துவம் கடவுளைத் தேடி கடுந்தவம் புரியும்படிக் கூறவில்லை. தனக்குள்ளேயே தெய்வம் நிலைகொண்டுள்ள உண்மையை உணரும் அனுபூதிகள் இறைவனை தேடியலைய மாட்டார்கள்.

"தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ
வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தான்"

என்ற சித்தன் தத்துவம் எம்முள் ஒளிந்து மறைந்துறையும் இறைவனைத் தேடும்படி கூறுகின்றது. சிவபோதம் குடிகொண்டிருக்கும் சிவானந்தப் பேற்று நிலையை அல்லது முத்தி நிலையை பக்தி நெறியால் அடையலாம் என்று கூறுவது சைவ சித்தாந்தம்.

"அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்ற சரணாகதியாகிய பிரபத்தி நெறி மூலம் இறையியல்பை அடைய வேண்டுமென்பது வைஷ்ணவம். இதனை இலகுபடுத்தி "அன்பே சிவம்" என்ற அழகான இன்ப தத்துவத்தை மூலன் தமிழ் தெளிவாகத் தருகின்றது.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்"

என்று அன்பின் முதிர்வே சிவம் என்ற இறை தத்துவத்தை எளிமையாகக் காட்டுகின்றார்.

காயமே இது பொய் வெறும் காற்றடைத்த பை என்று பலவாறு இழிவுபடுத்தப்படும் மானுட உடம்பிற்கு மகத்துவம் கொடுக்கும் சிறப்பை திருமந்திரத்தில் காணலாம். ஆன்ம வளர்ச்சிக்கு உடல் வளர்ச்சி அத்தியாவசியம் என்ற ஆழமான உண்மையைத் திருமந்திரம்.............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best compliments From :*

# B. B. & CO

**PIONEER IN ELECTRICAL GOODS, HEAVY EQUIPMENT,
SPARE PARTS AND GENERAL SUPPLIERS**

**39, ALIYA GIYA MAWATTA,
KANDY.**

**✆ 072 - 21347
FAX: 94-8-32765**

வெள்ளி விழாக் காணும்
கண்டி, மத்திய மாகாண இந்து மாமன்றத்தினரும்,
அதன் தலைவர்,
திரு. அ. துரைசாமிபிள்ளை ஜே. பி. அவர்களும்
தம் அரும்பணியை மேலும் தொடர்ந்து செய்ய
இறைவன் அருள்புரிவாராக!

# ஸ்ரீ அம்பாள் ஸ்டோர்

**34, புப்புரச ரோட்,**

**கலகா.**

**✆ 67248, 67339**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

என்று கூறுவதோடு அமையாது உடலின் மகத்துவத்தை உச்ச நிலைக்கு எடுத்துச் செல்வதனை அடுத்து நோக்கலாம்.

இறைவன் குடிகொண்டிருக்கும் மகத்தான கோயிலாகவும் கோபுரமாகவும் மனித உடலை சித்தர் மாற்றி விடுகிறார்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

தேக தத்துவம் ஆசைகளை வளர்க்கும் ஆகையால் தேக ரீதியான கோரிக்கைகளுக்கு வரம்பு கட்டி மனோ ரீதியாக மானுடத்தன்மைகளை வளர்க்க மூலர் நல்ல தத்துவம் கூறுகின்றார். இந்த உணர்வு கைவரப் பெற்றால் மானுடமே நடமாடும் கோயில்களாகி விடும்.

திருமந்திரத்தை சாத்திர நூலாக மட்டும் கணித்துவிடக் கூடாது. சீரிய ஒழுக்கம் பலவற்றைச் சித்தரிக்கும் அறநூலாக, நீதி நூலாக வாழ்வியல் நூலாகவும் இது விளங்குகிறது.

"அமுதூறும் மாமழை நீரதனாலே—அமுதூறும் பன்மரம்
பார்மிசை தோற்றும்" என்று வான் சிறப்பையும்

"வேட்கையுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே" என்று தானச் சிறப்பையும்

மூலன் மந்திரம் மொழிகின்றது.

நல்குரவு உற்றோர் நாட்டில் நடைப்பிணங்களாவர் என்ற வாழ்வியல் தத்துவத்தையும் பாடலில் தருகின்றார்.

"புடவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப்பட்டார்களும் அன்பிலரானாக்
கொடையில்லை கோளில்லை கொண்டாட்டமில்லை
நடையில்லை நாட்டில் இயங்குகின்றார்க்கே"

என்று வறுமையின்பாற்பட்டாரது வாழ்க்கை நிலையினைப் படம் பிடித்து அழகிய தமிழால் வடித்துள்ளார்.

இவ்வாறாக சைவ சமயத்தின் மூல தத்துவங்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டதும், வாழ்வியல் தர்மங்களை உள்ளடக்கியதுமான திருமந்திரச் செய்யுட்களை கற்குந் தோறும் அறிவுத் தெளிவு ஏற்படுவதை நாம் உணரலாம். புதிய நோக்கும் புதிய போக்கும் கொண்ட புத்தம் புதிய புனித மனிதர்களாக நாம் நம்மையறியாமல் மாற்றப்படுகின்றோம். எண்ணம், செயல், சொல் மூன்றிலும் பவித்திரம் மிக்கவர்களாக தூய்மை உடையவர்களாக ஆகிவிடுகின்றோம். மூலன் பெற்ற இன்பம் யாம் பெற இம்மேலான நூலை நாமும் சுவைத்துப் பிறரையும் சுவைக்கச் செய்து பயன் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. தமிழோவியன், பதுளை தெளிவத்தையில் பிறந்து பதுளை சரஸ்வதி வித்தியாசாலையில் கல்வி பயின்றவர். ஆசிரியர், அதிபர், அச்சக மேலாளர், களஞ்சியப் பொறுப்பாளர், கணக்காளர் ஆகிய பணிகளை மேற்கொண்ட பின்னர் தற்போது ஓய்வு பெற்று தம்மை முழுமையாக இலக்கிய, சமூக, சமயப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். மலை முரசு (1962), வீரகேசரி, சுதந்திரன் ஆகிய பத்திரிகைகள் நடத்திய சிறு கதைப் போட்டிகளில் பரிசுகள் பெற்றுள்ளதோடு பாரதிதாசன் நூற்றாண்டு விழாவை ஒட்டி பிரான்சில் நடத்தப்பட்ட உலகலாவிய கட்டுரைப் போட்டியில் மூன்றாம் பரிசையும் வென்றுள்ளார்.

மாணவப் பருவத்தில் இருந்தே எழுத்து, பாட்டு, பேச்சு, கவிதை, நாடகப் போட்டிகளில் பங்குகொண்டு முதல் பரிசுகளை வென்றுள்ளார். 1992ம் ஆண்டு இந்து கலாசார இராஜாங்க அமைச்சின் "தமிழ்மணி" விருதையும், அதே ஆண்டு ஊவா மாகாண சபையின் சாகித்திய விழாவில் "கவிமணி" விருதையும் பெற்றுள்ளார்.

(ஆ...ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றும் பணியால் நூற்றாண்டு விழா காணட்டும்!

தமிழ்மணி, கவிமணி தமிழோவியன்

தலைநகராய் கண்டியினை அமைத்துக் கொண்டு
தரும நெறி முறைநின்று ஆட்சி செய்தோன்!
குலையாத மனஉறுதி கொண்ட மன்னன்!
குவலயத்தார் இலங்கை எனில் கண்டி என்னும்,
நிலைதந்த சிறி விக்கிரம ராச சிங்கன்
நீடுபுகழ் பாடிநிற்கும் கண்டி ஊரில்,
கலையோடு சைவத்தை, தமிழ்க் கலாசாரத்தை
காத்துவரும் இந்து மாமன்றம் வளர்க! வாழ்க!

♪♪♪♪♪♪♪♪♪♪

பேராதனை வீதியிலே எழுந்து நிற்கும்
பெருமைசேர் இந்து கலாசார மண்டபமே,
தீராத ஆர்வமுள்ள கண்டித் தமிழர்
திரண்டு ஒன்றாய் இயங்குகின்ற ஒரமைப்பாம்
மத்திய மாகாண இந்து மாமன்றத்தின்
மணியான பணியினுக்கோர் விளக்கம் கண்டீர்!
நித்தியமும் சைவமுடன், தமிழ்க்கலை மரபை
நிரந்தரமாய் வளர்த்துவரும் மன்றம் வாழ்க!

♪♪♪♪♪♪♪♪♪♪

தொண்டு ஆற்றும் துரைசாமிபிள்ளை தலைவராக,
துணிவான செல்லமுத்து பொதுச்செயலாளராக,
கொண்டநிதி வளங்காக்கும் பொருளாளராய்
குணமான மாரிமுத்தும், சேவை நோக்கம்
கொண்ட நல்ல செயற்குழு உறுப்பினர்களும்,
கூடியாற்றும் சேவையிலே வெற்றி பெற்றே,
கண்டார்கள் வெள்ளிவிழா இந்து மாமன்றத்தார்
காலமெல்லாம் நற்தொண்டு செய்வார் காண்பீர்!

♪♪♪♪♪♪♪♪♪♪

சமயத்தை வளர்ப்பதோடு, தமிழினத்தார்
சகலதுறைப் புதுமைகளில் வளர்ச்சி காண,
அமைதியாக மத்திய மாகாண இந்துமாமன்றம்
ஆற்றி வரும் அரும்பணியைப் போற்றி நிற்போம்!
பொன்விழா, வைரவிழா, நூற்றாண்டு விழா என்றே,
பொதுப்பணிகள் பலசெய்து மக்கள் மகிழ,
இன்னும்பல விழாஎடுக்க மத்திய மாகாண
இந்து மாமன்றம் என்றே வாழ்த்துரைப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:

# KANDY HOOD WORKS

◆**Seat Covers** ◆**Cushion Works**

Making of high quality Passenger seats
&
Upholstering of all kind of Motor Vehicles Etc.

*Show Room:*

**151, KATUGASTOTA ROAD,**
**KANDY.**
**Sri Lanka**

**✆ 08-33387** **Hotline 072-22151** **Fax 01- 439130**

*Residence :*
52/6, Old Matale Road, Kandy, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றக் கலைநிகழ்ச்சியைக் கண்டு களிக்கும்
அவையோர் அகத்தின் பரவசம் முகத்தில் தெரிகிறது



நவராத்திரி கலைவிழா இறை வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவராத்திரி கலைவிழாவில் பஞ்ச புராணம் பாடப்படுகிறது




குருவணக்கம், குருதட்சனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை விருந்தளிக்கக் காத்திருக்கும் சிறுமியர்




எமது இளங்கலைஞர்களுக்கான அன்பளிப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நுண்கலை நிலைய மாணவியருக்கு
அன்பளிப்பும் சான்றிதழும்



ஏடு தொடங்கப்படுமுன்னர் விஷேட பூஜையில்
மன்ற முக்கியஸ்த்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார நிலைய நூலகத்தில்



வில்லிசைக் கலைஞர் சுப்பு ஆறுமுகம், கௌரவிக்கப்படுகிறார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதான நீதவான்களாக நியமிக்கப்பட்ட மன்ற
அங்கத்தவர்களைப் பாராட்டும் விழா




மன்ற வருடாந்தப் பொதுக் கூட்டம் - 1995
பொருளாளரின் நிதி நிலை அறிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்ற அங்கத்தவர்களின்
குடும்ப ஒன்று கூடல் விருந்துபசாரம்



உரையாடல், உறவாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துக் குவை

## உணர்வு:-

அம்பு இன்றி வேட்டைக்குச் சென்ற வேடர்களையும், கத்தியின்றிப் போராடிய வீரர்களையும் எவரும் எங்கும் பார்த்திருக்கலாம். ஆனால், உணர்வு இன்றி வெற்றி பெற்ற மக்களை எங்கும் எவரும் காண இயலாது.

## பகுத்தறிவுள்ள மக்களுக்கு:-

எறும்பின் சுறுசுறுப்பும், எருதின் உழைப்பும், நரியின் தந்திரமும், நாயின் விசுவாசமும், கழுதையின் பொறுமையும், காகத்தின் கூட்டுறவும், புலியின் வீரமும், புறாவின் ஒழுக்கமும், சிங்கத்தின் நடையும், யானையின் அறிவும், மானின் வாழ்வும் மக்களுக்குத் தேவை.

## உயர்வு:-

உண்மை உயர்வை அளிக்கும்
பொய்மை உயர்வை அழிக்கும்

## பெருந்தன்மை:-

பொறாமையிலிருந்து அற்பத்தனம் தோன்றுகின்றது. சகிப்புத்தன்மையிலிருந்து பெருந்தன்மை தோன்றுகின்றது.

## அமைதி:-

சிறு செயல் படாடோபத்திலிருந்து விளைகிறது.
பெருஞ்செயல் அமைதியிலிருந்து விளைகிறது.

## தேவை:-

உன் தேவையைக் குறைத்துக்கொள்; இயலாவிட்டால், சரிசெய்துகொள். தேவை இல்லாததைத் தேடித்திரியாதே.

## வாழ்வில் வளம்:-

உழைப்பில் ஊக்கமும், உண்மையில் உறுதியும், தொழிலில் திறமையும், தொண்டில் நேர்மையும், சொல்லில் இனிமையும், துன்பத்தில் சகிப்பும் காணப்படுமானால், வாழ்வில் வளம் காணப்படும்.

## சிறப்பு அழியாது:-

செல்வம் நிறைந்த போது பெருமையும், குறைந்த போது சோர்வும் கொள்ளாதவனிடத்தில் செல்வம் அழிந்தாலும் சிறப்பு அழியாது.

## எளிது:-

சொல்லியபடி செய்வது கடினமன்று மிக எளிது! ஆனால், சொல்லும் போது யோசித்துச் சொல்லப் பழகிக்கொள்!

(முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் நூல்களிலிருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

**LANKA MEDICAL (IMPORTS) LTD.**

**27- 5/1, YORK ARCADE BULIDING**
**YORK ARCADE ROAD,**
**COLOMBO - 01**
**TELE: 448699 / 435801**
**FAX: 447749**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ச்சிப் பெருவழியில் மத்திய மாகாண இந்து மாமன்றம்

– சு. மு. துரைசாமி ஜே. பி. –

(உபதலைவர், மத்திய மாகாண இந்து மாமன்றம், கண்டி)

மத்திய மாகாண இந்து மாமன்றம், இந்த இலங்கைத் திருநாட்டிலே ஒரு முன்னோடி அமைப்பு என்றால் அது மிகையாகாது. எழில் கொஞ்சும் கண்டி மாநகரிலே அமையப்பெற்றுள்ள இந்த சபை, தனது வெள்ளி விழாவினைக் கொண்டாடும் தறுவாயில் வெளியிடப்படும் இச்சிறப்பு மலருக்கு எழுதும் பாக்கியம் கிட்டியதற்கு மனம் பூரிப்படைகின்றது.

காலம் கிழித்துப்போட்ட திகதிகளை சிரமப்பட்டு சேகரிக்கிறேன். 1963ஆம் ஆண்டு கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய தேர்த்திருவிழா சபையாக மிகக்குறுகிய வட்டத்தில் செயல்படத்தொடங்கியதுதான் இன்று ஆலமரமாய் விசுவரூபம் எடுத்துள்ள இந்த மாமன்றம். அதே ஆண்டில் பங்குனி உத்திரத் திருவிழாவிலும், கண்டி எசல பெரஹராவிலும் கலந்து கொண்டு மத ஒற்றுமைக்கு வித்திட்டது. பின் தொடர்ந்த வருடங்களில் மகா சிவராத்திரி விழா திருமுறை மகாநாடு மற்றும் எண்ணற்ற மத நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்து அதை திறம்பட நடத்தி எமது மாநகர மக்களிடையே சமய மறுமலர்ச்சியினை ஏற்படுத்தியது.

மேலும், நமது நாட்டின் தேசிய ஆன்மீகத் தலைவர்களுக்கு வரவேற்பு விருந்துபசாரங்கள் ஏற்பாடு செய்து இன மத நல்லுறவுகள் வளர வழி செய்தது.

தேர்த்திருவிழாவோடு எமது பணி முடிந்து விடக்கூடாது என்ற எண்ணத்தில் ஒரு சமுதாயக் கண்ணோட்டத்தோடும், திருவிழாவிற்காக கண்டி வாழ் அன்பர்களின் அன்பளிப்பு அபரிமிதமாக இருந்த காரணத்தாலும், தொடங்கப்பட்டது தான் இன்று வெள்ளி விழா காணும் இந்த "இந்து மாமன்றம்." பல இன்னல்களுக்கிடையே

"கூட்டுடன்று மேல்வரினும் கூடி எதிர்க்கும்
ஆற்றல் அதுவே படை"

என்ற வள்ளுவனின் படைச்செருக்குக்கு இலக்கணமாய் திரண்டு வந்த தமிழ்த்தாயின் – தவப்புதல்வர்கள், திரு அ. துரைசாமிபிள்ளை அவர்களின் தலைமையில் ஒன்று கூட 1970ஆம் ஆண்டு இந்து மாமன்றம் மலர்ந்தது.

விலாசம் இல்லாத மனிதனையும், விவேகமில்லாத மன்னனையும் நாட்டார் மதிக்கமாட்டார். அதனாலே ஒரு சிறந்த மன்னனின் விவேகத்தோடு ஒரு விலாசம் கொண்டுவர முற்பட்டதன் விளைவே இன்று முழு இலங்கைக்கும் முன்னோடியாக விளங்கும் இந்து கலாசார நிலையம். இன்றைய விலை வாசியில் யாரும் நம்பமுடியாத ஓர் எளிய கட்டணம் வசூலிப்பது எமது சேவை மனபான்மைக்கு ஓர் எடுத்துக் காட்டு. இந்தக் கட்டிடம் கட்டி முடிப்பதற்கு முன் எங்களுக்கு ஏற்பட்ட இடையூறுகள் சொல்லி மாளாது. இத்தருணத்தில் பல வர்த்தகர்கள், பொருளாதார உதவிகளையும் உளரீதியிலான ஆறுதல்களையும் வழங்கி எங்களை ஊக்குவித்த செயலை மறப்பதற்கில்லை. "எறும்பு போல வரிசையாக எதிலும் சேர்ந்து உழைக்கனும்" என்ற பட்டுக்கோட்டை கவிஞனின் வரிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாய் இன்று வளர்ந்து நிற்கும் இந்து மாமன்றம், நமது ஒற்றுமைக்கும், கூட்டுமுயற்சிக்கும் கட்டியம் கூறுகிறது.

இன்றைய வெள்ளி விழா, எமது சங்கத்திற்கு ஓர் மைல்கல். இதன் பொருட்டு திறக்கப்படவிருக்கும் "வெள்ளி விழா ஞாபகமண்டபம்" எதிர்கால சந்ததியினருக்கு ஓர் எடுத்துக்காட்டு. இன்று இக்கலாசார மண்டபத்தில் பரதம், கதகளி, பண்ணிசை, தாளவாத்தியம், கர்நாடக இசை, வீணை போன்ற நமது கலாசார சின்னங்கள் நடத்தப்படுவது நாம் அனைவரும் அறிந்ததே. அத்தோடு ஒரு சிறந்த நூலகத்தையும் நடத்தி கண்டி வாழ் தமிழர்களின் அறிவுப் பசிக்கு தீனி போட்டுக் கொண்டிருக்கிறது இந்து கலாசார நிலையம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழாவினைக் கொண்டாடும்
கண்டி மத்திய மாகாண இந்து மாமன்றத்திற்கு
எங்களது நல்வாழ்த்துக்கள்.

# ஜனதா என்டர்பிரைசஸ்

127 E, டீ. எஸ். சேனாநாயக்க வீதி,
கண்டி.
✆ 08- 32298

வெள்ளி விழாக் காணும்
கண்டி மத்திய மாகாண இந்து மாமன்ற
உத்தியோகஸ்தர்களுக்கும் நிர்வாகக் குழு அங்கத்தவர்களுக்கும்
எங்களது நல்வாழ்த்துக்கள்.

# பீபல்ஸ் ஹாட்வெயார்ஸ் அன் டிரக்டர் கம்பெனி

160, டீ. எஸ். சேனாநாயக்க வீதி,
கண்டி.
✆ 08- 32139



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விவேகானந்தர் அவர்கள் ஒரு சொற்பொழிவிலே "தன்னலமற்ற, சுத்தமான சில இளைஞர்களையும் யுவதிகளையும் எனக்குத் தாருங்கள், நான் இந்த உலகத்தை அசைத்துக் காட்டுகின்றேன் "என்றார். அப்படிப்பட்ட மகத்தான இளைஞர் சக்தி வீணாகிவிடாமல் ஒரு கடிவாளம் போட்டு, ஆன்மீகம் மற்றும் சமுதாயப் பணிக்கு திருப்பிவிட முற்பட்டதன் விளைவே எமது மன்றத்தின் சேய்ச் சங்கமாகிய கண்டி இந்து வாலிபர் சங்கம். பல ஆக்கபூர்வமான பணிகள் இந்து மாமன்ற அங்கத்தவர்களின் மேற்பார்வையில் நமது வாலிபர்களால் நடத்தி முடிக்கப்பட்டது எமக்குப் பெருமை அளிக்கிறது.

இன்று முழு இலங்கையும் இந்து மாமன்றத்தை வாழ்த்தும்போது அதன் ஆரம்பகாலம் முதல் இன்றுவரை அதன் அங்கமாக இருக்கும் என்போன்றோருக்கு,

"ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்ற குறள் எமக்காகவே எழுதப்பட்டதோ என்று தோன்றுகிறது.

"தலைவர்கள் வருவார்கள் போவார்கள், ஆனால் நாடு என்றைக்கும் இருக்கும்" என்றார் காந்தியடிகள். அதுபோல் இன்றைய உறுப்பினர்கள் இன்னும் சில பல ஆண்டுகளில் இல்லாதிருக்கலாம். ஆனால் இந்து மாமன்றம் அழிவில்லாமல் என்றென்றும் சமய, சமுதாயப்பணி செய்யும் என்பது திண்ணம். அதற்காக என்றென்றும் அந்த செல்வ விநாயகன் அருள் புரிவானாக.

நீ எதையும் எப்போதும் சாதிக்கக்கூடியவன், வல்லவன்.
நீ நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல்.
நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் நஞ்சு கூட வலிமையற்றதாகி விடும்.

– சுவாமி விவேகானந்தர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுத் தலைநகராம் கண்டி மாநகரில்
வெள்ளி விழாக் காணும் மாமன்றத்திற்கு
எமது நல்லாசிகளைத் தெரிவிப்பதில்
பெருமகிழ்வு அடைகின்றோம்.

# சங்கை டெக்ஸ்டைல்ஸ்

பிரபல மொத்த ஜவுளி விற்பனையாளர்கள்

பெஷன் சுப்பர் மார்கட்
133/12, கெய்சர் வீதி
கொழும்பு – 11
தொலைபேசி: 01 – 439506



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பினால் மனிதன் பூரணமடைகிறான்

– பழ. தங்கவேல் ஜே. பி. –
(முதல்வர், கல்வி கலாசார உபகுழு, மத்திய மாகாண இந்து மாமன்றம், கண்டி)

உலகில் தோன்றிய மனிதன் எத்துனைச் செல்வங்கள் பெற்றபோதும் எத்துனை அந்தஸ்து பெற்றபோதும் அவன் பரிபூரணமானவன் என்று கூறமுடியாது. ஒரு மனிதன் பரிபூரணமானவன் என்ற நிலை அவன் கல்வியில் சிறந்து விளங்கும் போதுதான் ஏற்படுகிறது. கல்வி அறிவோடு தொடர்புடைய அறிவு பெறும் போது மட்டுமே மனிதன் பூரணமடைகிறான். அறிவை அழகாகப் பெறுவதற்கு வாசிப்பு மிகவும் முக்கியமானதாகும். இந்த வாசிப்பு மனிதனை பூரணமாக மாற்றுகின்றது. முழு மனிதனாக ஆக்குகின்றது.

"கண்டதும் கற்க பண்டிதனாவான்" என்பது பழமொழி. கண்ணுக்குத் தெரிகின்ற, கண்களால் காணுகின்ற எல்லா விடயங்களையும் வாசித்து அறிவதனால் உயர்ந்த அந்தஸ்தைப் பெறலாம் என்பதை இப்பழமொழி வற்புறுத்துகின்றது. "எழுத வாசிக்க தெரியாதவன் எருதுக்குச் சமமானவன்" என்றும் கூறுவர். இவற்றிலிருந்து விளங்குவது வாசிப்பின் முக்கியத்துவம் பற்றியதாகும்.

காட்டிலே மரங்கள் இருக்கின்றன. பல மரங்கள் இருக்கின்றன. பல மரங்கள் பிரயோசனமுள்ளவை. மனிதர்களிலும் நல்ல மரங்கள் உண்டு என்று புலவர்கள் கூறியுள்ளார்கள். இது என்ன? மனிதர்களில் மரங்களா என்று வினவலாம்.

"சபை நடுவே நீட்டோலை வாசியா நின்றான்
குறிப்பறிய மாட்டாதவன் நல்மரம்"

என்பது தமிழ்ப்பாடல். ஒரு சபையினிலே கொடுக்கப்படுகின்ற ஒன்றை வாசிக்க தெரியாதவன் தான், குறிப்பறிந்து நடக்கத் தெரியாதவன் தான், நல்ல மரம் என்று கூறுவர். இதிலிருந்து வாசிக்க தெரிந்தவனுக்கே குறிப்பறிந்து நடக்க முடியும் என்பதையும், வாசிக்கத் தெரியாதவன் வெறும் மரத்துக்கு சமானம் என்பதையும், நாம் விளங்குகின்றோம். வாசிப்பு இல்லாதவன் காட்டு மரத்துக்கு சமானம். காட்டு மரம் பூரண மனிதனாக மாற முடியாது, எனவே வாசிப்புத்தான் மனிதனை பூரணமாக்குகின்றது என்று கொள்ள முடியும்.

நாளொன்றுக்கு ஒரு மணித்தியாலமாவது வாசிக்கும் பழக்கத்தை உடையவர்கள் என்றும் எதிலும் தோல்வி அடையாதவர்கள். காலையில் எழுந்ததும் வாசிக்கும் பழக்கம் பலபேருக்கு உண்டு.

"காலை எழுந்தவுடன் படிப்பு"

என்று பாடினார் பாரதியார். காலை நேரம் வாசிப்புக்கு உகந்த நேரம். மனித மனம் காலை வேளையில் பூப்போல மலர்ந்து பொலிவுற்று இருக்கின்றது. சஞ்சலம் எதுவுமின்றி தெளிந்த நீர் போன்று மனது இருக்கும் போது வாசிக்கும் அத்தனை அம்சங்களும் பசுமரத்தாணிபோல பதிந்து விடும். இவ்வாறு பதிந்த அறிவு மனிதனின் வாழ்நாள் முழுவதும் நன்கு நிலைக்கும். அது அவனை பூரணமானவனாக மாற்றிவிடும்.

வாசிப்பதற்கு நல்லனவற்றையே நாம் நாடவேண்டும். "நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்" என்பது ஆங்கிலப் பழமொழி. இங்கு வாசிக்கும் திறமை வற்புறுத்தப்படுகிறது. வாசிப்பதனால் மூளை பலம்பெறும், உலக அறிவு கூடும், சிந்தனை ஆற்றல் சிறப்புறும். எதையும் ஆற அமர யோசித்துச் செய்யும் பழக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

*
*
*
*
*
*
*

# LAXMAN SAMBA

## UKKULANKULAM

## VAVUNIYA.

✆ 024-2034, 2035



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும். செயல்திறமை உண்டாகும். அறிவு பெருகும்.

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி, மாந்தர்க்கு கற்றணைத்தூறும் அறிவு"

என்றார் திருவள்ளுவர். வள்ளுவப் பெருந்தகையும் இங்கு படிக்கும் பழக்கத்தையே வற்புறுத்தியுள்ளார்.

மத்திய மாகாண இந்து மாமன்றத்தில் ஓர் சிறந்த வாசிகசாலையை பூர்த்தி செய்துள்ளோம். இங்கே அறிவை வளர்க்கும் புத்தகங்கள் உள்ளன. ஆகவே மாணவர்கள், மாணவிகள் இந்த நல்ல நூல்களை நல்ல நண்பர்களாக்கி நல்ல வாசிப்பு பயிற்சிப் பெற்று பூரண மனிதர்களாக மாறமுயற்சிப்பீர்களாக!

கோபம் அன்பை அழிக்கிறது.

மாயை நண்பர்களை அகற்றுகின்றது.

செருக்கு அடக்கத்தை அழிக்கிறது.

பொறாமையோ அனைத்தையும் அழித்து விடுகிறது.

– ஓர் அறிஞன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மாகாண இந்து மாமன்றம்
நாடாத்தவிருக்கும் வெள்ளி விழா சிறப்புற
இதயபூர்வமான வாழ்த்துக்கள்

# டயானாஸ்

பிரபல மொத்த ஜவுளி விற்பனையாளர்கள்

அஸ்லாம் டிரேட் சென்டர்
188/4C, முதல் மாடி
கெய்சர் வீதி
கொழும்பு – 11
தொலைபேசி: 01 – 449735,341426

நற்பணி செய்து வெள்ளி விழாக் காணும்
உங்கள் கலையார்வம் மேலும் வளர்ச்சிகாண
எமது நல்வாழ்த்துக்கள்

# NISSHA TEX

M.A.KAREEM MARKET
135 2/A KEYZER STREET
COLOMBO -11
DIAL: 336462



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சி நிலம் கண்ட கண்டி மாநகரும் மத்திய மாகாண இந்து மாமன்றத்தின் ஆக்கப் பணியும் – செயல் நடவடிக்கைகளும்

கே. வி. இராமசாமி ஆசிரியர் - "அகிலம்"
(கல்வி கலாசார உபகுழு உறுப்பினர், மத்திய மாகாண இந்து மாமன்றம் – கண்டி)

ஓம்
வினையெல்லாம் தீர்க்கின்ற
விநாயகன் தாள் போற்றி!
நினைவெல்லாம் நிலைக்க வைத்த
நான் முகன் தாள் போற்றி!
ஞானப்பழம் கவர்ந்த ஆனை முகனே போற்றி!
ஞானியர்க்கும் உதவுகின்ற தூமணியே போற்றி!

இயற்கை எழில் கொஞ்சும் மலையகத் தலைநகர் கண்டிக்கு வரலாற்றுப் பெருமையுண்டு. மத்திய மாகாண இந்து மாமன்றம் இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு கண்டு வெள்ளி விழாக் கொண்டாடும் இவ்வேளையில் அதன் ஆக்கப்பணிகளையும், செயல் நடவடிக்கைகளையும் எண்ணிப்பார்க்கும் போது வியப்பே ஏற்படுகின்றது.

மன்றத்தின் தலைவர் திரு. அ. துரைசாமிபிள்ளை ஜே. பி., கௌரவ பொதுச் செயலாளர் க.செல்லமுத்து, கௌரவ பொதுப் பொருளாளர் வை. மாரிமுத்து மற்றும் நிர்வாகக் குழு அங்கத்தவர்கள் காட்டிய உற்சாகமும், உத்வேகமும் மத்திய மாகாணத்தில் மட்டுமல்ல தமிழ் கூறும் நல்லுலகெங்கும் சிறப்பாகப் பாராட்டப்பட்டு வருகின்றது. இது பெருமை தரத்தக்கதாகும்.

ஒரு சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள், நாகரீகம், கலாசாரத் தொடர்புகள் அச்சமுதாயத்தின் தனித்துவத்தைக் காக்கின்றன. உலகம் முழுவதும் இந்துக்கள் பரந்து வாழ்கின்றார்கள். ஏனையோருக்கு உதாரண புருஷர்களாகவும் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். "தமிழ்" இந்துக்களின் தனிப்பெரும் சொத்து கலாசாரம் என்றால் மிகையில்லை.

பௌத்தம் இலங்கையில் பரவுவதற்கு முன்னரே இந்து சமயம் வளர்ச்சி பெற்றிருந்தது. இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் சிறந்த சிவபக்தனாக விளங்கினான் என இராமாயணம் கூறுகின்றது. அவனது காலத்தில் நல்ல சிவாலயங்கள் கட்டப்பட்டதாக வரலாறுகள் உணர்த்துகின்றன.

அழகுத் தவம் வாங்கி அமைந்த மாநகர் கண்டியாகும். திரும்பிய பக்கமெல்லாம் வணக்க ஸ்தலங்களைக் காணலாம். ஸ்ரீ தலதா மாளிகை, பத்தினி தேவாலயம், ஸ்ரீ கதிரேசன் ஆலயம், ஸ்ரீ விஷ்ணு ஆலயம், கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம், புனித அந்தோனியார் ஆலயம், மீராமக்கம் பள்ளி வாசல், பேராதனை குறிஞ்சிக் குமரன் ஆலயம், அஸ்கிரிய, மல்வத்தை பௌத்த பீடங்கள் அவற்றுள் பிரசித்தமானவையாகும்.

அந்தானை மலைச்சிகரம் அழகுக்கு அழகு சேர்க்கும் பாங்கே அலாதியானது. தேயிலைத் தோட்டமும் ரம்மியமான காட்சியாகும். தென் கிழக்காசியாவிலேயே பிரசித்தி பெற்ற இயற்கைத் தாவரப் பூங்கா அதனை ஊடறுத்துச் சலசலத்தோடும் மகாவலிகங்கை, பேராதனைப் பல்கலைக்கழகம் யாவும் மனம் நிறைந்த காட்சிகளாகும்.

மகாவலி திசை திருப்புத்திட்டத்தின் கீழ் அமைந்த பொல்கொல்ல, விக்டோரியா நீர்த் தேக்கம், உக்குவளை நீர்ச்சுரங்கம், ரந்தனிகல, கொத்மலை ஓயா திட்டம் யாவும் மத்திய மாகாணத்திலேயே உள்ளன. இவையாவும் மின் உற்பத்திக்கும் நீர்ப் பாசனத்துக்கும் பயன்படுகின்றன. கண்டி தெப்பக் குளம் இயற்கை எழில் கொஞ்சும் மனோரம்மியம் வாய்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல அளப்பரிய சேவைகள் செய்து
தனது வெள்ளி விழாவினைக் காணும்
கண்டி மத்திய மாகாண இந்து மாமன்றத்தினரை
மனதார வாழ்த்துகிறோம்.

## ஈகள் எலக்ட்ரிக்கல்ஸ்

5, குமார வீதி,

கண்டி.

தொலைபேசி: 08 – 22913, 34573

With Best Compliments From:

## MARIS AND SON'S

**PAWN BROKERS & JEWELLERS**

**88/J (112), KOTUGODELLA STREET,**
**KANDY.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டியைக் கல்விக் கூடங்களும் அதிகமாக அணிசெய்து கொண்டிருக்கின்றன. கண்டி புனித அந்தோனியார் கல்லூரி, கண்டி திரித்துவக் கல்லூரி, கிங்ஸ்வூட் கல்லூரி, புனித சில்வெஸ்டர் கல்லூரி, பெண்கள் உயர்தரப் பாடசாலை, நல்லாயன் மகளிர் கல்லூரி என்பவை முக்கியமானவையாகும்.

இந்து கலாசார நிலைய கட்டிடம் எழுந்ததற்கு நிதி உதவி செய்த வர்த்தகப் பிரமுகர்கள், பிற மாநிலத்தைச் சேர்ந்த வர்த்தகப் பிரமுகர்கள், ஏனைய நல்லிதயம் படைத்த நன்கொடையாளர்கள் அனைவரும் நினைவு கூரத்தக்கவர்களாவர்.

கண்டியில் சாதனை படைத்துவரும் மத்திய மாகாண இந்து மாமன்றம் ஒரு இசை நடனக் கல்லூரியையும், தனித் தமிழ் இந்து மகா வித்தியாலயம் ஒன்றையும் உருவாக்கும் பணியில் சிரத்தை கொள்வது வரவேற்கத்தக்கது.

தாய்ச் சங்கமான இந்து மாமன்றத்தின் சேய்ச் சங்கமான இந்து வாலிபர் சங்கமும் பல்வேறு ஆக்கப்பணியில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. மேலும் சிறப்பான ஆக்கப்பணியில் அது ஈடுபடல் வரவேற்கத்தக்கது.

இலங்கையில் எழுந்த முதலாவது இந்து கலாசார நிலையம் இதுவேயாகும். தனது ஆக்கப்பணிகளையும், செயல் நடவடிக்கைகளையும் சிறப்பாகச் செய்து வருவதும் எமது இந்து கலாசார நிலையமேயாகும். 1963ம் ஆண்டு தேர்த்திருவிழா சபையாக ஆரம்பித்து 1970ல் மத்திய மாகாண இந்து மாமன்றமாக மலர்ந்து நாளுக்கு நாள் தேவைகளை அறிந்து தனது விரிவாக்கப்பணிகளை சிறப்பாகச் செய்து வருகிறது என்றால் மிகையாகாது. முன்னாள் இந்து கலாசார இராஜாங்க அமைச்சரும் தற்போதைய கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்கள், இலங்கையில் மட்டுமல்லாமல் தமிழகம் செல்லும் போதெல்லாம் மாமன்றத்தையும் இந்து கலாசார நிலையத்தையும் பற்றி எடுத்துக் கூற மறப்பதில்லை. அவர் எமது மன்றத்தின் வளர்ச்சியில் அதிக கரிசனை கொண்டுள்ளார். அவரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட இந்து கலாசார நூலகம் இப்பொழுது 400க்கு மேற்பட்ட சந்தாதாரர்களைக் கொண்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. வாசிப்பு மனிதனை முழு மனிதனாக்குகின்றது. அந்த அடிப்படையில் இந்து கலாசார நிலைய நூலகம் எதிர்காலத்தில் ஒரு பயனுள்ள நூலகமாக சிறந்து விளங்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. மத்திய மலைநாட்டில் ஒரு சிறந்த நூலகமாகத் திகழும். அதற்கான ஆக்கப்பணிகளை தொடர்ந்து மன்றம் சிறப்பாக செய்து கொடுக்க திடசங்கற்பம் பூண்டு இருக்கின்றது.

இதே போன்று பரதக்கலை, கதகளி, பண்ணிசை வகுப்பு, மிருதங்கம், சங்கீதம் போன்ற நடைபெற்றுவரும் வகுப்புக்களை மேலும் விரிவாகவும், சிறப்பாகவும் செயல்படத் திடசங்கற்பம் பூண்டு செயல்பட்டு வருகின்றது மத்திய மாகாண இந்து மாமன்றம் என்றால் மிகையாகாது. கலை நிகழ்ச்சிகளுக்கும், திருமண வைபவங்களுக்கும் ஏற்ற ஒரு சிறப்பான மண்டபமாகவும் மிளிர்கின்றது என்பதையும் பெருமையுடன் சொல்லித்தான் ஆகவேண்டும்.

கண்டித் திருநகரில் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் சமூக மேம்பாட்டிற்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து ஒரு "வெள்ளி விழா" மண்டபத்தையும் அமைத்து வெள்ளி விழாக் காணும் மத்திய மாகாண இந்து மாமன்றம் பொன் விழாவையும், வைர விழாவையும், நூற்றாண்டு விழாவையும் காணவேண்டுமென்பது எமது எதிர்பார்ப்பாகும்.

வாழ்க மத்திய மாகாண இந்து மாமன்றம்!
வளர்க அதன் தொண்டும், தமிழ்ப் பணியும்!!

> உலகத்தில் பொய் என்று எதுவுமே இல்லை. கனவுகூட ஒரு மெய்தான். ஆனால் கனவைவிட வாழ்க்கை மெய். உள்ளுலகத்தை விட வெளியிலிருக்கும் இந்த உலகம் மெய் என்கிறேன்.
>
> — ஜே. கே.—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மாகாண இந்து மாமன்றத்தின்
சிறந்த கலைப்பணியைப் பாராட்டுவதோடு
வெள்ளி விழா சிறப்புறவும்
எமது உளங்கனிந்த
நல்வாழ்த்துக்கள்.

# தீபம்ஸ்

பிரபல மொத்த ஜவுளி விற்பனையாளர்

**அஸ்லாம் டிரேட் சென்டர்**
**188 – 3A, கெய்சர் வீதி,**
**கொழும்பு – 11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையற்ற இருபத்தைந்து ஆண்டுகள்! இந்து மாமன்றத்தின் சேவையும், 21ம் நூற்றாண்டில் அதன் செயல் திட்டங்களும்

- வை. கனகராஜ் -
(நிர்வாக சபை உறுப்பினர், மத்திய மாகாண இந்து மாமன்றம், கண்டி.)

மத்திய மாகாண இந்து மாமன்றம் இருபத்து ஐந்து ஆண்டுகள் அளப்பெரும் பணி புரிந்து வெள்ளி விழாக் கொண்டாடுவது பெருமைப்படத்தக்கது.

கண்டி வாழ் இந்துப் பெருமக்கள் இந்து கலாசாரத்தை வளர்ப்பதற்கென இந்து கலாசார மண்டபம் ஒன்றினை அமைத்திருப்பது பாராட்டக்கூடியதொன்றாகும். கண்டி பேராதெனிய வீதியிலே இந்து கலாசார மண்டபம் கம்பீரமாகக் காட்சி அளிப்பதைக் காணலாம்.

ஆரம்பகாலத்தில் சுமார் முப்பது இலட்சம் ரூபா செலவிலே உருவான இந்து கலாசார மண்டபம் இலங்கையில் எழுந்த முதலாவது கலாசார மண்டபம் ஆகும். அன்று கோயில்களிலே வளர்க்கப்பட்ட கலைகள் இன்று கலாசார நிலையங்களிலே வளர்க்கப்படுகின்றன. இந்து கலாசார நிலையம் பரதம், கதகளி, மிருதங்கம், பண்ணிசை, கர்நாடக சங்கீதம் முதலிய வகுப்புகளை நடத்தி வருகின்றது. சமய வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. இது தவிர அவ்வப்போது கலை நிகழ்ச்சிகள், இலக்கிய விழாக்கள், வெளியீட்டு விழாக்கள் இன்னும் பல இசை நிகழ்ச்சிகளும் நாட்டிய நாடகங்களும் இங்கு இடம் பெற்று வருகின்றன. அத்துடன் ஆண்டு தோறும் நவராத்திரி விழாவும் நடைபெறுகிறது.

பல்வேறு சமூகத்திற்கு மத்தியில் பரஸ்பரம் ஒற்றுமையை வளர்ப்பதிலும் தேசிய ஒருமைப்பாட்டை பேணிக்காப்பதிலும் மத்திய மாகாண இந்து மாமன்றம் முன்னிற்கிறது.

கண்டி எசலபெரஹராவின் போது இடம்பெறும் ரந்தோலி பெரஹராவின் தொடக்க நாள் அன்று மத்திய மாகாண இந்து மாமன்றத்தின் பிரமுகர்கள் 1963ம் ஆண்டிலிருந்து ஸ்ரீ தலதா மாளிகாவின் வழிபாட்டில் கலந்து வந்திருக்கிறார்கள். அவ்வாறே பெரும்பான்மை இனத் தலைவர்களும் அன்று முதல் இன்று வரை பங்குனி உத்தரத் தேர்த் திருவிழாவில் கலந்து சிறப்பித்திருக்கின்றார்கள்.

பங்குனி உத்தரத் தேர்த் திருவிழா சபையே 1970ல் மத்திய மாகாண இந்து மாமன்றம் என பெயர் மாற்றம் பெற்றது.

கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத் திருப்பணி வேலைகளிலும் மத்திய மாகாண இந்து மாமன்றம் முக்கிய பங்கினை வகித்து வந்திருக்கின்றது.

மத்திய மாகாண இந்து மாமன்றம் தனது 25 ஆண்டு பூர்த்தி வெள்ளி விழாவின் போது புதிதாக ஒரு மேல் மண்டபத்தையும் கட்டி இருப்பதோடு அதற்கு "வெள்ளி விழா மண்டபம்" எனப் பெயர் சூட்ட இருப்பதும் இந்துப்பெருமக்களுக்கும் ஏனையோருக்கும் பெருமகிழ்ச்சி தரும் ஒரு செய்தியாகும்.

இப்படியான பல்வேறு சிறப்பம்சங்களுடன் 21ம் நூற்றாண்டில் கண்டியில் ஒரு இசை நடனக் கல்லூரியை அமைக்க வேண்டும். அதன் மூலம் சிறந்த நடன இசைக்கலைஞர்களை உருவாக்கி தேசிய ரீதியில் அவர்களை ஊக்குவித்து அனைத்து மக்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் அதனை உருவாக்க வேண்டும். சிறந்த பரதக் கலைஞர்களை உருவாக்குவதோடு தேசிய ரீதியில் அவர்களை கௌரவிக்கவும் ஏற்றவாறு செயல்பட வேண்டும். கண்டியில் ஒரு முழுமையான, நிறைவான தமிழ் மகா வித்தியாலயத்தை உருவாக்க தன்னாலியன்ற பங்களிப்பை செய்வதும் மத்திய மாகாண இந்து மாமன்றத்தின் எதிர்கால இலட்சியங்களில் ஒன்றாகும். மேலும் மன்றம் புலமைப் பரிசுத் திட்டமொன்றை உருவாக்கி ஆண்டு தோறும் குறைந்தது பத்து மலையக மாணவர்களுக்கு பல்கலைக்கழக பட்டப்படிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Our best wishes and greetings to you*
*on your silver jubilee celebrations.*

**PRIYA STORES**
GROCERIES & HOTEL SUPPLIERS
125 C, D. S. Senanayake Veediya,
KANDY.
✆ 08 - 23979, 23551

**TRINCO TRADERS**
GROCERIES & HOTEL SUPPLIERS
125, D. S. Senanayake Veediya,
KANDY.
✆ 08 - 23551

**PRIYA AGENCY**
CHINESE FOOD ITEMS & HOTEL SUPPLIERS
03, Cross Street,
KANDY.
✆ 08 - 23979

வெள்ளி விழாக் காணும்
கண்டி மத்திய மாகாண இந்து மாமன்றம்
தனது பொன் விழாவினையும் காண வேண்டுமென
வாழ்த்துகிறோம்.

உள்ளூர், வெளியூர் டயர்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

**எஸ். எம். கந்தசாமி அன் பிரதர்ஸ்**
42, டி. எஸ். சேனாநாயக்க வீதி,
கண்டி.
✆ 08 - 23177



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த நாடகக் கலைஞர்களை உருவாக்குவது, சமயத் தொண்டர்களை உருவாக்கி இந்து சமய வளர்ச்சிக்கு தன்னாலியன்ற பங்கினைச் செய்வது, தற்போது இயங்கிவரும் இந்து மாமன்ற வாசிகசாலையை மேலும் விரிவடையச் செய்து அனைவரும் வாசிப்பதன் மூலம் மக்களுக்கும், நாட்டுக்கும் ஏற்றவகையில் அவர்களை உருவாக்குவது. கலை, இயல், இசை, நாடகப் பிரியர்களை உருவாக்கி அவர்களை வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றச் செய்வது போன்ற பல்வேறு துறைகளிலும் மக்களுக்கு சேவை செய்ய மன்றம் திட்டமிட்டுள்ளது.

மற்றும் இந்தியாவிலிருந்து இலங்கை வரும் இந்துப் பெருமக்களான உல்லாசப் பிரயாணிகளுக்கு தங்குமிட வசதிகளைச் செய்து கொடுப்பது, மன்றத்திற்கென பேரூந்து ஒன்றினை வாங்கி யாத்திரிகர்கள் இலங்கை மாநகரின் அழகினைக் கண்டு களிக்கும் பிரயாண வசதிகளை செய்து கொடுப்பது போன்ற இப்படியான இன்னும் பல பல திட்டங்களை மனதிற் கொண்டு செயல் பட மன்றம் உத்தேசித்திருக்கின்றது என்பதையும் மகிழ்வுடன் குறிப்பிடுகின்றோம்.

இப்படியான பல செயல் திட்டங்களை மனதில் கொண்டிருக்கும் எமது மத்திய மாகாண இந்து மாமன்றமும், இந்து கலாசார நிலையமும் சேவையில் சிறப்புற்றோங்கவும், திட்டமிட்ட செயல் திட்டங்களால் உயரவும், மக்களுக்கும், நாட்டுக்கும் பெரும் பணியாற்றி தனது தன்னலமற்ற சிறந்த சேவையால் அனைவரும் பயனடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து உளமாற வாழ்த்துகின்றேன்.

நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரும் ஆவர்
நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே

– திருமந்திரம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:

N.PUWAN

(Video Grapher and Photographer)

# LORDS VIDEOTRONIC

Specialists in Video Filming & Still Photographer



**34, Kotugodella Veediya**
**KANDY**

✆ 072-22327

With Best Compliments From:

# MICROLINK

**COMPUTER SYSTEMS (PVT) LTD.**

**Importers of Computers & Accessories**
**Computer Education & Training**
**Repairs & Services**

Hill City Commercial Complex

**132/2/5, D.S.Senanayake Veediya,**
**Kandy.**
**Sri Lanka**

✆ 08- 24814 Fax: 08 - 32411



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் இரகசியம்

அன்பு காட்டு
ஆனால் அடிமையாகி விடாதே
இரக்கங்காட்டு
ஆனால் ஏமாந்து போகாதே
பணிவாய் இரு
ஆனால் கோழையாய் இராதே
கண்டிப்பாய் இரு
ஆனால் கஞ்சனாய் இராதே
வீரனாய் இரு
ஆனால் போக்கிரியாய் இராதே
சுறுசுறுப்பாய் இரு
ஆனால் பதட்டப்படாதே
தர்மம் செய்
ஆனால் ஆண்டியாகி விடாதே
பொருளைத் தேடு
ஆனால் பேராசைப்படாதே
உழைப்பை நம்பு
ஆனால் கடவுளை மறந்து விடாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Our best wishes and congratulations*
*on your 25th year silver jubilee celebrations.*

# ASOKA TEXTILE

**DEALERS IN QUALITY TEXTILES**

**No 68, Colombo Street,**
**KANDY.**

**08- 22597**

# KANDY TRACTOR & MOTOR SPARES

Dealers in Massey Ferguson, Ford, Kubota,
International Tractor Spares & Implements

**68/B, COLOMBO STREET**
**KANDY**
**DIAL: 22894**

# KANDY MOTOR SPARES

***62, SIDE STREET***
***HATTON***
***DIAL: 0512-691***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் முத்துக்கள் ....................

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்

"ஒருவனை ஆராய்ந்து உணராமல் நம்பிக்கை வைப்பதும், ஆராய்ந்து உணர்ந்து நம்பியவனிடம் ஐயம் கொள்வதும் பெருந்துன்பத்தைக் கொடுக்கும்."

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

"இனிய வார்த்தைகள் நிறைய இருக்கும்போது, அவைகளை ஒதுக்கி விட்டு, இழிவும் கடுமையும் நிறைந்த வார்த்தைகளைக் கூறுவது கனியிருக்கும்போது அதனை உண்ணாமல் காய்களைப் பறித்து தின்பதைப் போன்றதாகும்."

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

"எப்பொருளை, யார் யாரிடம் கேட்டாலும், அவர்கள் சொன்னதை அப்படியே நம்பி ஏற்றுக்கொள்ளாமல், அது பற்றிய உண்மை என்ன என்பதை ஆராய்ந்து உணர்வதே அறிவாகும்."

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்.

"தீமை செய்தவர்களை தண்டிக்க அவர்கள் வெட்கப்படும்படி அவர்களுக்கு நன்மையைச் செய்துவிட்டு அந்தத் தீமையையும் அதற்கு மாறாக செய்த நன்மையையும் மறந்து விடல் வேண்டும்."

கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்.

"உரிய கடமையைச் செய்வதில் சோர்வு காணாமல் எவனொருவன் முயற்சி மேற்கொள்கிறானோ; அந்தப் பெருமைக்கு மேலாகப் பிறிதொரு பெருமையில்லை."

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

"எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே எண்ண வேண்டும்! அந்த உயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

வெள்ளி விழாக் காணும்
இந்து மாமன்றத்தின் சேவையை
வாழ்த்தும் இவ்வேளையில்
மேலும் பல நல்ல சேவைகளைச் செய்ய வேண்டுமென
இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்

## ரட்னா ஜூவலர்ஸ் & பேங்கர்ஸ்

# RATNA JEWELLERS

## (BANKERS)

Makers of Genuine 22ct. Gold Jewelleries, Pawn Brokers

**No:88G (106) Kotugodella Veediya,**
**KANDY**
**08-22736**

---

With Best Compliments From:

# *MYTHILY JEWELLERY*

## PAWN BROKERS

MANUFACTURERS OF FINE GOLD MOD JEWELLERY,
AND DEALERS IN GIFT ITEMS, EVERSILVER WARES

**72 A, YATINUWARA VEEDIYA,**
**KANDY.**
**Dial: 08-34178**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எமக்கு மலர் கொத்து நல்கிய கரங்களுக்கு..............

ஆசிகள், வாழ்த்துக்கள், கட்டுரை, கவிதை
வழங்கியோர்,

விரும்பி
விளம்பரங்கள் தந்தோர்,

விளம்பரங்கள் சேகரித்து
உதவிய விழுமியோர்,

கணணி அச்சமைப்பும் அச்சுப்பதிவும் புரிந்த
லதா இம்ப்ரஸ் நிறுவனத்தார்,

தோன்றாத் துணையாய் நின்று
ஒத்துழைப்பு நல்கிய அன்புச் சகோதரர்கள்,

உள்ளன்புடன் உற்றசொல் கூறியோர்,
ஊக்கம் தந்தோர், ஆர்வம் காட்டியோர்,

அனைவருக்கும் எங்களது வாழ்த்துக்களுடன்
மனமார்ந்த

நன்றி குவித்து,
என்றும் நினைத்து,
போற்றி மகிழ்ந்து,
வணக்கம் செலுத்துகிறோம்.

**செ. நடராஜா**
(ஆசிரியர்)

**பொ. இராஜநாதன்** **கரு. வேலு. இராமசாமி**
(உதவி இணை ஆசிரியர்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழாக் காணும்
மத்திய மாகாண இந்து மாமன்றத்தின்
சேவை மேலும் வளர வேண்டுமென்று
வாழ்த்துகின்றோம்

# அர்ஜ்னாஸ் பிரைவேட் லிமிட்டட்

**ஏஜென்ட்:**

☆ பூகொட டெக்ஸ்டைல்ஸ் லங்கா லிமிட்டட்
☆ வெயாங்கொட டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் லிமிட்டட்

136/2, இரண்டாம் குறுக்குத் தெரு,
கொழும்பு – 11.
தொலைபேசி :01-448119



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## We Express Our Sincere Gratitude to:

* The distinguished personalities who sent us greetings, messages & articles.

* The generous advertisers.

* The executive committee members who volunteered to collect advertisements.

* Lathaa Impress for their computer type setting and offset printing of this Souvenir.

* Each and every one who encouraged, co-operated and contributed in many ways to make this Silver Jubilee Souvenir so attractive and informative.

*C. Nadarajah*
(Editor)

*P. Rajanathan* *K.V. Ramasamy*
(Joint Assistant Editors)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சித் தலை நகரில் மங்காப்புகழ் படைத்த

**மத்திய மாகாண இந்து மாமன்றத்தின்**

சேவை மேலும் வளர வேண்டுமென்று

வாழ்த்துகின்றோம்.

# டிசைன் டெக்ஸ்டைல்ஸ் சென்டர்

**153,** கெய்சர் வீதி,

கொழும்பு – 11

தொலைபேசி**: 01-323621**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்



| | | | |
|---|---|---|---|
| சங்கராய | சங்கராய | சங்கராய | மங்களம் |
| சங்கரீ | மனோகராய | சாஸ்வதாய | மங்களம் |
| குருவராய | மங்களம் | தத்தாத்ரேய | மங்களம் |
| கஜானனாய | மங்களம் | ஷ்டானனாய | மங்களம் |
| சாந்தசக்தி | மங்களம் | சர்வசக்தி | மங்களம் |
| சீதாராம | மங்களம் | ராதாகிருஷ்ண | மங்களம் |
| கர்த்தருக்கு | மங்களம் | புத்தருக்கு | மங்களம் |
| அல்லாவுக்கு | மங்களம் | அருகனுக்கு | மங்களம் |
| மங்களம் | மங்களம் | மங்களம் ஜய | மங்களம் |
| மங்களம் | மங்களம் | மங்களம் ஜய | மங்களம் |
| மங்களம் | மங்களம் | மங்களம் சுப | மங்களம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்று தோராடிவரும் குமரக் கடவுள்
கோயில் கொண்டிலங்கும்
கண்டி மாநகரில் கலைப்பணிக்கு அரும் பெரும்
சேவையாற்றி வெள்ளி விழாக் காணும்
மாமன்றத்திற்கு
எமது பாராட்டுக்கள்.

☆

# சன்கோ டெக்ஸ்டைல்ஸ்

பிரபல மொத்த ஜவுளி விற்பனையாளர்கள்

**133/17, கெய்சர் வீதி,**
**கொழும்பு – 11.**
தொலைபேசி: **01- 422671**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வெள்ளி விழா சிறப்புற எமது நல்லாசிகள்.*

# கெசியோ டெக்ஸ்டைல்ஸ்

பிரபல மொத்த ஜவுளி விற்பனையாளர்கள்

162/3, கெய்சர் வீதி
கொழும்பு – 11
✆ 448724, 328716

*சமயப் பணியும், கலைப்பணியும்*
*ஆற்றி வெள்ளி விழாக் காணப்போகும்*
*மாமன்றத்திற்கு இதயபூர்வமான நல்வாழ்த்துகள்.*

# செஞ்சுரி டெக்ஸ்டைல்ஸ்

பிரபல மொத்த ஜவுளி விற்பனையாளர்கள்

147, கெய்சர் வீதி,
கொழும்பு – 11
தொலைபேசி: 01 – 435890



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மாமன்றத்தின் நற்பணிகள்
வளர எமது நல்லாசிகள்

# நிலோவே டெக்ஸ்

பிரபல ஜவுளி விற்பனையாளர்கள்

# NILLOWAY TEX

DEALERS IN TEXTILES

CHANDRA SUPER MARKET
151/4 A, KEYZER STREET,
COLOMBO - 11.
☎ 01-336524

---

மாமன்றத்தின் கலைப்பணி மென்மேலும் வளர்ச்சிகாண
வாழ்த்துகின்றோம்.

# மினர்வாஸ் டெக்ஸ்டைல்ஸ்

பிரபல மொத்த ஜவுளி விற்பனையாளர்கள்

71A/3, கெய்சர் வீதி
கொழும்பு.-11.
✆ 01-449947




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# A. M. YOOSUFF

128, OSMAN ROAD

**SAINTHAMARUTHU**

**KALMUNAI**

## எமது நல்லாசிகள்



நலன் விரும்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# V.T.V. குறூப் கம்பனிகள்

தலைமை அலுவலகம்

## ஈஸ்வரன் பிரதர்ஸ்

267, செட்டியார் தெரு,

கொழும்பு – 11.

தொலைபேசி: 432599, 422744, 547608, 25071, 330859

TLX: 21275, 21866 FAX: 448720

CABLE: "TEDESIPRO"

## சுந்தரம்ஸ் லிமிட்டட்

341, பிரதான வீதி,

கொழும்பு – 11.

தொலைபேசி: 25179, 432599, 330203

## ஈஸ்வரன் பிரதர்ஸ் புட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்

149, 4ஆம் குறுக்குத் தெரு,

கொழும்பு – 11.

தொலைபேசி: 26239, 28805, 331188, 432599

## V.T.V. தெய்வநாயகம் பிள்ளை & கம்பனி (பிரைவேட்) லிமிட்டட்

37, 5ஆம் குறுக்குத் தெரு,

கொழும்பு – 11.

தொலைபேசி: 432599, 330694




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மலை நாடாம் கண்டியில்
சமய, சமுதாயப் பணிகள் ஆற்றி வரும்
இந்து மாமன்றமும் அதன் தலைவரும்,
அவருக்கு உறுதுணையாக நிற்கும் ஏனைய உத்தியோகஸ்தர்களும்
சேய்ச் சங்கமான கண்டி இந்து வாலிபர் சங்கமும் நீடூழி வாழ்ந்து
தங்கள் நற்பணிகளைத் தொடர பரம்பொருளை வேண்டி
எங்கள் இனிய நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறோம்

நாளைய நவீன வடிவமைப்புகள் இன்றே
தரமான சிறந்த 22KT தங்க நகைகளுக்கு
குளிரூட்டப்பட்ட காட்சியறையுடன் கண்டி லதா ஜுவலர்ஸ்

ලතා Latha Jewellers லதா

ජුවලර්ස් (AIR CONDITIONED) ஜுவலர்ஸ்

**27, Kotugodella Veediya**
**KANDY**
Tel: 08-32027

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# Saraswathi Stores

**90, COLOMBO STREET,**
**KANDY.**
**✆ 08-22104, 33027**
**Estd. 1947**

**&**

# PALAYAKATS

**76, Colombo Street,**
**KANDY.**

**✆ 08-23654, 32554**

Typeset, Design & Offset By Lathaa Impress, 302, D.S Senanayake Veediya, Kandy For Mr C.Nadarajah, Editor of The Silver Jubillee Souvenir - C.P.H.A., Residing At 104, Lady Gorden's Road, Kandy.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org